KALKI 21.4.2002
ரூ. 6.00

கல்கி

வைரவிழா ஆண்டு





கல்கி வைரவிழா

தமாஷ் ஹைகூ

கவிதைப் போட்டி!

முதல் பரிசு	– ரூ.	1000
இரண்டாம் பரிசு	– ரூ.	750
மூன்றாம் பரிசு	– ரூ.	500
ஆறுதல் பரிசு	– ரூ.	250

உங்க ஹைகூ கவிதையில் நையாண்டி இருக்கணும். நயம் இருக்கணும். 'நச்'சுனு முடியணும்.

அமரர் கல்கி நினைவுக் கவிதைப் போட்டிக்கான அடிப்படை அம்சம் இதுதான்.

மற்ற நிபந்தனைகள் வழக்கமானவை :

- உங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும்.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழி கடிதம் வேண்டும். அது இல்லாத கவிதைகள் பிரசுரிக்கப்பட மாட்டா.
- தேர்வாகாத கவிதைகளைத் திரும்பப் பெற போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- ஒருவரே எத்தனை கவிதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- பரிசுக்குரிய கவிதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- 'அமரர் கல்கி நினைவு கவிதைப் போட்டி – 2002' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 097.

- கவிதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : **ஜூன் 15.**
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கவிதையும் ஆகஸ்ட் 4, ஆண்டுமலரில் வெளியாகும்.

பரிசுகள், கல்கி வைரவிழா நிகழ்ச்சி மேடையில், ஆகஸ்ட் 4, 2002 அன்று வழங்கப்படும்.



கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

• **பி. சாய்குரு, மதுரை - 16.** *

? **பல கோடிகளை அள்ளும் ஆன் லைன் லாட்டரி தமிழகத்துக்குத் தேவைதானா...?**

! பத்திரிகைகள் நடத்தும் மினி லாட்டரி டைப் போட்டிகளுக்கு நீதிமன்றங்கள் மூலம் தடை வாங்கும் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள், இந்த மெகா பகல் கொள்ளையைக் கண்டு கொள்ளாமல் இருப்பது கேவலம்.

• **கே. கணேசன், சென்னை - 16.**

? **பாகிஸ்தானில் விரைவில் தேர்தல் நடத்தி, புதிய அரசு தேர்ந்தெடுக்கப்படும் என்று கூறிவந்த முஷாரஃப், இப்போது தாமே அதிபர் பதவியில் தொடர்வதற்காக வாக்கெடுப்பு நடத்தப் போவதாய் அறிவித்துள்ளது எதைக் காட்டுகிறது...?**

! சர்வாதிகாரிகள் நடத்தும் வழக்கமான 'ஜனநாயகம்' இதுதான்! 99 சதவிகிதம் வாக்குகள் பெற்று 'வெற்றி' பெறுவார். எதிர்ப்பவர்கள்தான் இருக்க மாட்டார்கள்! இந்த நாடகத்தை அமெரிக்கா ரசிப்பதுதான் வேதனை!

• **ஆர். சுப்பராவ், சென்னை _ 61.**

? **த.மா.கா. காங்கிரஸ் இணைப்பு பற்றி இறுதி முடிவு எடுக்க, ஜி.கே. வாசன் சோனியா காந்தியைச் சந்திக்கப் பயணம் புறப்படுகிறாராமே... 'பயணங்கள் முடிவதில்லை' என்று கூறலாமா?**

! அரசியலில் பேரங்கள் படிந்தால் பயணங்கள் முடியும்!

• **கே.வி. ராமன், சென்னை _ 73.**

? **பாலஸ்தீன பிரச்னைக்கு சமூக பேச்சு வார்த்தைகள் மூலம் இஸ்ரேலும் பாலஸ்தீனும் தீர்வு காண முடியாதுதானே?**

! இரண்டு பிரிவினருமே மத அடிப்படைவாதிகளாக இருக்கிறார்கள். பக்கவாதத்துக்குக் கூட மருந்து உண்டு; ஆனால் அடிப்படைவாத மனநோய் மகாக் கொடியது. ஜெருசலெம் இருவருக்குமே புனித இடமாக இருப்பதும் தீராத தலைவலியை உண்டுபண்ணுகிறது.

• **பி. சரவணன், சென்னை - 15.**

? **மது அருந்துவோருக்கு 'பார்' வசதி செய்து கொடுக்கும் தமிழக அரசு, புகை பிடித்தலுக்குத் தடை விதித்திருப்பது முரண்பாடாக உள்ளதே?**

! ஒரு தவறான காரியத்தை முன் வைத்து ஒரு நல்ல செயலை எடைபோடாதீர்கள்!

• **ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை.**

? **'குஜராத் கலவரம் நாட்டுக்கே அவமானம்' என்று வாஜ்பாய் கூறியுள்ளாரே...?**

! அதற்குப் பொறுப்பான மோடியைப் பதவி விலகச் செய்யாமல் வெறுமே வாய்ச் சொல்லோடு பிரதமர் நிறுத்திக் கொண்டது அதைவிடப் பெரிய அவமானம்!

• **உமரி பொ. கணேசன், மும்பை - 37.**

? **மனித உரிமை கமிஷன், தாமரைக்கனிக்கு காவல் துறை அதிகாரிகள் மூன்று லட்சம் ரூபாய் நஷ்டஈடு தரவேண்டும் என்று கூறியுள்ளதே...?**

! அரசு நஷ்ட ஈடு தரவேண்டும் என்று சொல்லியிருந்தால் சரியாக இருந்திருக்கும். அமையும் அரசைப் பொருத்துத்தான் போலீஸ் அதிகாரிகளின் செயல்பாடு இருக்கும். தாமரைக்கனிக்குப் பணம் கிடைக்கிறதோ அல்வா தரப்படுகிறதோ; வெற்றி கிடைத்து விட்டது.

தலால் ஆஸ்மிக்கு இத்தனை முக்கியத்துவம் அவசியமா?

• **பா.சு.மணிவண்ணன், திருப்பூர் - 4.** □

? **தலால் ஆஸ்மிக்கு நமது நாட்டு டி.வி., பத்திரிகைகள் இவ்வளவு முக்கியத்துவம் தருவது அவசியமா...?**

! மனித உரிமை Vs சட்ட சிக்

• எவர்க்ரீன் விவகாரம்!



• ராணுவநாயகம்!





• 'பிரசார' சாமர்த்தியம்

கல் என்ற சுவாரஸ்யம்; போதா தற்குக் காதல் என்கிற எவர் கிரீன் விவகாரம். இந்தக் கார ணங்கள் போதாதா! ஆஸ்மி காட்டிய வழியில் ராஷ்மிக் களும் ரேஷ்மாக்களும் வர ஆரம்பித்தால் அப்புறம் செய்தி மூன்றாம் பக்கத்துக்குப் போய் விடும்!



• வாய்ச்சொல்வீரம்!



• சந்திப்பும்...



• வெற்று உறுமல்!



• ...சிந்தனையும்!

● கே.எல். கந்தரூபி, தென்காசி.

? 'கருணாநிதியின் தவறான கருத்துக்களைக்கூட கல்கி ராஜேந்திரன் கண்டு கொள்வதில்லை' என்று சரவணா ஸ்டோர்ஸ் வார இதழ் (குறை குடம்) கூத்தாடியிருக்கிறதே?

! குறைகுடம் தளும்புகிறது; விட்டுத் தள்ளுங் கள்.

● பொன்விழி, அன்னூர்.

? நீங்க யாருக்காவது 'ஓ' போட்டது உண்டா...?

! ஓ! நியாயத்துக்கு.

● இரா. ஆறுமுகம், திருச்சி - 9.

? "எனக்கு ஜால்ரா அடிக்கத் தெரியாது; பொய் சொல்ல மாட்டேன்; பதவியில் இருக்க வேணும் என்பதற்காக கூழைக் கும்பிடு போடமாட்டேன்; அணி வீரர் களை ஒருங்கிணைத்து வேலை வாங்கு வேன்; இந்திய அணி வெற்றி பெற ஒரே மூச்சில் பாடுபடுவேன்... இவையெல்லாம் நம் கிரிக்கெட் போர்டுக்கு ஒத்துவராத விஷயங்கள்" என்று மொகிந்தர் அமர்நாத் கூறியிருப்பது பற்றி...?

! கிழட்டுப் புலி கோபத்துடன் உறுமுகிறது. ஆனால் இந்த உறுமல்கள் யாரையுமே பாதிக் கப்போவதில்லை.

● எம். சிவகுருநாதன், தஞ்சை.

? 'கோயபெல்ஸ் பிரசாரம் என்ற சொல் வழக்கை 'சன் டீ.வி. பாணி' என்று சொல் வது வழக்கமாகிவிட்டது' என முதல்வர் சட்டமன்றத்தில் பேசியதைக் கவனித்தீர் களா...?

! அப்படிச் சொல்வதுகூட கோயபெல்ஸ் பிரசாரம்தான்.

● பா.சு. மணிவண்ணன், திருப்பூர் - 4.

? காங் – த.மா.கா. இணைந்தால் ப.சிதம் பரத்துக்கு வருத்தமா? சந்தோஷமா?

! அது எதிர்காலத்தில் காங்கிரஸ், அ.தி.மு.க வுடன் கூட்டணி அமைக்கப் போகிறதா இல்லையா என்பதைப் பொருத்திருக்கிறது.

● எம்.டி.ரவிகாந்த், காஞ்சிபுரம்.

? ஒருவர் எம்.எல். ஏவாகவும் அதே சம யம் உள்ளாட்சி மன் றத்தில் பதவிவகிப் பவராகவும் இருப்பதைத் தடை செய்ய, அ.தி.மு.க. அரசு கொண்டு வரவுள்ள அரசியல் சட் டத்திருத்தம் குறித்து...?

! கருத்து சரியானது. ஆனால் இன்று உரு வாகும் சட்டம் முந்தாநாளிலிருந்து அமு லுக்கு வரும் என்பதுதான் பழிவாங்கும் உணர்ச்சியை உறுதி செய்கிறது.

● எஸ்.ஆர்.கௌசிக், பெங்களூர் - 11.

? அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்கு யேல் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட் டம் கொடுத்தபோது, அதை விரும்பாத சில பேராசிரியர்கள் அந்த விழாவில் தங்கள் முதுகைக் காண்பித்துக் கொண்டு நின்றன ராமே? அந்த மாதிரி தமிழ்நாட்டில் நிகழ விடுவார்களா?...

! டாக்டர் பட்டம் வாங்குபவர் ஆட்சித் தலைவர் என்றால், அடியாட்கள் மூலம் முதுகுத் தோலை உரித்துவிடுவார்கள்.

☐ ரூ. 100/- பரிசு பெறுபவர் :
பா.சு.மணிவண்ணன்,
184, தென்னம்பாளையம்,
திருப்பூர் - 641 604

* ரூ. 50/- பரிசு பெறுபவர் :
பி. சாய்குரு,
'வல்லடியம்மன் கோயில்'
36, புதுஜெயில் ரோடு,
மதுரை - 625 016.

— தராசு


உயிர் காத்த உதவி!

அன்று சனிக்கிழமை. காலை எட்டரை மணிக்குத் தாம்பரத்திலிருந்து கடற்கரை நோக்கிப் புறப்பட்ட அகலப் பாதை மின் சாரத் தொடர்வண்டி நெரிசலில் பிதுங்கியது. பெட்டியின் உள்ளே செல்ல முடியாத படி நிறைய இளைஞர்கள் ஏறும் வழியில் தொற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் மணிகண்டன்.

மின்வண்டி திரிசூலம் நிலையத்தில் நிற்கிறது. இறங்குபவர்களுக்கு வசதியாக, வழியில் நின்றவர்கள் இறங்குகிறார்கள். மணிகண்டனும் இறங்குகிறார். அங்கே இறங்கியவர்களைவிட ஏறியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே நிலைமை இன்னும் நெருக்கடியாகிறது. வண்டியைத் தவறவிட்டு விடக் கூடாதே என்ற பதற்றத்தோடு மெல்ல நகர்ந்த வண்டி வேகமெடுப்பதற்கு முன்பாக தாவி ஏறுகிறார் மணிகண்டன். இந்த முறை கைவைக்க துளி இடம் கூட கிடைக்காமல், கால் காற்று வெளியில் இறங்க, பிடி கம்பியைக் குறி வைத்த கை நழுவ, பக்கத்திலேயே இருந்த மீட்டர் கேஜ் ரயில் பாதையில் மல்லாந்தபடி விழுகிறார்.

அடுத்தகணம் பின் தலையில் இரும்புத் தண்டவாளம் 'மடார்!' என்று மோதியது மட்டும்தான் மணிகண்டனுக்கு நினைவில் இருந்தது.

தெற்கு ரயில்வே அலுவலகத்தில் சிவில் கிளர்க்காக பணிபுரிந்து வரும் ஷாந்தி அதே தினத்தன்று காலை ஒன்பது மணிக்கு தாம்பரத்திலிருந்து மீட்டர்கேஜ் மின்வண்டியில் ஏறுகிறார். கடந்த இருபது வருடங்களாக இதே வழியில் பணிக்குச் சென்று வரும் இவருக்கு ரயில் தோழிகள் ஏராளம். மனம் திறந்து வெளிப்படையாகப் பேசுவார், பிரச்னைகளை உரிமையோடு வந்து சொல்கிறவர்களுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளைச் சொல்லுவார் என்பது மட்டும்தான் இவரைப் பற்றி எல்லோருக்கும் தெரிந்திருந்த குணாதியங்கள். ஆனால் அதித துணிச்சலும், அதிரடி சுறுசுறுப்பும், வற்றாத மனிதநேயமும் கொண்டவர் என்பதை அன்று முதல்முறையாக நேரிலேயே கண்டு வியப்பும், பெருமிதமும் அடைந்தார்கள். தளர்ந்து போய்க் கிடந்த தங்கள் தன்னம்பிக்கையைப் புதுப்பித்துக் கொண்டார்கள்.



அப்படி என்ன செய்து விட்டார் ஷாந்தி. திரிசூலம் ரயில் நிலையத்தை எட்டும் முன்பே வண்டி நின்றுவிட... ''அய்யோ... ஒரு பையன்



• மணிகண்டன்

அடிபட்டுக் கிடக்கிறான்... ஆள் அவுட்... பாவம், யாரு பெத்த பிள்ளையோ..". இப்படி குரல்கள் பச்சாதாபமாய் வார்த்தைகளையும், நேரத்தையும் மென்று கொண்டிருக்க... பெட்டியை விட்டு இறங்கிய ஷாந்தி... அடிபட்டுக் கிடந்த பையனின் அருகில் போனார்.... அவர் நெருங்கும்போதே பலர் எச்சரிக்கிறார்கள். "அய்யய்யோ... பக்கத்துலே போகாதீங்க... போலீஸ் கேஸாயிடும்..." குரல் வந்த திசையை நோக்கி அவசரமாய் ஓர் அக்னிப் பார்வையை வீசிவிட்டு, அடிபட்டுக் கிடந்த



• டாக்டர் ரவீந்திரநாத்



• உஷா • ஷாந்தி

பையனின் தலையருகே குனிந்து பார்க்கிறார். பின் மண்டை கிழிந்து, சதை துருத்திக் கொண்டிருக்க அதிலிருந்து இரத்தம் கால்வாய் போல வழிந்தோடிக் கொண்டிருந்தது. பட்டென்று பையனின் கையைப் பிடித்து நாடித்துடிப்பைப் பார்க்க... மணிகண்டனின் உயிர்ப்பறவை ஊசலாடியபடி விட்டு விட்டு சிறகடித்துக் கொண்டிருந்தது. இனி ஒரு வினாடிகூட தாமதிக்கக் கூடாது என்று உள்மனம் உத்தரவிட, "யாராவது ஓடி வாங்க" என்று உருக்கமாய்க் கத்துகிறார். அவரது தொனியின் அர்த்தம் புரிந்து, மனிதத்தை மிச்சம் வைத்திருந்த இரண்டு, இளைஞர்களும் சில யுவதிகளும் ஓடி வருகிறார்கள். அவர்களின் உதவியோடு மணிகண்டனை ஆடாமல் அசையாமல், பூப்போல தூக்கி வந்து பெண்கள் பெட்டியில் கிடத்துகிறார். அவரது துணிச்சலைக் கண்ட ஓர் இளம்பெண் தமது துப்பட்டாவை உருவி நீட்டுகிறார். அதைக் கொண்டு மணிகண்டனின் இரத்த அருவியை நிறுத்தக் கட்டுப் போடுகிறார். இப்போது எல்லோரும் முன் வந்து அவருக்கு உதவுகிறார்கள். வண்டி புறப்படுகிறது.

அதே பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந்த ஒரு பெண்ணிடமிருந்து ஷாந்தி செல்ஃபோனை வாங்குகிறார். பூங்கா நகர் ரயில்நிலையத்தின் தொலைபேசி எண் அவர் அறிந்ததுதான். எண்களை அழுத்தி உடனடியாக அங்கொரு ஸ்ட்ரெட்ச்சர் ஏற்பாடு செய்து வைக்கும்படி சொல்கிறார். அடுத்து மயங்கிக் கிடக்கும் மணிகண்டனின் சட்டைப் பைக்குள் அவரது முகவரி கிடைக்குமா என்ற தவிப்போடு தேட, அதிர்ஷ்டவசமாக அவரது ரயில் சீஸன் டிக்கெட் அடையாள அட்டை கிடைக்கிறது. அதில் நம்பர் பத்து, பேராசிரியர் காலனி, தாம்பரம் என்ற விலாசமிருக்கிறது. மூளைக்குள் ஒரு மின்னல் பொறி. "இதே பேராசிரியர் காலனியில்தானே உயிர்த்தோழி உஷாவும் வசிக்கிறாள்" அடுத்தகணம் உஷா வீட்டுக்குத் தொடர்பு கொள்கிறார். மணிகண்டனின் பெற்றோரைக் கண்டுபிடித்து, சென்ட்ரல் அரசு பொதுமருத்துவமனைக்கு அழைத்து வரும்படி தோழியைப் பணிக்கிறார். வண்டி, அரசு பொதுமருத்துவமனை அருகேயுள்ள பூங்காநகர் ரயில் நிலையம் நோக்கி விரைந்தாலும், இடையிடையே எதிர்பட்ட ஒவ்வொரு நிலையத்திலும், நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டிய கட்டாயம். ஷாந்தியும், அவரோடு மணிகண்டனை அள்ளி வந்தவர்களும் தடக் தடக்கென்று இதயம் படபடக்க பயணித்துக் கொண்டிருந்தார்கள்.

உஷா, தமது கணவர் பாலுவையும் அழைத்துக்கொண்டு, தாம்பரம் பேராசிரியர் காலனியையே சலித்துக் கொண்டிருந்தார். ஆனால் ஷாந்தி குறிப்பிட்ட முகவரியைக் கண்டுபிடிப்பதே பெரிய சவாலாக இருந்தது. இறுதியில், இரண்டு மணி நேர போராட்டத்துக்கு பிறகு அந்தப் பகுதியின் நடமாடும் சலவை வண்டிக்காரர் ஒருவர் மூலம் கண்டுபிடித்ததும் சந்தோஷம், துக்கம்

இரண்டும் கலவையாய்த் தொண்டையை அடைக்க... மணிகண்டனின் பெற்றோரைச் சந்தித்து, தமது காரிலேயே அழைத்துக் கொண்டு, விரைந்திருக்கிறார் உஷா.

பூங்காநகர் ரயில்நிலையத்தில் வண்டி நின்றதும், இதயத்தில் அழுந்திக் கொண்டிருந்த பாரத்திலிருந்து பாதியை இறக்கி வைத்துவிட்ட பெருமூச்சோடு... தயாராக இருந்த ஸ்ட்ரெச்சரில் மணிகண்டனை லாகவமாகக் கிடத்தியதும், மருத்துவமனை ஊழியர்கள் அவரைத் தலைக்கு மேலே தூக்கிப் பிடித்தபடி சாலையில் நடக்கிறார்கள். ஷாந்தியுடன் ஒரு சிலர் பின் தொடர்ந்து நடக்கிறார்கள். அரசு மருத்துவமனைக்குள் நுழையும்போதே மரண பயம் பற்றிக் கொள்கிறது. போலீஸ் வந்து, சம்பிரதாயங்கள் முடிந்து, மணிகண்டனுக்குச் சிகிச்சை தொடங்குவதற்குள் ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிட்டால் இத்தனைக் கஷ்டப்பட்டு என்ன பயன்?

ஆனால் அங்கே நடந்தது என்ன? விபத்துப் பிரிவில் பணியில் இருந்த மருத்துவர்கள், அவசர அவசரமாகச் செயல்பட்டு, இரத்தப் போக்கை நிறுத்தி, அடுத்து பத்து நிமிடங்களுக்குள் எக்ஸ்ரே, ஸ்கேன் பரிசோதனைகளையும் முடித்து அவரை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்திருக்கிறார்கள்.


அதற்குள் ஷாந்தியின் தோழி மணிகண்டனின் தந்தையை அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்குள் நுழைந்திருக்கிறார். மகன் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டான் என்பதை டாக்டர்கள் அறிவித்ததும் கண்களில் ஆனந்தக் கண்ணீர். டாக்டர்களைப் பார்த்து அவர் கையெடுத்துக் கும்பிட்டிருக்கிறார். டாக்டர்கள், "நீங்கள் கும்பிட வேண்டியது எங்களை அல்ல. இந்தத் துணிச்சல்காரப் பெண்மணியைத் தான். இவர் மட்டும் சரியான நேரத்திற்கு உங்கள் மகனை இங்கே கொண்டு வந்திருக்காவிட்டால் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியாது. சிகிச்சை அளிக்கும் டாக்டரைவிட, சரியான தருணத்துக்குக் கொண்டு வந்து சேர்த்த ஷாந்திக்குத்தான் நீங்கள் நன்றி சொல்ல வேண்டும்" என்று சொல்ல, "என் கண் முன்னால் ஓர் உயிர் போராடிக் கொண்டிருக்கும்போது, அதைப் பார்த்துக் கொண்டு என் வழியில் செல்ல, நான் ஜடமல்ல" என்கிறார் சாந்தி.

"ஷாந்தி போன்ற பெண்கள், மட்டுமல்ல, அவரது தோழியைப் போன்றவர்கள், ஷாந்தி உதவி கோரியபோது துணிச்சலாக ஓடிவந்து மணிகண்டனைத் தூக்கியவர்கள், ரயிலில் செல்ஃபோன் கொடுத்து உதவிய பெண் போன்றவர்கள் இன்றைய தேவை. இவர்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து செயல்பட்டதால், கோல்டன் அவர் என்று சொல்லப்படும் மிகக் குறுகிய காலத்திற்குள் மணிகண்டனைக் கொண்டு வந்து காப்பாற்ற முடிந்தது. அதேபோல, அரசு மருத்துவமனை என்றால் லஞ்சம், லாவண்யம், உடனடியாக சிகிச்சை அளிக்க மாட்டார்கள் என்ற எண்ணமும், பொதுமக்களிடம் பெரிய தயக்கத்தை ஏற்படுத்துகிறது. அவசர கால அடிப்படையில் காலதாமதமற்ற சிகிச்சைகள் மறுக்கப்படுவதில்லை என்பதையும் பொதுமக்கள் உணர வேண்டும்" என்கிறார் சென்னை அரசு பொதுமருத்துவமனையின் தலைமை மருத்துவர் ரவீந்திரநாத்.

"புடைவை முழுக்க இரத்தத்தோடு, காலை பதினொரு மணிக்கு தாமதமாக அலுவலகத்தில் நுழைந்த என்னை எனது உயர் அதிகாரிகள் கோபிக்கவில்லை. மாறாக பாராட்டினார்கள். எனது அலுவலக சகாக்களும், கணவரும் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கைதான் எனது துணிச்சலின் ரகசியம்" என்கிறார் ஷாந்தி.

— ஜெயந்தன்

படங்கள்: வர்ஷா



"என் மனைவி ரொம்பவும் சென்சிடிவ்!"

"அப்படியா?"

"புது டீ.வி. சீரியல் பற்றி விளம்பரம் காட்டுறப்பவே அழுதுடுவா!"

— அம்பை தேவா

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

மூலமும் விளக்கவுரையும்

9 தொகுதிகள் - 4736 பக்கங்கள்

விலை ரூ.1000.00

சலுகை விலை ரூ.600

உடனே கிடைக்கும்; காத்திருக்கத் தேவையில்லை.

இரண்டே மாதங்களில் இரண்டு பதிப்புகள்

இந்நூலிற்கு உரைவகுத்த டாக்டர் இரா. வ. கமலக்கண்ணன் வித்துவான், பி.லிட், எம். ஏ (சிறப்புநிலை) பி.எட்,பி.எச்.டி, முதலிய பட்டங்களைப் பெற்றவர். பல ஆண்டுகளாக மேல்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகவும், பின்னர் தலைமையாசிரியராகவும் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். இவரது 'உலகப் பெருங்கவிஞர் கம்பர்' என்னும் நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொகுத்து வரும் பேரகராதிக்கு முதலாழ்வார் பாசுரங்கள் முந்நூறுக்கும் இவர் சொல்லடைவு அமைத்துக் கொடுத்துள்ளார். திருமலை திருப்பதி தேவஸ்தான மாத வெளியீடான சப்தகிரியில் இவரது வைணவ சமயம் பற்றிய கட்டுரைகள் பல இடம் பெற்று வருகின்றன. ஆலய தரிசனம் மாத இதழிலும் இவரது கட்டுரைகள் வெளிவருகின்றன.



இப்படியாக எழுத்தாற்றல் அனுபவமும், சென்னை வானொலியில் சமய இலக்கியப் பேருரைகள், பல வைணவ மாநாடுகளில சிறப்புரையாற்றிய அனுபவமும், 10 ஆண்டுகளாக இவர் சேகரித்து வைத்த ஆய்வுச் செய்திகளுடன், சம்பிரதாய நூல்களை வல்லார்வாய்க் கேட்டும் பெற்ற அனுபவ அறிவும் சேர்ந்து உருவானது தான் இந்த நாலாயிர திவ்வியப் பிரபந்த விளக்க உரை.

4000 பாடல்களுக்கும் விளக்கவுரை மற்றும் சிறப்புரையும் என்று அமைக்கப்பட்ட இந்நூலின் தொடக்கத்தில், உரையாசிரியர் எழுதிய "நூலினைப்பற்றிய செய்திகள்" என்னும் பகுதி விரிவான முன்னுரையாக நூலிற்கு முத்தாய்ப்பாய் அமைகிறது.

இந்நூலினைத் தபாலில் பெற : சலுகை விலையான ரூ.600 இல் ரூ.300 (M.O. / DD) மட்டும் அனுப்புக. M.O. / DD கிடைத்தவுடனே 9 தொகுதிகளும் V.P.P.யில் அனுப்பப்படும். மீதித் தொகை ரூ.300 + தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.50 சேர்த்து ரூ.350 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி 9 தொகுதிகளையும் உடனே பெற்றுக் கொள்ளலாம்.

நேரில் பெற : எமது அலுவலகத்தில் ரூ.600 மட்டும் செலுத்தி 9 தொகுதிகளையும் உடனே பெற்றுக் கொள்ளலாம். நேரம் : காலை 10 மணி முதல் மாலை 8 மணி வரை. ஞாயிறு விடுமுறை.

வர்த்தமானன் பதிப்பகம்

15, சரோஜினி தெரு, தியாகராயநகர், சென்னை -17. ✆ 4350561 (உஸ்மான் சாலையில் உள்ள கீதாஞ்சலி ஓட்டல் அருகில்)

முக்கிய குறிப்பு : Cheque (Local உள்பட) ஏற்கப்படமாட்டாது. DD யானது Varthamanan Pathippagam என்ற பெயரில் சென்னையில் மாற்றதக்கதாக இருக்க வேண்டும். M.O/DD அனுப்புவோருக்கு நூல்கள் தபாலில்தான் அனுப்பப்படும். நேரில் தரப்படமாட்டாது.

சிங்கம்

Punctuality is the virtue of the bored tragic incidence என்றார் நாவலாசிரியர் வெலின் வா. அந்தத் தர்மப்படி புலித் தலைவர் பிரபாகரனின் 'பத்திரிகையாளர் சந்திப்பு' இதோ அதோ என்று பத்தாம் தேதி காலையிலிருந்து இழுத்துக்கொண்டே போய் மாலையில்தான் நடைபெற்றது. கிளிநொச்சியிலிருந்து பத்து மைல் தள்ளி, பலமுறை மாற்றப்பட்ட ஒரு மர்மமான பிரதேசத்தில் நடந்தது கூட்டம். (ஸன் நியூஸ்காரர்களுக்குத் தனி அக்கறை. இரண்டரை மணி நேர நிகழ்ச்சியை முழுதும் ஒளிபரப்பினார்கள்.)

ஆகா ஓகோ என்று பேசப்பட்ட பிரபாகரன் அப்படியொன்றும் வீர தீர சாகசத் தலைவராகத் தெரியவில்லை. அசப்பில் நம்ம ஜூனியர் பாலையா மாதிரி இருக்கிறார். (ஆனால் ஜூனியரிடம் ஒரு ஸ்மார்ட்னஸ் உண்டு.) எப்போதேனும் ஒரு தினுசாகச் சிரிக்கிறார். 'துணை'க்கு வந்திருந்த ஆன்ட்டன் பாலசிங்கத்தின் முகத்தைப் பார்த்துப் பார்த்து, கலந்து கலந்து ஆலோசித்துப் பிரபாகரன் பதில்கள் கொடுத்ததைப் பார்த்தால் சிங்கத்தின் பிடியில்தான் புலி இருக்கிறதோ என்ற சந்தேகம் எழுந்தது.

இருபத்தைந்து ஆண்டுகளாக ஒரு சக்தி வாய்ந்த இலங்கைத் தலைவராக இருப்பவருக்குச் சிங்களமும் தெரியவில்லை. ஆங்கிலமும் புரியவில்லை. ஆன்ட்டன்தான் மெல்லிய குரலில் - ஆனால் மைக்கில் கேட்கும் அளவுக்கு - மொழி பெயர்த்தார். (சில சமயங்களில் தமிழ்க் கேள்விகளைக்கூட!) என்ன பதில் சொல்லலாமென்று பிரபாகரனுக்குக் குறிப்புத் தந்தார்.

இக்கட்டான கேள்விகள் எழுப்பப்பட்டபோது 'இன்னும் முடிவு செய்யவில்லை' என்பதே பிரபாகரனின் பதிலாக இருந்தது. ராஜீவ் காந்தியின் படுகொலையை 'Tragic incident' (துயரமான சம்பவம்) என்று சாதாரணமாகக் குறிப்பிட்டது நிகழ்ச்சியின் சிகரம்! ஆனால் ராஜீவ் காந்தி அனுப்பிய இந்திய சமாதானப் பாதுகாப்புப் படை 'அட்டூழியங்கள்' செய்ததாகக் குறிப்பிடத் தவறவில்லை.



அஜித்துடனும் விஜய்யுடனும் பிரசாந்த்துடனும் சிம்ரன் ஆடிப் பாடும் அட்டகாசக் காட்சிகளைத் திரட்டித் தொகுத்து, 'சிம்ரன் பாட்டு' என்று அதற்கு ஒரு தலைப்பும் தந்து ஸன் டீவியில் காட்டினார்கள் யாருடைய வயிற்றெரிச்சலையோ கொட்டிக் கொள்வதற்காக. 'பம்மல் கே. சம்பந்தத்'தில்





வினோத்

கமலுடன் ஆடும்போது காற்றிலே பறந்தன கட்டுப்பாடுகள். Life is a festival to the wise.

ஆனால் 'ப்ரியமானவளே'யில் 'ஜூன் ஜூலை மாதத்தில்' பாட்டு சற்று கவலை ஏற்படுத்தியது. காரணம், விஜய்யுடன் ஆடும் காட்சியில் சிம்ரனுக்குப் பிள்ளைத் தாய்ச்சிவேடம். செப்டம்பர் அக்டோபர் மாதத்தில் தாயாகக் கூடிய நிலை. அப்போது போய் இப்படிக் குதிக்கலாமோ?

புலியுடன் சந்திப்பு!

'ஆங்க்கென்' (கண்கள்) என்ற பெயரில் இதற்கு முன் இரண்டு படங்கள் வந்திருக்கிறதாம். இரண்டும் அபார வெற்றியாம். அதனால் அமிதாப் பச்சன் angry old man பாத்திரம் ஏற்றுள்ள படத்துக்கும் அதே பெயரை வைத்திருக்கிறார்களாம். B 4 U சேனலில் சில நிமிடம் காண முடிந்தது. நாகாலாந்து ஆதிவாசிப் பெண்களைப் போலத் தலையில் கொண்டை கொண்டையாகப் பறவை இறகுகளைச் செருகிக் கொண்ட குமரிகள், பச்சனைச் சூழ்ந்துகொண்டு இங்குமங்கும் தாவினார்கள். அமிதாப் அவர்களை எட்டிப் பிடிக்க எந்த முயற்சியும் செய்யவில்லை. வயதை உணர்ந்து அடக்கி வாசித்தார் போலும். After 50 your get-up and go has got-up and gone!

வழவழவென்று பளபளக்கும் சாலை; இரண்டு புறமும் உயர்ந்த மரங்கள், பக்கத்திலேயே சலசலத்து ஓடும் ஆறு; பச்சைப் பசேலென்று வயல்கள், வெகு தொலைவில் தெரியும் குன்றுகள்...

ஆகா! நிழலோரமாக ஜமுக்காளத்தை விரித்துப் போட்டுக்கொண்டு, வாக்மேனை இசைக்க விட்டு, பிக்னிக் கூடையைத் திறந்து, அலுமினியம் ஃபாயில் சுருளைப் பிரித்து,மிளகாய்ப் பொடி தடவிய இட்லியை விண்டு விண்டு வாயில் போட்டுக் கொண்டு பிளாஸ்டிக் மூடியைக் கழற்றிச் சூடான காப்பியைக் கப்புகளில் ஊற்றி உறிஞ்ச -

எத்தனை ரம்மியமான இடம் என்று கற்பனை செய்தால் ஏமாற்றம்தான் மிச்சம். டாஸ்மேனியாவின் சைக்கிள் பட்டாளமொன்று அதோ பறந்து வருகிறது! மாரதன் சைக்கிள் ரேஸாம்!

சே! கேவலம் ஒரு துவி சக்கர வாகனப் போட்டிக்காக இந்தத் தேவலோக ரஸ்தா! எரிச்சல் ஏற்படுகிறது. ஆனால் போட்டியில் கலந்துகொள்ளும் இளைஞர்களின் உற்சாகமான முகங்களைக் கண்டபோது, இப்படியும் ஓர் உலகம் இருக்க வேண்டியதுதான் என்ற ஆறுதல் உண்டாயிற்று.

Happiness is the periods between unhappiness!

ரிமோட்



• இஸ்ரேல் இராணுவ வீரர் வீசிய வெடிகுண்டு

புரையோடிய புண் ஆறுமா?

இது மார்ச் மாதம் பதின் மூன்றாம் தேதியன்று நடந்தது.

அன்றுதான் முதன்முறையாக ஐநா பந்தோபஸ்து சபை, பாலஸ்தீன நாடு என்று ஒன்று இருப்பதை ஒப்புக்கொண்டது. அதுவும், இதற்கான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்தது.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்குமிடையே கடந்த சுமார் இரண்டு ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் இன்டிஃபாடா - 2 (INTIFADA - 2) என்னும் போரை முடிவுக்குக் கொண்டு வந்து, அமைதி முயற்சிகளுக்குப் புதிய வேகம் கொடுப்பதற்கும், வன்முறையையும் பயங்கரவாதத்தையும் கண்டனம் செய்வதற்கும் இத் தீர்மானம் வகை செய்யுமென்று ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதர் கூறினார்.

மேற்காசியாவில் போர் என்பது புதிதல்ல! 1948ல் இஸ்ரேல் என்னும் நாடு பிரகடனப்படுத்தப்பட்டதிலிருந்தே அந்த நாட்டை எப்படியாவது முற்றிலும் அழித்துவிட வேண்டும் என்று அதைச் சுற்றியுள்ள அரபு நாடுகள் முயற்சி செய்தன.

யூதர்களின் வரலாறு பரிதாபகரமானது. கிறிஸ்தவ மதமும், இஸ்லாமும், யூத மதத்தையும் யூதர்களையும் பூண்டோடு அழித்துவிட முயற்சி செய்தன என்பது வரலாற்று உண்மை. மதச் சச்சரவுக்குள் இங்கே இறங்க வேண்டாம். அது பல நூற்றாண்டுகள் பழைமையானது.

1948லிருந்து மட்டும் சுருக்கமாகப் பார்த்தால் இஸ்ரேல் அமைவதற்கான தீர்மானத்தை ஐநா பொதுச்சபையில் இந்தியா அப்போதே வரவேற்று வாக்களித்தது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பிராந்தியத்திலிருந்து பல திசைகளுக்கும் யூதர்கள் வெளியேறியது, டியாஸ்போரா (Diaspora) எனப்படும். அவர்களில் சிலர் இந்தியாவுக்கும் அப்போதே வந்து குடியேறினார்கள். கொச்சியில் யூத ஆலயம் (Synagogue) இன்றும் உண்டு.

பல நாடுகளிலும் குடியேறிய யூதர்கள் (இந்தியாவில் தவிர) சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தார்கள். எனினும், எங்கெங்கோ சென்றுவிட்டாலும், தலைமுறை தலைமுறையாக அவர்களின் ஆழ்மனத்தில் மீண்டும் ஜெருசலம் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் இருந்துகொண்டேயிருந்தது. அந்த எண்ணத்துக்கும் இயக்கத்திற்கு ஜியானிஸம் (Zionism) என்று பெயர்.

ஹிட்லர் இழைத்த கொடுமைக்குப் பிராயச்சித்தமாகவோ என்னவோ, இரண்டாம் உலகப் போர் முடிந்தபோது, நேச நாடுகள்,





• ரமல்லா நகரில் அராபத்



• ஷாரன்

யூதர்களுக்கென்று ஓரிடத்தை ஒதுக்குவதென்று தீர்மானித்தன. பிரிட்டனின் வசமிருந்த பாலஸ்டைன் மான்டேட் (Palestine mandate) என்னும் நிலப்பரப்பு, ஜோர்டான் நாடு, இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரிவு எனப் பிரிக்கப்பட்டு ஐ.நா பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்டது.

உலகின் பலவிடங்களிலிருந்து யூதர்கள் இஸ்ரேலில் குடியேறத் துவங்கினார்கள்.

வறண்ட பாலைவனத்தை இஸ்ரேல் மக்கள் தம் திறமையாலும், விடா முயற்சியாலும் சோலைவனமாக்கினார்கள். விஞ்ஞானத்திலும், வியத்தகு விதத்தில் முன்னேறினார்கள்.

துரதிர்ஷ்டவசமாக, சுற்றியுள்ள அரபு நாடுகளில் மன்னராட்சியானாலும், ராணுவ ஆட்சியானாலும், அதிபர் முறையானாலும் சரி - அரபு மக்கள் மிகுந்த ஏழ்மையில்தான் வாழ்ந்தார்கள். உலகிற்கே எண்ணெய் சப்ளை செய்யும் அரபு நாடுகளில், ஆளும் வர்க்கத்தில் தகுந்த தலைமையில்லாது போனதால் முன்னேற்றம் இல்லை.

நூற்றாண்டுகள் பழமையான, அடிப்படையான மத வேறுபாடுகளை முன் வைத்து அரபு நாடுகள் இஸ்ரேலுக்கெதிரான கொள்கையையே கடைப்பிடித்தன.

தற்காப்புக்காக இஸ்ரேல், ராணுவ நாடாகவே மாற நேர்ந்தது. தன்னுடைய திறமை பற்றிய ஆணவமும் சேர்ந்து கொள்ளவே, 1968ல் அந்நாட்டு பிரதம மந்திரியாயிருந்த திருமதி. கோல்டா மயர் (Golda Meir) "பாலஸ்தீனியர்கள் என்பவர்களே கிடையாது" என்றார்.

தன் பாதுகாப்புக்காக என்று சொல்லி, இஸ்ரேல், ஜோர்டான் நதியின் மேற்குக் கரையில் (West Bank) புதிய குடியமைப்புகளை உருவாக்கி, காஸாவில் (Gaza) தனது நிலப்பரப்பை விரிவாக்கிக்கொண்டது.

பாலஸ்தீனத்தில் இதற்கு எதிர்ப்புக் கிளம்பியது.

இரு தரப்புக்கும் மிகுந்த உணர்ச்சிகரமான பிரச்னை, ஜெருசலமாகும். இரு தரப்புக்கும் மிகுந்த புனிதமுடைய இடங்கள் (அல் அக்ஸா மசூதி, யூதர்கள் தொழும் சுவர்) அங்கே உண்டு. கிறிஸ்தவர்களுக்கும் அது முக்கிய இடம்.

நெல்லைச் சிறப்பிதழ்!

காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, புதுவை நகரச் சிறப்பிதழ்களை அடுத்து நெல்லைச் சிறப்பிதழ் வெளிவர இருக்கிறது.

உங்கள் நகர் குறித்து நீங்கள் கண்ட, கேட்ட, படித்த எதைப் பற்றியும் எழுதுங்கள். நெல்லை நகரச் சிறப்பிதழின் சுவைக்குச் சுவை சேருங்கள்!



கடைசி தேதி: 13.5.02

உண்மையில், மூன்று தரப்பினரும் அந்தப் புராதன நகரத்தில் இன்னமும் வசித்து வருகிறார்கள்.

ஜெருசலம் எனது தலைநகர் என்று இஸ்ரேல் அடம் பிடித்தால், பாலஸ்தீனமும் இதுவே எனது தலைநகரென்று எதிர்வாதம் புரிவதால் மோதல்கள் தொடருகின்றன.

இரு தரப்பிலும் பேரிழப்புகள் நேர்ந்துவிட்டன; இன்னமும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பின்னணியில்தான் மார்ச் 13ம் தேதி ஐ.நா பந்தோபஸ்து சபைத் தீர்மானத்தைப் பார்க்க வேண்டும்.

இப் பிரச்னையில் அமெரிக்கா ஒரு 'யூ-டர்ன்' எடுத்திருக்கிறதே ஏன்?

1974ம் ஆண்டு பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபாத் முதன்முறையாக ஐ.நாவில் பேசினார். ஆனால் 1988ம் ஆண்டில் நியூயார்க் செல்ல, அராபாத்துக்கு அமெரிக்கா விசா வழங்க மறுத்துவிட்டது.

ஆனால், ஐ.நா அதிரடியாகத் தனது கூட்டத்தை ஜெனிவாவில் நடத்த முடிவு செய்தபடியால், அராபாத் அங்கு சென்று உரையாற்றினார்.

இப்போது 2002ல் நிலைமை மாறிவிட்டது. தனக்கு வந்தால் தெரியும் என்பதைப் போல, உலகில் பயங்கரவாதத்தை முடிப்பதற்குப் பெருமுயற்சி எடுத்துள்ளது அமெரிக்கா.

எவ்வளவு வலுவுள்ள நாடாயிருந்தாலும் தனித்து நிற்க முடியாதாகையால் அரபு நாடுகளில் (ஈராக் தவிர!) பெரும்பாலானவற்றைத் தன் பக்கமே வைத்துக் கொள்ளும் ஒரு முக்கிய நடவடிக்கையாக அமெரிக்கா தனது நிலையை மாற்றிக் கொண்டு அனைவரையும் ஆச்சரியப் படுத்தியுள்ளது.

இஸ்ரேலுடன் தொடர்ந்து ஒரு தலைப்பட்சமான நெருக்கமான உறவு இப்போதைய கால கட்டத்தில் அமெரிக்காவுக்குச் சிறிது சங்கடத்தை ஏற்படுத்தும். அதேசமயத்தில், அடிக்கடி வரம்பு மீறும் இஸ்ரேலைச் சிறிது 'தட்டி வைப்பதற்கும்' இது உதவும்.

பரம்பரைப் பகைமை உடனடியாகத் தீர்ந்து விடாது - இதுவும் ஒரு தொடரும் மெகா சீரியல்தான். ஆனால் 'ஒரு திருப்பம்' என்ற நம்பிக்கை துளிர்விடுகிறது.


இஸ்ரேல், தான் மேற்குக் கரையில் பிடித்து வைத்துள்ள இடங்களிலிருந்து பின் வாங்கினால், பாலஸ்தீனம் இப்போதைய பயங்கரவாதத்தை நிறுத்திக் கொண்டால், இரு தரப்பும், மூன்றாம் தரப்பு மேற்பார்வையுடன், பேச்சு நடத்த முடியும்.

மத அடிப்படையிலான அரசியல் என்பதால் மிக நுணுக்கமாகக் கையாள வேண்டிய விஷயம். படிப்படியாக இஸ்ரேல்- பாலஸ்தீன உறவு செம்மையடைந்தால் உலகில் இப்போதுள்ள மிக மோசமான, புரையோடிய புண்களில் ஒன்றாவது ஆறுவதற்கான வாய்ப்பு உருவாகும்.

இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய இரு தரப்புடனும் நமக்கு நல்ல உறவுகள் இருப்பதால், அங்கே சமாதானம் ஏற்பட்டால், நமக்கும் அந்தப் பயன், புல்லுக்கு மாங்கே பொசிவது போல் கிடைக்கலாம்!

ஆனால் இஸ்ரேல் அதிபர் ஷாரன், அராபத்தை ஒரு வழி பண்ணிவிடும் முடிவில் இருக்கிறாரே!

- தி. கண்ணன்





2002 ஏப்ரல் 21
சித்ரபானு சித்திரை 8
மலர் : 60
இதழ் : 38

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



விழித்துக் கொள்வாரா வாஜ்பாய்?


பொன்னையன் அணுகுண்டு போன்றதொரு குற்றச்சாட்டை சட்டமன்றத்தில் முன் வைத்துள்ளார் :

'சிமெண்ட் விலை நிர்ணயிப்பதில் ஊழல் செய்து, உற்பத்தியாளர்களும், அவர்களுக்கு உதவும் அரசியல் தலைவர்களும் ஆண்டுக்கு 1700 கோடி ரூபாய் வரை கொள்ளையடித்திருக்கிறார்கள். இந்தக் கொள்ளையில் ஆதாயமடைவோர் முக்கியமாக கருணாநிதி குடும்பத்தினர். வர்த்தக அமைச்சரான மாறன், தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, அயல்நாட்டிலிருந்து இறக்குமதியாகும் சிமெண்டின் விலையை உள்நாட்டு சிமெண்ட் விலையைக் காட்டிலும் அதிகரிக்கச் செய்துள்ளார்.

மேற்கண்ட விவரங்களைச் சட்டமன்றத்திலேயே முன் வைத்திருப்பதால், நிதியமைச்சர் உரிய ஆதாரங்களுடன்தான் பேசியிருப்பார் என்று நம்ப இடமிருக்கிறது.

இதே பிரச்னை, கடந்த தி.மு.க. ஆட்சியின்போது த.மா.கா.வினரால் எழுப்பப்பட்டு அடங்கிப்போனது.

இந்தக் குற்றச்சாட்டுகள் பொய்யானவை, அரசியல் காழ்ப்புணர்ச்சியால் புனைந்துரைக்கப்பட்டவை என்பதற்கு விளக்கங்களும் மறுப்புகளும் பதில் அறிக்கைகளும் எழுந்துள்ளன.



ஆனால் இவை போதாது. மக்களுக்கு யார் தரப்பில் நியாயம் உள்ளது என்று தெரிய வராது.

எனவே, பிரதமர் மாறனிடம் விளக்கம் கேட்டுப் பெறுவது மிகவும் அவசியமாகிறது.

அதன்பிறகு, "மாறனிடம் நான் பேசிவிட்டேன்; அவரிடம் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. அவர் தப்பு ஏதும் செய்யவில்லை" என்று பிரதமர் கூறவேண்டும்.


மாறாக, துளியளவு சந்தேகம் பிரதமருக்கு இருந்தாலும் மாறனின் ராஜினாமாவைக் கோருவதுடன், இந்தப் பிரச்னை குறித்து துரிதமாக ஆராய்ந்து கருத்து கூற அனைவரும் ஏற்கத்தக்க ஒரு நபரை நியமிக்க வேண்டும்.

மிக முக்கியமான வர்த்தக அமைச்சர் பதவி வகித்து, சர்வதேச அளவில் இயங்கிக் கொண்டிருப்பவர் மாறன். அவர் பேரில் விழக்கூடிய சிறு கரும்புள்ளிகூட நாட்டின் நற்பெயருக்கே கேடு விளைவிக்கும்.

தி.மு.க. - பா.ஜ.க. உறவுகள் மாநில அளவில் ஏற்கெனவே துண்டிக்கப்பட்டுவிட்டன. மத்திய அமைச்சரவையிலும் தி.மு.க. உறுப்பினர் குறித்து ஓர் ஊழல் பிரச்னை எழுமானால், கூட்டணியின் தார்மிக பலம் பெருத்த அடி வாங்கும். பிரதமர் தமது வழக்கமான மெத்தனத்தில் மூழ்கியிராமல், பொன்னையன் பேசியிருப்பது மாநில அரசுப் பிரச்னை என்ற தவறான முடிவில் ஒதுங்கியிராமல், உடனடியாக மாறனை அழைத்து விளக்கம் கேட்க வேண்டும்.

பிரதமர் விளக்கம் எதுவும் கேட்காமலே ராஜினாமா கோர வேண்டியது குஜராத் முதல்வர் நரேந்திர மோடியிடம்!

குஜராத் மக்களின் அதிருப்தி மட்டுமின்றி, எதிர்க்கட்சிகளின் கண்டனம், தேசிய மனித உரிமை கமிஷனின் சாட்டையடி அறிக்கை, என்று வரிசையாகக் குட்டு பெற்ற பிறகும்



துளிக்கூட சூடு சுரணையின்றி நடந்து கொண்டிருக்கிறது குஜராத் அரசு.

மேதா பட்கர் கலந்து கொண்ட கண்டனக் கூட்டத்தில் பஜ்ரங் தள் முரடர்கள் புகுந்து அவரைத்தாக்க, குஜராத் போலீஸ் மேலும் ஒரு முறை வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்திருக்கிறது.

பிரதமரோ வெகு சாவகாசமாக குஜராத் சென்று சுற்றிப் பார்த்துவிட்டுச் சூள் கொட்டிவிட்டுத் திரும்பிவிட்டார்!

'உலகத்தார் முன் எப்படி முகம் காட்டுவேன்?' எனப் புலம்பியவர், பின்னர் சிங்கப்பூர் சென்று, 'குஜராத்தில் நடந்தது கேவலம்தான் ; ஆனால், அதனால் அயல்நாட்டு முதலீடுகள் பாதிக்கப்படமாட்டா!' என்று சப்பைக்கட்டு கட்டிவிட்டு வந்திருக்கிறார்.

இந்தக் கேவலங்கள் போதாதென்று, குஜராத் முதல்வரின் ராஜினாமா கோரி, அனைத்து கட்சிகளும் நடத்தவிருந்த தர்ணாவிலிருந்து வாபஸ் பெறும்படி சமதா கட்சித் தலைமையிடம் பேரம் பேசியிருக்கிறது பா.ஜ.க.

பிரதமரும் பா.ஜ.க.வும் குஜராத் கொடுமைகளை மூடி மழுப்புவதும், கூட்டணி கட்சியினரை இவ்வாறு அமுக்குவதும், மோடியைக் காப்பாற்ற முயற்சி செய்வதும் மிகவும் அபாயமானவை. கூட்டணி கட்சியினர் தயங்காமல் வற்புறுத்தி, மோடியை வெளியேற்ற வழிகாண வேண்டும். இது விஷயமாக, தி.மு.க. தலைவர் எடுத்துள்ள நிலை ஏமாற்றம் அளிக்கிறது. 'குஜராத்தில் அமைதி திரும்புவதே முக்கியம்...' என்றுதான் அவர் கூறியிருக்கிறாரேயொழிய, சந்திரபாபு நாயுடு செய்துள்ளதுபோல் மோடியின் ராஜினாமாவை அவர் கோரவில்லை.

அரசின், காவல்துறையின் அலட்சியத்தாலும் பகிரங்க ஹிந்து சார்பு நிலையாலும் குஜராத்தில் வரலாறு காணாத கொடுமைகள் நிகழ்ந்துள்ளன. அதைக் கண்டிக்கும் நோக்கமாக, மோடியைப் பதவி விலகச் செய்ய முடியாவிட்டால், பிரதமரின் கௌரவத்துக்கு இழுக்காகிவிடும் ; பா.ஜ.க.வின் எதிர்காலமோ இருட்டாகிவிடும். ○



பாட்டும் உண்டு; பாடமும் உண்டு!

ராஜீவ்காந்தி படித்த, டேராடூனில் உள்ள டூன் ஸ்கூலிலிருந்து சுமார் 50 மாணவர்கள் சென்ற வாரம் சென்னைக்கு வந்து ஒரு கலக்கு கலக்கினார்கள். சேர்ந் திசைக் குழுவாக அமைத்துக்கொண்டு, பின்னால் கிடாரும், சிதாரும், வயலினும், தபேலாவும் ஒலிக்க, வெவ்வேறு ராகங் களில் வெறும் ஹிந்துஸ்தானி இசை சுவரங்களாகவே பாடியதோடு தொண்டு நிறுவனங்களுக்கு நிதி திரட்டித் தந்து அசத்திவிட்டார்கள். வெள்ளை வெளேர் என்று டிடெர்ஜன்ட் வெளுப்பில் ஒரே மாதிரி பைஜாமா - குர்த்தா அணிந்து, அத்தனை இளைஞர்களும் மேடையில் தோன்றியபோது, வெளிச்சமே வெட்கப் பட்டிருக்கும். அப்படி ஒரு பளீர்!

இசைக்குழுவை நடத்தியவர் ஒரு சர் தார்ஜி பெயர்: குருசரண்சிங். "நானும் ஒரு முன்னாள் டூன் ஸ்கூல் மாணவர் தான்!" என்றார் ரொம்பப் பெருமையாக. அவர்தான் பள்ளியின் இசை ஆசிரி யராம். படிப்பு மட்டும்தான் இங்கே உசத்தி என்று நினைத்தால் தவறு. ஹிந் துஸ்தானி சங்கீதமும் உண்டாம். "அது தான் எங்கள் பள்ளியின் தனி முத்திரை!" என்று குருசரண்சிங் சொன்னபோது, 'ஆகா' போடத் தோன்றியது. நிகழ்ச்சிக்கு முன்னால், பள்ளி பற்றி ஒரு பத்து நிமிட வீடியோ படம் பார்த்தபோது பொறாமையாக இருந்தது. ஒழுங்கு, கட்டுப்பாடு எல்லாம் இருந்தாலும், மாணவர்கள் தான் எத்தனை ஜாலியாக இருக்கிறார்கள்! 68 ஏக்கர் பரப்பில் எல்லாமே பிரம் மாண்ட கட்டடங்கள், ஹாஸ் டல்கள், விளையாட்டு மைதானங்கள்!

டி.ஐ குருப் தலைவர் ஏ. வெள்ளையன், அவ ரும் ஒரு முன்னாள் டூன் ஸ்கூல் மாணவர்தான் என்று சொன்னார். அவ ரைப் போல சென்னை யில் சில முன்னாள் டூன் ஸ்கூல் பிரபலங்கள் இருக்கிறார்களாம்.

மாணவர்களே பாட்டுப்பாடி அசத்தி னால், மேஸ்ட்ரோ சிவமணி டிரம்ஸில் அசத்த மாட்டாரா? விளாசிவிட்டார். இரண்டு கைகளால்தான் வாசிக்கிறாரா, இல்லை பத்துப் பன்னிரண்டு எக்ஸ்ட்ரா கைகளால் வாசிக்கிறாரா என்று பிர மிப்பை உண்டாக்குகிற வாசிப்பு. அவரது 45 நிமிட வாசிப்பில் கேரளத்துச் செண்டை, பஞ்சாபின் பங்க்ரா, குஜராத் தின் கர்பா, தமிழ்நாட்டின் தவில் என்று எல்லாமே முழங்கின.

உத்தராஞ்சல் மாநில, டூன் ஸ்கூல் மெனக்கெட்டுச் சென்னைக்கு ஏன் வர வேண்டும்?

"சென்னையிலுள்ள மாணவர்களுக்குத் தெரிய வேண்டாமா, இப்படி ஒரு பள்ளி டேராடூனில் இருக்கிறது என்று? நம் தமிழ் நாட்டு மாணவர்களும் அங்கே போய்ப் படித்துவிட்டு, பெயரும் புகழும் பெற வேண்டாமா? நம் தமிழ்நாட்டுக் கலா சாரமும் அங்கே கொஞ்சம் போகட் டுமே?" என்றார் நிகழ்ச்சி அமைப்பாளர் களில் ஒருவரான சந்திரசேகரன்.

"ஒரு பிரதமரைத் தந்த பள்ளி. இரண்டு முதலமைச்சர்களைத் தந்த பள்ளி!" என்றார் வெள்ளையன், பெருமை யாக.

- சாருகேசி

புகைப்படம்: ஃபோகல் நாகராஜ்



"உஷ் அப்பாடா! ஃபேனைப் போடு!"

காஞ்சிபுரத்திலுள்ள காமகோடி பீட சங்கர மடத்துக்கு ரொம்ப பக்கத்திலேயே ஒரு மசூதி இருக்கிறது. ஒரு முறை சங்கர மடத்துக்கு வந்த சில உயர் அதிகாரிகள் காலஞ்சென்ற காஞ்சி பெரியவரிடம் "மசூதியை வேறு இடத்துக்கு மாற்றி விடலாமா?" என்று கேட்டார்கள். அதற்கு பெரியவர் சொன்னார்: "வேண்டாம். அவர்களுடைய காலை தொழுகை ஒலி கேட்டுத்தான் நான் கண் விழித்து என் நித்ய அனுஷ்டானங்களை ஆரம்பிக்கிறேன். அதனால் மசூதி அங்கேயே இருக்கட்டும்!"

8.1.1994 அன்று பெரியவர் இறைவனடி சேர்ந்தபோது அந்த மசூதியின் இமாம் தலைமையில் நூறு முஸ்லிம்கள் வந்து அவரது உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினார்கள். அதைப் பாராட்டும் விதத்தில் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மசூதிக்கு ஒரு கூடை ஆப்பிள்கள் அனுப்பி வைத்தார். மசூதியின் உதவி இமாம் சையத் ஷம்ஷுதீன் கூறுவது: "இதுவரை எங்களுக்குள் வெறுப்பு முளை காட்டியதில்லை; இனி புதிதாக முளைவிடப்போவதுமில்லை!"

ஆதாரம்: **'வீக்'**

— அனிதா ராமச்சந்திரன்

பாட்டு, பரதம், யோகா போன்ற கலைகளுக்குப் பள்ளிகள் இருப்பது போல, ஜப்பானில் 'இகபானா' எனப்படும் மலர் அலங்கார கலைக்காகப் பிரத்யேகமாக 'ஸோகெட்சு' என்ற பள்ளியே இயங்குகிறது. அந்த அளவுக்கு ஜப்பானியர்கள் பூக்களை விரும்புகிறார்கள்.

— ஆர். லலிதா



துணி தைக்கும்போது ஊசி செல்கிற பக்கம் தான் நூலும் செல்லும். அதைப் போல நம் எண்ணம் செல்கிற பக்கம்தான் நம் செயலும் செல்லும். எண்ணம் தெளிவாகவும் நேர்மையாகவும் இருந்தால் நம் செயல்களும் நேர்மையாக அமையும்.

ஆதாரம்: சான்றோர் உரை — வானொலி

— ஸ்ரீரங்கம் பி.ஆர்.பார்த்தசாரதி

பொதுக்கூட்டத்திற்கு கட்சித் தலைவர் குறித்த நேரத்தில் செல்லக் கூடாது. நடைபெறும்போது திடீரென்று மேடையில் ஏற வேண்டும். மேடையை வண்ண விளக்கு







களால் அலங்கரிக்க வேண்டும். மாலைப் பொழுதுதான் கூட்டம் நடத்த உகந்த நேரம். தொழிலாளர்கள் களைத்துப் போயிருப்பார்கள் என்பதால் பொய்யைச் சொல்லி நம்ப வைப்பது சுலபம்.

– சொன்னவர், ஹிட்லர்
தகவல்: ஏ.கே. நாசர்

மின் விசிறியை உருவாக்கியவர் ஸ்குவலர் ஸ்காட்ஸ் வீலா என்னும் அமெரிக்கர். **1882**ஆம் வருடம் மின் விசிறியைக் கண்டு பிடித்தார்.

– பா. குணா

ஒரு சிறுவன் தன் தந்தையிடம், ''அப்பா புத்திசாலியா அல்லது குழந்தை புத்திசாலியா?'' என்று கேட்டான்.

''அப்பாதான் புத்திசாலி'' என்றார் தந்தை.

''பூமிக்கு ஈர்க்கும் சக்தி இருக்கிறதென்று கண்டு பிடித்தவர் யார்?'' என்றான் சிறுவன்.

''இது தெரியாதா? சர் ஐசக் நியூட்டன்'' என்றார் தந்தை.

''அப்பாதான் புத்திசாலி என்றால் நியூட்டனின் தந்தை ஏன் புவிஈர்ப்புச் சக்தியைக் கண்டுபிடிக்கவில்லை?'' என்று வினாவினான் சிறுவன்.

ஆதாரம்: பட்டிமன்ற நகைச்சுவை
தகவல்: இராம. பார்த்திபன்

''வக்கற்றவன் வாத்தியார் வேலைக்கும், போக்கற்றவன் போலீஸ் வேலைக்கும் தான் போவான்'' என்பது கிராமங்களில் வழங்கி வரும் பழமொழி. இதற்கு ஒரு தமிழாசிரியர் தந்த விளக்கம்:

''வாக்கு கற்றவன் – அதாவது நல்ல சொல்லாற்றலைக் கற்றவன் ஆசிரியர் வேலைக்கும், போக்கு கற்றவன் – அதாவது உலக நடப்பைக் கற்றுப் புரிந்து கொண்டவன் போலீஸ் வேலைக்கும் போகலாம் என்றுதான் அப்பழமொழி இருந்திருக்க வேண்டும். காலப்போக்கில் அது திரிந்து இப்படி விபரீதப் பொருளைத் தந்து நிற்கிறது!''

– கிரிஜா மணாளன்

ஐக்கிய நாடுகள் சபை தொடங்கி 57 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் ஐ.நா. பொதுச் சபை கூடி ஒரே ஒருவருடைய மரணத்துக்கு மட்டுமே இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அத்தகைய பெருமைக்குரியவர் மகாத்மா காந்தி.

– வெ. முத்துக்கிருஷ்ணன்

கோடீஸ்வரன் ஒருவன் ராமகிருஷ்ண பரமஹம்சரைத் தேடி வந்தான். ''அய்யா உங்களைப் போல துறவி உண்டா... ஆண்டவனுக்காக உலக இன்பத்தையே துறந்து விட்டீர்களே..'' என்றான்.

அப்போது பரமஹம்சர், ''நீ என்னைவிட பெரும் துறவியப்பா... உலக இன்பத்துக்காக பகவானையே துறந்து விட்டாயே...'' என்றார்.

– மன்னை ஜீ. நீலா

மின்சாரத் துறையில் மிக முக்கியமான சாதனங்கள் மூன்று.

டைனமோ, டிரான்ஸ்பார்மர், டி.சி. மோட்டார்.

இந்த மூன்றையும் 1831ஆம் ஆண்டு ஒருவரே கண்டுபிடித்தார்– அவர்தான் மைக்கேல் ஃபாரடே.

– ஐசுவர்யா

'என் சமையலறையில்
நீ
உப்புமில்லை
சர்க்கரையுமில்லை.
அதனை
அள்ளிப் போடும்
விரல்கள்.'
படித்த நந்தினி சிரித்தாள்.

"**கா**ப்பி... காப்பி... டிகாக்ஷன் காப்பி."
"காப்பி இல்லேம்மா. ப்ரூ. உண்மைதான்." கபிலனுக்கு நன்றி.
சங்கரனும் சிரித்தான்.
சிறிது மௌனம்.
சங்கரன் சீண்டினான்.
"நந்தினியும் பேச முடியாத தருணங்கள் உள்ளனவா?"
"உள்ளன, என் பிரிய கவிஞனே!"
நாடக பாணியில் சொன்னாள்.
"என்ன நந்து?"
"அப்பா வரச் சொன்னாரே?"
சங்கரன் முகம் மாறினான்.
"மாமா எதுக்கு வரச் சொல்வார். எனக்குத் தெரியும்."
நந்தினி அவன் கண்களுக்குள் பார்த்தாள்.
"என்ன அப்படிப் பார்க்குறே?"
"நான் சொல்லட்டுமா?"
தலையசைத்தாள்.
"கவிதை இருக்கும்."
முகம் மாறினான்.
"அப்ப நான்?"
"கவிதையின் மறு பெயர்
நந்தினி."
தோளில் செல்ல
மாய்த் தட்டினாள்.
"இந்த பம்மாத்து
வேலையெல்லாம்
என்கிட்டே
வேணாம். பீ

மதுமிதா



மயிலிறகு அம்புகள்

சீரியஸ் சங்கர்."
முகம் மாறினாள்.
"சொல்லு."
"தனைய மழை
நடக்க புல் வெளி
நினைக்க நீ
சாப்பிட...?"
அவள் கண்களில் கோபம் படர்ந்தது.
"நான் தமிழ் இலக்கியா."
நந்தினி சிரித்தாள்.

ஆர்ப்பாட்டமாய் வரவேற்றார்.
"வாய்யா மாப்ளே. என்ன இந்தப் பக்கம் வரவே மாட்டேங்குறே?"
சங்கரன் மெலிதாய்ச் சிரித்தான்.
"தனம் எப்படி இருக்கா?"
"... தங்கச்சிக்கு என்ன குறைச்சல்?"
அப்பா மேலும் சிரித்தார்.
உள்ளே பார்த்துக் கூப்பிட்டார்.
"நந்து, சங்கரன் வந்திருக்கான்."
ஈரக் கையைத் துடைத்தவாறு நந்தினி வந்தாள்.
அவனைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.
கோபம்.
"வரச் சொன்னீங்களாமே?"
"ஆமாம். போன வாரம் சொன்னேன். சாமி அண்ட் சாமில எனக்குத் தெரிஞ்ச ஆள் இருக்கான். அக்கௌண்ட்ஸ் பார்த்துக்க ஆள் வேணுமாம். ஈஸ்வரன் கோயில் பக்கத்துலே...!"
சங்கரன் தலை குனிந்திருந்தான்.
"என்ன சங்கரன்?"
"என்னை மன்னிச்சிடுங்க மாமா. எனக்கு ஒத்து வராது."
"ஏன்?"
"எனக்குத் தொழில் கவிதை."
குரலில் மெல்லிய கர்வம்.
"மற்றுமொரு பாரதி."
அப்பா சிரித்தார்.
"கிண்டல் வேண்டாம்."
"சரி. பூவாவுக்கு என்ன பண்றது?"
அப்பா சைகை காட்டினார்.





"தலைவர் ஜெயிலுக்குப் போயும் பந்தா குறையலை..."
"எப்படி...?"
"கம்பி எண்ண கால்குலேட்டர் வேணும்னு ஜெயில் வார்டனைக் கேட்டாராம்!"

- குருவை சோலே செல்வா

"அது என் பிரச்னை."
தலையசைத்து மறுத்தார்.
"மட்டுமல்ல. இது இவள் பிரச்னையும்கூட."
கோபம் திமிறியது.
"அப்ப நல்ல கணக்காளனாய்ப் பார்த்துக் கட்டி வைங்க."
வார்த்தைகள்!
திரும்ப அழைத்துக் கொள்ள முடியாத வார்த்தைகள்.
நந்தினியின் கண்கள் இளகின.

தூக்கம் வரவில்லை.
நேற்று இரவும் தூங்கவில்லை.
கண்களை வலுக்கட்டாயமாக மூடினாலும் வரவில்லை.
ஜன்னலுக்கு அப்பால் சூரியன்.
எழுந்தான்.
சுய கோபம் வந்தது.
அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது.
நந்தினி கலங்கிவிட்டாள்.
மாமாவும்தான்.
என்னை யாரும் புரிந்துகொள்ளவில்லை.
உத்யோகம் புருஷ லட்சணம்.
சொல்லியே சாகடிக்கிறார்கள்.
ஸாரி நந்தினி.
வெறுப்பாக வந்தது.
யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது.
ரமணன்.
"இக்பால் வந்துருக்கார்."
"என்ன?"
"கவிஞர் இக்பால் காசிம் வந்திருக்கார்."
இவனது ஆதர்சக் கவிஞர்.
"எங்கே?"
"அஜந்தாலே தங்கியிருக்கார்."
"என்ன விஷயம்?"
"பேசிட்டே நிக்காதமா. தமிழ்ப் பேரவைல கூட்டமாம். நம்ப க்ரூப்பைப் பார்த்துப் பேச ஆசைப்படறார்."
சங்கரன் துள்ளிக் குதித்தான்.
"இதோ... ஒரு நிமிஷம்."
கிளம்பினான்.
"உன் கவிதை நோட்டையும் எடுத்து வா."
திரும்ப உள்ளே ஓடினான்.
ஆயிற்று.
இரண்டு மணி நேரங்கள். இரண்டு நிமிடங்களாய்...
இக்பால் நிறைய பேசினார்.
இவர்களையும் பேச வைத்தார்.
இவனது கவிதைகளைச் சிலாகித்தார்.
சிலவற்றை மறுத்தார்.
மனசு பொங்கி பொங்கி வழிந்தது.
"ஏன் நீங்க சென்னைக்குப் போகலை?"
கேள்வி கேட்கப்பட்டது.
"ஏன் சினிமாவுக்குப் போகலைன்னு நேரடியாகக் கேளுங்களேன்."
கேள்வியின் சூட்சமம் புரிந்து கொண்டார்.
சிரித்தார்கள்.
அந்தக் கேள்விக்கான பதிலைத் தவிர்த்தார்.
"மீட்டிங் முடிஞ்சதும் இங்கதானே வருவீங்க. நைட் பேசலாமில்லே...?"
– சங்கரன் கேட்டான்.
"மீட்டிங் முடிஞ்சதும் நைட்டே ஊருக்குக் கிளம்பறேன். நாளைக்கு ஆபீஸ் போகணும்."
சங்கரன் அதிர்ந்தான்.
"ஆபீஸ்...?"
தயங்கினான்.
"ஏன்?"
"உங்களாலே எப்படி முடியுது?"
சிரித்தார்.
அவன் தோள்களில் தட்டினார்.
"கவிதை மனசுக்கு... ஆபீஸ் வயிற்றுக்கு. மனிதனுக்கு மனசும் இருக்கு. கூடவே பசியும் இருக்கு."
தடாலென பெருஞ்சப்தத்துடன் அவனுள் ஒரு கதவு திறந்தது.

நந்தினிதான் கதவு திறந்தாள்.
விழிகள் விரிந்தன.
"உள்ளே வரலாமா?"
தலையசைத்தாள்.
"சாமி அண்ட் சாமில நாளைக்கு ஜாய்ன் பண்றேன். பார்த்துப் பேசிட்டேன்."
ஆச்சர்யமானாள்.
"இனி எமக்குத் தொழில் கணக்கெழுதுதல்."
சங்கரன் சிரித்தான்.
"ஆமாம். உமக்குத் தொழில் கணக்கெழுதுதல். ஆனால் உயிர் கவிதை."
நந்தினி சொல்லும்போதே அழுதாள்.
அழுகைக்கும் காதல் என்று பெயர். ○

"நான் பெங்களூரிலேயே அதிக நாள் இருப்பதில்லை. பெரும்பாலும் கிராமப்புறங்களுக்கும், ஆதிவாசிகள் குடியிருப்புக்கும் சென்று விடுகிறேன். அங்கேதான் எனக்கு நிறைய வேலைகள் காத்திருக்கின்றன!'' என்கிறார்.


அப்படிப் போவது, அவர்கள் நிலைமையைப் பார்த்துவிட்டு வந்து கட்டுரைகள் எழுதுவதற்கு அல்ல. அவர்களுக்கு எந்தெந்த வகைகளில் தமது அறக்கட்டளை வாயிலாக உதவ முடியும் என்று பார்த்துச் செயல்படத்தான் என்கிறார் சுதாமூர்த்தி.

சுதாமூர்த்தி இன்றைக்கு நிர்வாகத் துறையில் எல்லோராலும் பேசப்படுகிற நாராயணமூர்த்தியின் மனைவி. இன்ஃபோஸிஸ் பவுண்டேஷன் அறக்கட்டளையின் தலைவி.

சென்னை அடையாறில் உள்ள காந்திநகரில், அடுக்கு மாடிக் கட்டடம் ஒன்றின் மூன்றாம் தளத்தில், சுதாமூர்த்தியைச் சந்திக்கிறோம்.

காலை ஏழரை மணிக்கு அப்பாயின்ட் மென்ட் என்பதால், ஏழே காலுக்கே நாம் போனபோதும் உள்ளே வரச் சொல்கிறார். இடையில் ஒரு நிமிடம் காக்க வைத்ததற்காக, போலியான பணிவு இன்றி, உண்மையாகவே மன்னிப்புக் கோருகிறார்.

வட்ட வடிவ முகம். கழுத்தில் கருகமணி மாலை. வெளிர் நீல வாயில் சேலை. உதட்டில் எப்போதும் ஒரு சின்னப் புன்னகை.



* நூல் வெளியீடு

வெளியே பூவின் மென்மை; உள்ளே இரும்பின் உறுதி!

கிராமப்புறங்களில் பள்ளிக்கூடங்களை கட்ட; ஒவ்வோர் அரசுப் பள்ளிக்கூடத்துக்கும் ஒரு நூலகம் திறக்க; (இப்போதே மொத்தம் 6500 நூலகங்கள்!) தேவதாசிகளின் குழந்தைகளுக்குக் கல்வி; ஒரிசாவில் காலஹண்டி, கர்நாடகத்தில் ஷெட்கேரி, புனேயில் ஹிஞ்சேவாடி என்று அநாதை விடுதிகள்; தொழுநோயாளிகள் மறுவாழ்வு இல்லம்; இதயநோய், சிறுநீரக நோய், புற்று நோய், தாக்கியவர்களுக்கும், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அபலைப் பெண்களுக்கும் பென்ஷன் திட்டம் என்று வெகு நீண்ட சாதனைப் பட்டியல் வைத்திருக்கிறார் சுதாமூர்த்தி.

"இப்போது என்ன ப்ராஜக்ட் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

"மயானபூமிக்குத் தமிழில் என்ன சொல்வீர்கள்?''

நாம் சொன்னதும், "கன்னடத்திலும் சுடுகாடு என்றுதான் சொல்லுவோம். எனக்கு என்னவோ பழைய தமிழ், கன்னடம்

போலத்தான் இருக்கிற மாதிரி தெரிகிறது... நான் ருத்ரபூமி என்றே எப்போதும் சொல்வேன்!" என்றார். "பத்து மயான பூமிகளில் ஷெட், தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறோம். குஜராத்தில் ராஜ்கோட் என்று நினைக்கிறேன். மயான பூமியை ஒரு பூங்காவாகவே அமைத்திருக்கிறார்கள். நிறைய மகான்களின் சிலைகள். முக்கியமாக சிவபெருமானின் சிலை..."



பேச்சு, அவரது எழுத்துக்கள் பக்கம் திரும்புகிறது.

"சின்ன வயசிலேயே எழுத ஆரம்பித்தும், திருமணத்துக்குப் பிறகுதான் அதிகமாக எழுத முடிந்தது. முதல் நாவலை எழுதி முடித்த பிறகு, யாரும் வெளியிட முன்வரவில்லை. இரண்டாவது நாவலை எழுதி முடித்த பிறகுதான் இரண்டையும் சேர்த்து வெளியிடக் கொடுத்தேன்!"

இதுவரை எழு நாவல்கள் வெளியாகியிருக்கின்றன. சில சிறுகதைத் தொகுதிகள், சில பயணக் கட்டுரைகள், மூன்று கம்ப்யூட்டர் கல்வி நூல்கள். எல்லாமே தாய்மொழியான கன்னடத்தில்.



"தமிழில் பேசினால் புரிந்து கொள்வேன். ஹிந்தி, உருது, மராத்தி கூட நன்றாகத் தெரியும். ஒரிசாவில் நான் கன்னடத்தில் பேச, அந்த பழங்குடியினர் ஒரியா மொழியில் பேசினார்கள். இருவருமே புரிந்துகொண்டோம். ஏனென்றால் இரு பக்கமிருந்தும் இதயம்தான் பேசியது. மொழி இரண்டாம் பட்சமாகி விட்டது."

ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதத் தூண்டி, ஊக்குவித்தவர் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' எடிடோரியல் ஆலோசகர் டி.ஜே.எஸ். ஜார்ஜ்.

"தமிழ்நாட்டில் என்ன பணி மேற்கொண்டீர்கள்?"

"திருநெல்வேலி பக்கமிருக்கும் பத்தமடையில் சிவானந்தா நினைவு மருத்துவமனையை விரிவுபடுத்தியிருக்கிறோம். காஞ்சிபுரத்தில் புற்றுநோய் மருத்துவமனையில் கூடுதல் வசதி. ராமகிருஷ்ண மடம் ஆசிரம மருத்துவமனையில் சில



* நாராயணமூர்த்தி - சுதா

வசதிகள்... டாக்டர் அப்துல்கலாமுடன் ராமநாதபுரம் பகுதிகளுக்குச் சென்று, அங்கே என்ன செய்யலாம் என்று திட்டமிடப் போகிறோம்."

"நாராயண மூர்த்தியின் வெற்றிக் கதையை நீங்களே ஏன் எழுதிப் புத்தகமாகக் கொண்டு வரக் கூடாது?"

"முதலாவது, அவர் அதற்குச் சம்மதிக்கவே மாட்டார். இரண்டாவது, அதைவிட முக்கியமான வேலைகள் இரண்டு பேருக்குமே நிறைய இருக்கின்றன."

"சரி, இப்போது நீங்கள் பிரபலமாக இருக்கிறீர்கள். பலருக்கு முன்னுதாரணமாகச் செயல்படுகிறீர்கள். புதிய சிந்தனைகள் இருக்கின்றன உங்களிடம். ஏராளமான அனுபவங்கள் வேறு. உங்கள் வாழ்க்கையையாவது எழுதக் கூடாதா?"

அடக்கத்துடன் ஒரு சிறு புன்னகை வெளிப்படுகிறது.

"புத்தகமாக எழுதுவதற்கு நான் அப்படி ஒன்றும் சாதனைகள் செய்துவிடவில்லை என்று நினைக்கிறேன். சில பணிகளுக்காகவும், பதவி காரணமாகவும் சமூகத்தில் ஓர் இடம் கிடைப்பது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் எழுத்து. முன்னதன் காரணமாகவே எழுதுவது எல்லாம் சுவாரசியமாகவும், சிறப்பாகவும்தான் இருக்க முடியும் என்று முன்கூட்டியே தீர்மானித்து விடுவது தவறாக இருக்கக்கூடும் அல்லவா?"

வெளியே பார்க்க மிருதுவானவராகத் தெரிந்தாலும், உள்ளே எஃகின் உறுதியும் திடமும் சேர்ந்த முடிவுகள்...

"ஃபவுண்டேஷன் செய்யும் நிதி உதவி தவிர, என் புத்தகங்கள் மூலம் கிடைக்கும் ராயல்டி முழுவதையும் வசதியில்லாதவர் கல்விக்கும், மருத்துவ உதவிகளுக்குமே செலவிடுகிறேன்."

"கம்ப்யூட்டர் உலகம்' என்ற தலைப்பில் வெகு எளிமையாக மூன்று புத்தகங்கள் எழுதியிருக்கிறார் சுதாமூர்த்தி. "எண்பத்தையாயிரம் பிரதிகளுக்கு மேல் விற்றிருக்கின்றன. ஒரு புத்தகத்துக்கு ஒரு ரூபாய் வீதம் 85000 ரூபாய் என் பணிகளுக்குக் கிடைத்தது!" என்கிறார், முகம் மலர.

விகடனில் இவர் எழுதி வந்த தொடர் கட்டுரைகள், இவர் தமிழில்கூட எழுதுவார் என்று பலரை நினைக்க வைத்ததாம். கவர்னர் சி. ரங்கராஜன், டாக்டர் அப்துல் கலாம் எல்லாம் 'தமிழில் பிரமாதமாக எழுதுகிறீர்களே?' என்று பாராட்டினார்களாம்.

"நான் ஆங்கிலத்தில் சொன்னதைத்தான் தமிழில் எழுதியிருக்கிறார்கள். 'எனக்காவது, தமிழில் எழுத வருவதாவது!' என்று அவர்களிடம் சொன்னேன்."

கல்வியும், சுகாதாரமும் மட்டுமே இவரது அக்கறை அல்ல. அழிந்து வரும் கிராமப்புறக் கலைகளுக்குப் புத்துயிர் அளிப்பதும் இவரது அறக்கட்டளை மேற்கொண்டுள்ள முக்கியமான பணி. கர்நாடகத்தில் 'கமகா' என்பது பழமையான இசை வடிவமாம். இதை மாநிலம் முழுக்கப் புதுப்பித்து, சுமார் நூறு கிராமங்களில், இதுவரை பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாக்களைக் கொடுத்து, கிராமப்புறங்களில் இந்தக் கலைவடிவம் அழிந்து போய்விடாமல் இருக்கத் தேவையான முயற்சிகளைச் செய்து வருகிறார். கிராமப்புறங்களில், பொம்மலாட்டத்தையும் மறுபடி உயிர்ப்பித்து வருகிறார்.

ஹிந்து, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், ஹிந்துஸ்தான் டைம்ஸ், வீக் ஆகிய இதழ்களில் சுதா மூர்த்தி எழுதிய 51 கட்டுரைகளின் தொகுப்பை வெளியிடும் நிகழ்ச்சிக்காக சென்னை வந்திருந்தார் சுதா மூர்த்தி.

"கலைஞன் பதிப்பகம் இதைத் தமிழில் வெளியிட முன் வந்திருக்கிறது. அனுபவங்கள் எனக்குத் தந்த பாடங்கள்தாம் இந்தக் கட்டுரைகள்!" என்கிறார்.

சந்திப்பு : **சாருகேசி**
படங்கள் : **வெங்கடேஷ்**

"நீங்களும் அந்த டைரக்டரும் பல வருஷமா காதலிச்சுட்டு, கல்யாணம் பண்ணிக்காமலே பிரிஞ்சிட்டீங்களே..?"

"கணவன் - மனைவியா பிரியறதைவிட காதலர்களாவே பிரிஞ்சுடறது நல்லது இல்லையா..?"

- சீர்காழி வி.ரேவதி





S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கை யில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

50 / 88, Panchali Amman Kovil Street, (Near Arumbakkam Post Office)
Arumbakkam, Chennai - 600 106
Tel. Off: 475 5700, 475 1356, 475 5799
Cell No. : 98400 84363
Email: svhome1rediffmail.com

அழகு மிளிரும் அடர்த்தியான கூந்தலுக்கு நம்பகமான ஒரே கூந்தல் தைலம்

குண கூந்தல் தைலம்

குண கூந்தல் தைலம் தொடர்ந்து உபயோகிப்பதால், முடி நீண்டு அடர்த்தியாக வளர்வதுடன், முடி உதிர்தல், செம்பட்டை நிறம், பித்த நரை, தலை அரிப்பு, பொடுகு மற்றும் சொறிந்தால் செதில் உதிர்வதையும் தடுக்கிறது.
சித்த மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பட்டது.
எந்தவித பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தாது.
ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் ஏற்றது.



இப்பொழுது
குண 100 ml
பெட் பாட்டிலில்.
விலை Rs.49.50



குண
கூந்தல் தைலம்

Mfrs.
Agasthiar Pharmaceuticals
Post Box No: 588, Salem - 636 005
Bangalore Branch: No. 37, South End Road
Basavanagudi, Bangalore - 560 004 Ph: (080) 6767882

'ஏய்... நீ ரொம்ப கசப்பா இருக்கே!'

"**எ**ன்னவோ தெரியலை... திடீர்னு ஜலப்பு" என்று அடிக்கடி மூக்கை உறிஞ்சிக் கொண்டிருக்கும் தும்மல் ஸ்டாரா நீங்கள்? சாதா அவஸ்தையா உங்களுடையது! மூச்சு விட முடியாது. மூக்கில் நயாகரா கொட்டும். மூக்கு அடைக்கும். தொண்டையில் கரகரப்பு... இலேசான தலைவலி... உங்கள் பிரச்னைக்கு அகத்திக் கீரையை நாடுவதுதான் பெஸ்ட் பிரிஸ்கிரிப்ஷன்!

அகத்திக்கீரையை நன்றாகக் கழுவி, மிக்ஸியில்விட்டு அரைத்து, இரண்டு சொட்டு அகத்திக்கீரை சாறை, பஞ்சில் நனைத்து மூக்கில் விட்டுக் கொண்டு, பத்து நிமிடம் கண்மூடிப் படுங்கள். அட! எங்கே போச்சு மூக்கடைப்பும், மூக்கு ஒழுகலும்! தேடிக்கிட்டே இருங்க!




அமெரிக்காவின் முக்கிய இடங்களில் 'டிட் யூ டேக் யுவர் கால்ஷியம் டு டே' என்ற விளம்பரத்தைப் பார்க்கலாம். 'எலும்பு உடம்புக்கு எலும்பே பிரதானம்' என்பதனால், இப்படி நினைவூட்டி எச்சரிக்கிறார்கள். நாம்ப என்ன செய்யலாம்...? 'இன்னிக்கு அகத்திக்கீரை சாப்பிட்டீங்களா?' என்று குசலம் விசாரித்துக் கொள்ளலாம். உண்மைதாங்க! பத்து தம்ளர் பாலிலும், ஐந்து முட்டையிலும் உள்ள சுண்ணாம்பு சத்து, ஒரு கட்டு அகத்திக்கீரையில் இருக்கிறது. விலை என்ன, ஒரு மூன்று ரூபாய் இருக்குமா?

அகத்திக்கீரை சாப்பிட்டால் பால் வளம் பெருகும் என்பதால்தான் ஆடு, பசு போன்ற கால்நடைகளுக்குத் தீவனமாக அகத்திக்கீரை தரப்படுகிறது. பிரசவித்த தாய்மார்களுக்கு, அகத்திக்கீரைத் துவட்டல் தரப்படுவதன் நோக்கமும் இதேதான். எலும்பும், பல்லும் ஸ்ட்ராங்காக இருக்கும். தாய்ப் பால் பெருகும். சோகை ஏற்படாது. த்ரீ இன் ஒன்!


மூளை மந்தமாக உள்ளவர்கள், அகத்திக்கீரையை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டு பயன் பெறலாம். குறிப்பாக பள்ளிக்குழந்தைகளுக்கு வாரம் ஒருமுறையாவது அகத்திக் கீரை பொரியல் செய்து தந்தால், நல்ல மூளை வளர்ச்சியும், உறுதியான எலும்பும் பெற்று, புத்திசாலியாகவும் பலசாலியாகவும் விளங்குவார்கள்.

அகத்திக்கீரையைப் பற்றி அசத்தலாகச் சொல்லிக்கொண்டே போனதில், முக்கியமான விஷயம் சொல்லாமல் விடுபட்டு விட்டது. அகம்+தீ+கீரை! அதாவது உடலின் உஷ்ணத்தைத் தணித்து, குளிர்ச்சி ஏற்படுத்தும் என்பதால் இந்தக் காரண காரிய பெயர். அதிக சூட்டினால் அவதிப்படுபவர்கள், அகத்திக் கீரையைக் கண்டிப்பாகச் சாப்பிட வேண்டும்.

மூலிகை கேலரி - 14



அகத்திக் கீரை சாறு ஒரு பங்கு, பசும் பால் அரைப் பங்கு, நல்லெண்ணெய் ஒரு பங்கு



என்ற அளவில் சேர்த்து, மண்பானையிலிட்டுக் காய்ச்சவும். தைலம் பிரிந்து மிதக்கத் தொடங்கியதும், எடுத்து பத்திரப்படுத்தவும். இந்தத் தைலத்தைத் தலையில் தேய்த்துக் குளித்தால், உடல் எரிச்சல், கண் எரிச்சல், தலைவலி, வாய் துர்நாற்றம், பொடுகு போன்றவை நீங்கும்.

அடிபட்ட வீக்கங்களுக்கு அகத்திக் கீரைதான் அருமருந்து. அகத்திக் கீரையை, வெறும் வாணலியிலிட்டு வதக்கி, பொறுக்கக்கூடிய உஷ்ணத்தில் எடுத்து கசக்கி, பற்றுப் போட, வீக்கமும் வலியும் தணியும்.

'காபி, டீ எல்லாமே உடம்புக்குத் தீமை விளைவிக்கின்ற விஷயங்கள்தான் எனத் தெரிந்தாலும் விட முடியலையே! தினமும் நான்கு, ஐந்து தடவை குடிப்பதால் பித்தம் அதிகமாகி விட்டது என்று புலம்புபவரா நீங்கள். உங்கள் ஒத்தாசைக்கு அகத்திக் கீரை இருக்கே!

தினமும் வெறும் வயிற்றில் ஒரு தம்ளர் இளமோரில், ஒரு ஸ்பூன் அகத்திக் கீரைப் பொடியைக் கலந்து, குடித்து விடுங்கள். பித்தம் தணிந்துவிடும். இளநரை, பாதவெடிப்பு, பொடுகு, குமட்டல், வாந்தி, கண் எரிச்சல், தலைசுற்றல், அஜீரணம் போன்ற கோளாறுகள் உடனடியாக விலகிக் கொள்ள, ஆரோக்கியம் படுபந்தாவாக பந்தக்கால் நடும்!

அகத்திப் பூவைப் பற்றியும் சிலாகித்துச் சொல்லவேண்டியிருக்கிறது. அது இதயத்தில் வைத்து பூஜிக்க வேண்டிய பூ! அகத்திப் பூவை பாசிப்பயறுடன் சேர்த்து கூட்டு போல சமைத்துச் சாப்பிட்டால், இதயத்துக்குப் பலம் கூடும்.

பாசிப்பருப்பை மலர வேக வைத்துக் கொண்டு, அகத்திக் கீரையைப் பொடிப் பொடியாக நறுக்கிச் சேர்த்து வேக வைக்கவும். உப்பு, மிளகாய், தேங்காய் துருவல், பெருங்காயம் போன்றவை உங்கள் சாய்ஸ்! இதை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால், தொண்டை ரணம் ஆறும். தொண்டை வலி குணமாகும். நல்ல பசி எடுக்கும்.

அருமையான கீரைதான். ஆனால் அகத்திக்கீரை என்றாலே பலர் முகம் சுளிப்பார்கள். காரணம் அதனுடைய கசப்பும் துவர்ப்பும் கலந்த ருசி! ஆனால் அகத்தியின் சிறப்பம்சமே அந்தக் கசப்புச் சுவைதான் என்று தெரிந்தால், அந்தக் கசப்பையும் ரசிக்க ஆரம்பித்து விடுவீர்கள்.

கசப்புச் சுவை என்னெல்லாம் செய்யும் என பட்டியலிடலாமா? உங்கள் உடலில் உள்ள விஷநீர் எத்தகைய தன்மை உடையதாக இருந்தாலும், முதலில் ஜெட் பம்புசெட் போட்டு வெளியேற்றி விடும். விதவிதமான சைஸில் நம் குடலில் 'ஹாய்யாக' குடியிருக்கும் குடல் புழுக்களை, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும். மலச்சிக்கல் வராமல் பார்த்துக் கொள்ளும். இந்த மூன்று பணிகள் நடைபெற்றதுமே, உடல் உரம் பெற்று, ஆரோக்கியமாகிவிடும். மற்றதெல்லாம் ஜுஜுபி!

படங்கள்: ஸ்ரீஹரி

ராஜம் முரளி



பழசு : தாய் எட்டடிப் பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்.

புதுசு : சீரியல் பத்து நிமிடம் ஓடினா விளம்பரம் இருபது நிமிடம் ஓடும்.

பழசு : ஆலும்

வேலும்

பல்லுக்குறுதி

புதுசு :

அழுகையும்

புலம்பலும்

சீரியலுக்குறுதி.





பழசு : பொன்முட்டை யிடும் வாத்தை அறுத்துப் பார்த்தானாம் பேராசைக்காரன்.

புதுசு : பணத்தை அள்ளும் சீரியலை பதிமூணு எபிஸோடுலேயே முடிச்சானாம் பைத்தியக்காரன்.



பழசு : நெய்க்கு தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா?

புதுசு : விளம்பரத்துக்கு நடுவிலே சீரியல் வருதா, சீரியலுக்கு நடுவிலே விளம்பரம் வருதா?

பழசு : கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா.

புதுசு : 'கேபிள்' (டி.வி.) இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா!



ஐடியா : ஆர். ரகோத்தமன்

படங்கள் : பிள்ளை



பழசு : வெண்ணெய் திரண்டு வரும் சமயம், தாழி உடைந்தாற்போல...

புதுசு : மெகா சீரியல் ஆரம்பிக்கும் சமயம், மின்சாரம் தடைபட்டாற்போல...



பாலிவுட் டு கோடம்பாக்கம்!

மலேசியத் தலைநகரின் மணிமகுடமாக விளங்கும் உலகின் மிக உயர்ந்த கட்டடமான 'பெட்ரோனாஸ் டுவின் டவர் முன்பு 'ஜூனியர் சீனியர்' படப்பிடிப்பு. கதாநாயகி தேஜாஸ்ரீக்காக கேமராவுடன் காத்திருந்தது படக்குழு.

அவரோ கால்ஷீட் பிரச்னையில் ஹோட்டலில் இருந்து மும்பைக்குப் பறந்துவிட்டதாகச் செய்தி மட்டுமே வந்தது. பதறிப்போன இயக்குனர் "என்னோட சினிமா லைஃப் முடிஞ்சுது!" என்று பக்கத்தில் நின்ற மலேசிய கோ ஆர்டினேட்டரிடம் புலம்ப, "இதுக்குப் போயி அலட்டிக்கலாமா? என்கூட வாங்க, எத்தனை மலேசிய தமிழ்ப் பொண்ணுங்க சினிமாவில் நடிக்க தவம் கிடக்குறாங்கன்னு காட்டுறேன்'' என்றபடி அழைத்துப் போய் லீனா வீட்டுக்கதவைத் தட்டியிருக்கிறார்.

கதவைத் திறந்த லீனா, தகதகவென்று ஜொலிக்க, இயக்குனரால் நம்பமுடியவில்லை. ''இவங்களைப் பார்த்தா ஏதோ வடகத்தி வாசம் வீசுதே?'' என்று இயக்குனர் வாயைத் திறப்பதற்கு முன் லீனாவே பேசியிருக்கிறார்.

"யெஸ்; நான் ஒரு மலேசிய பஞ்சாபி. ஆனா தமிழ் பிச்சு உதறுவேன். கோலாலம்பூரில் தமிழ்ப் பேசத் தெரியாத சீனர்களைக்கூட விரல்விட்டு எண்ணிடலாம்! அப்படியிருக்கும்போது ஒரு இந்திய பொண்ணுக்குத் தமிழ் தெரியலேன்னா எப்படி?'' என்றதும் கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தமாதிரி இயக்குனருக்குச் சந்தோஷமோ சந்தோஷம்! ''ஆனால் நான் தமிழ் சினிமாவில் நடிக்கிற மாதிரி இல்லே. நேரா பாலிவுட் தான் டிரை பண்ணிக்கிட்டு இருக்கேன்'' என்றதும் சந்தோஷம் எல்லாம் சப்பென்று வடிந்துவிட்டது! ஆனாலும் விடுவாரா இயக்குனர்?

"ஹேமமாலினி, ஸ்ரீதேவி, ரேகா என்று பாலிவுட்டில் புகழ் பெற்ற எல்லோரும் தமிழ்ப் பெண்கள். அவ்வளவு ஏன் ஐஸ்வர்யா ராயில் தொடங்கி, பிரியங்கா சோப்ரா வரை உலக அழகிகள் தமிழ் சினிமாவில் அறிமுகமாக தவம் கிடப்பது தெரியவில்லையா!'' என்றதும் லீனா கொஞ்சம் இறங்கியிருக்கிறார்.

"உங்களுக்கு ஜோடி யார் தெரியுமா? மெகா ஸ்டார் மம்முட்டி'' என்றதும் இந்த மலேசிய மயில் பாலிவுட் கனவை மூட்டைக் கட்டிவிட்டு இப்போது கோடம்பாக்கத்தில் முகாமிட்டிருக்கிறது!

- ஜெ


உலக வரலாற்றில் பெண்கள்

'ரோசலிண்ட் மைல்ஸ்' என்பவரின் 'தி வுமன்ஸ் ஹிஸ்டரி ஆஃப் தி வோர்ல்டு' என்ற நூலின் மொழிபெயர்ப்பு. ஆரம்பக் காலத்தில் பெண்களின் நிலையென்ன என்பதில் தொடங்கி, ஆணாதிக்கத்திற்கு அடிமைப்பட்டு பெண்கள் படும் அவஸ்தைகளையும், இன்று வரையிலான பெண்ணடிமைத்தனத்தையும் விளக்குகிறது இந்நூல். வி. ராதாகிருஷ்ணனின் மொழிபெயர்ப்பு சிறப்பாக இருக்கிறது.

நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 98, விலை ரூ. 100/-

கார்கில்: சா. பீட்டர் அல்போன்ஸ், எம்.பி

இந்திய தணிக்கைக் குழு தலைவரின் அறிக்கை பாராளுமன்ற விவாதத்துக்கு வந்தபோது ராணுவ அமைச்சகத்தில் வாங்கப்பட்ட ஆயுதங்களில் ஊழல் நடந்திருப்பதாக தகவல்கள் வெளியாயின. இது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்காக நாடாளுமன்ற நூலகம், பல்வேறு பத்திரிகைச் செய்திகள், தணிக்கைக்குழு அறிக்கைகள் போன்றவற்றிலிருந்து குறிப்புகளைச் சேகரித்தார் இந்நூலாசிரியர். டிசம்பர் 13ம் தேதி நாடாளுமன்றம் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டதையடுத்து ஆயுத பேர ஊழல் பற்றியும் விவாதம் நடத்த முடியாத சூழல் ஏற்பட்டது. தாம் தயாரித்த குறிப்புகளைக் கொண்டு இந்நூலைத் தொகுத்திருக்கிறார் ஆசிரியர். வாசிக்கப்படவேண்டிய நூல்.






101/2, கனஸ்ரீ நகர், கதீட்ரல் சாலை, சென்னை-86. விலை ரூ.35/-

வாய்மொழி வரலாறு

தீண்டாமைக் கொடுமைக்குட்பட்ட மக்கள், குடித்தொழில் மக்கள், கைவினைக் கலைஞர்கள், கோயில் தொடர்புடைய மக்கள், தொழில் உறவு சார்ந்த மக்கள் என்று பிரித்துக் கொண்டு, பேராசிரியர் வீ. அரசுவின் தலைமையில் மாணவர்கள் ஆய்வு செய்து எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். அடித்தட்டு மக்களின் வரலாறுகளை அவர்களின் மொழியிலேயே வெளியிட்டிருப்பது சிறப்பு.





தன்னானே பதிப்பகம், 14, முதல்குறுக்குத் தெரு, டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம், சென்னை - 24, விலை ரூ.40/-

பிரார்த்தனைப் பூக்கள் - வலம்புரி ஜான்

இறைவனிடம் பேசும்படியாக அமைந்துள்ள ஆசிரியரின் கட்டுரைத் தொகுப்பு.

ஆஸாத் பதிப்பகம், 158, அவ்வை சண்முகம் சாலை, கோபாலபுரம், சென்னை - 84. விலை. ரூ.50



அமைதி, ஆற்றல், அபரிமிதம்.

ஆங்கில எழுத்தாளர் ஆரிஸன் ஸ்வெட் மார்டன் எழுதிய 'பீஸ், பவர், ப்ளென்டி' எனும் தன்னம்பிக்கைக் கட்டுரைகளின் தமிழாக்கம். ஒவ்வொரு கட்டுரையும் உத்வேகத்தைக் கொடுக்கிறது.

கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை-17, விலை ரூ.75.

- கார்க்கி



ஒரு புதிய களம் புதிது!

● 'இது புதிய துவக்கங்களுக்கான நேரம்' என்ற வரிகள் மூலமாக புதிய பரிமாணத்தை காஞ்சனா தாமோதரன் வெளிப்படுத்தியிருந்த விதம் பாராட்டுக்குரியது. ஸ்யாமின் வண்ண ஓவியங்கள் தொடருக்கு அழகையும் புதிய பொலிவையும் தந்தன.

சென்னை – 93, எஸ். சையது முகமது.

● 'இக்கரையில்'... அமெரிக்க – இந்திய கலாசாரம் கலந்த இலக்கியத் தரமான தொடர். எங்களுக்கு ஒரு புதிய அனுபவம்! இந்த ஆண்டின், 'சிறந்த இலக்கியப் படைப்புக்கான விருது' பெறத்தக்க வித்யாசமான கதை.

அயன்புரம், த. சத்தியநாராயணன்.

● கதை புதிது. களம் புதிது. கருவின் கனமும் புதிது. அயல்நாட்டு எழுத்தாளர் கதையில் நம்ம ஊர் மண்வாசனை வீசியது பரம சுகம்.

தருமபுரி – 5, கே. பிரகாஷ்

திருப்பூர் கிருஷ்ணன் எழுதிவரும் 'சுவடுகள்' தொடரில் (7.4.2002) 'தமிழின் முதல் சிறு கதையை எழுதிய வ.வே.சு.ஐயர்' என்று காணப்படுகிறது.

வருடக் கணக்கை வைத்துத் தீர்மானித்தாலும், வடிவத்தின் அடிப்படையில் தீர்மானித்தாலும், தமிழின் முதல் சிறுகதையை எழுதியவர் பாரதியார்தான். வ.வே.சு.ஐயர் அல்ல. குளத்தங்கரை அரசமரம், 1915ல் செப்டெம்பர், அக்டோபர் மாதங்களில், விவேகபோதினி என்ற பத்திரிகையில் பிரசுரமானது. அதுவும் வ.வே.சு.ஐயரின் பெயரில் வெளியிடப்படவில்லை. அவரது மனைவி 'ஸௌபாக்கியலக்ஷ்மி அம்மாள்' என்ற பெயரில் பிரசுரமாயிற்று.

விவேக போதினியில் ஐயரின் கதை வெளியாவதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே, 1905ல், பாரதியார் தனது சக்கரவர்த்தினி (என்ற பெண்கள்'முன்னேற்ற') பத்திரிகையில், 5 இதழ்களில் (நவம்பர் 1905, ஜனவரி 1906, பிப்ரவரி 1906, ஜூன் 1906, ஜூலை 1906) "துளசிபாயி என்ற ரஜபுத்ர கன்னிகையின் சரித்திரம்" என்ற 'சிறுகதை'யை எழுதியிருக்கிறார். ஐந்து இதழ்களில் வெளியிடப்பட்டதால் அது 'சிறுகதை' அல்ல என்று அவசரப்பட்டு முடிவுக்கு வந்திட வேண்டாம். ஐயரின் கதை 26 பக்கங்களுக்கு மேற்பட்டது. பாரதியின் கதை முதல் இதழில் நான்கு பக்கங்களும், மற்ற இதழ்களில் தலா இரண்டு பக்கங்களும் வெளியிடப்பட்டது. சற்றே நீண்ட கதை என்றாலும் அதை பாரதி சிறுகதையாகத்தான் கருதினார் ("அடுத்த

பாரதிதான் முதல்வர்!

கோடி புண்ணியம் தேடித் தந்தீர்...



✉ தளவை இளங்குமரனின் 'சப்தங்கள் இல்லாத சங்கீதம்' கவிதை வெகு அற்புதம்! 'காதல் எத்துணை கண்ணியமானது' என்பதை விளங்க வைக்க இந்தக் கவிதையே போதுமானது!
நல்லூர், க. சம்பத்.

✉ 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம். அட்டையிலேயே அருணாச்சலேஸ்வரர் கோயில் கோபுரங்களை வெளியிட்டு கோடி புண்ணியம் கிடைக்க வழி செய்து விட்டீர்கள்!
நெய்வேலி டவுன்ஷிப்,
எஸ். கண்ணன்

✉ 'ஒற்றை ரூபாயி'ல் மனம் மாறி, இனிய 'சாரலில்' சிலிர்த்து, 'கொஞ்சம் துணுக்குற்று' 'மனத்தில் உறுதி வேண்டு'மென்று, 'மறையிறைஞ்சும் சேவடிகள்' பணிந்து – ஆஹா, அருமையான இதழ்!
சென்னை – 17. இந்திரா ரமணி.

✉ திருவண்ணாமலைக்கு நான் இதுவரை சென்றதில்லை என்றாலும் கிரிவலம் சுற்றி வந்த உணர்வை ஏற்படுத்தியது.
மோகனூர், சரவணபவன்.

✉ கூட்டணியில் இருந்து கொண்டே சிவசேனை போன்ற பா.ஜ.கவின் என்றுமே நேசக்கட்சிகள் கூட எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு பல தர்ம சங்கடமான கேள்விகளைக் கேட்டு பிரதமரைத் திணறடித்தன. ஆனால், தி.மு.க. தனக்கேயுரிய கொள்கையுடன் 'ஆதரவு என்றால் எல்லாவற்றிற்கும் ஆதரவே' என்று நடந்து கொள்வதை இங்குள்ள தமிழக பா.ஜ.க. தலைவர்கள் அறியாதது, அவர்களின் அனுபவமின்மையையே காட்டுகிறது.
சென்னை – 61, ஆர். நாகராஜன்.

✉ திருவண்ணாமலையை நேரில் பார்த்தது போன்ற பிரமையை ஏற்படுத்தி விட்டீர்கள். திருவண்ணாமலை சிறப்பிதழ் சிறப்பாக இருந்தது.
மும்பை - 9, மைக்கேல் சாமுவேல்.

✉ பகவான் ஸ்ரீரமணமகரிஷி பற்றி குறிப்பிடும் பொழுது மதுரை மாவட்டம் – திருச்சுழி என்று குறிப்பிட்டுள்ளீர்கள். 'திருச்சுழி' விருதுநகர் மாவட்டத்தில் உள்ளது.
விருதுநகர், எஸ். அழகேசன்.

✉ திருவண்ணாமலை சிறப்பிதழ் சிறப்பாக அமைந்து தீபமாக ஜொலித்தது.
நெல்லிக்குப்பம், தமிழ்ப்பரிதி.

✉ 'ஆசிரம ரகசியங்கள்' என்ற கட்டுரையில் 'லோபமாதா ஆசிரமம்' என்ற தலைப்பில் நல்ல கருத்து எழுதிவிட்டு 'ஆனால் உறுத்தல் என்னவென்றால் ஆசிரமத்தில் உள்ள சொகுசு ஏர்கண்டிஷன்' என்று எழுதியிருந்தீர்கள். திருச்சி நண்பர் பழனிவேலு என்பவர் எலக்ட்ரீஷியன். லோபமாதா ஆசிரம வேலைகளில் பல வருடங்களாக உதவிய இவர், டெரி இன்ஸ்டிடியூட்டில் தாம் பயின்ற காலத்தில் பழுது பார்த்த பழைய ஏஸி பெட்டிகளை, தமது சொந்த செலவில் வாங்கி, ஆசிரமத்துக்குக் காணிக்கையாக அளித்துள்ளார்.
சென்னை–97. ஜி. வெங்கடேஸ்வரலு.

முறையில் இந்த சிறுகதை முடிவு செய்யப்படும்" என்று முதல் இதழின் முடிவில் ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார்.)

'குளத்தங்கரை அரசமரம்' வெளியாவதற்கு முன்னரே பாரதி மற்றொரு கதை எழுதியிருக்கிறார். தலித்துகளுக்குச் சமர்ப்பணம் செய்யப்படும் அந்தக் கதையின் பெயர் 'ஆறில் ஒரு பங்கு'. அதை முதலில் பாரதியே 1911ல் தனி பிரசுரமாக வெளியிட்டார். (அதன் பிரதி ஒன்று இன்னும் புதுவை பாரதி நினைவகத்தில் இருக்கிறது) அது அன்றைய அரசால் தடை செய்யப்பட்டது. இந்தத் தடைக்குப் பத்திரிகைகளும் அறிஞர்களும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்று கோரி, 8.10.1912 அன்று ஹிந்து நாளிதழில் கடிதம் எழுதுகிறார்.
சென்னை – 41,
மாலன்.





'ஜெமினி' படத்தில் இடம் பெற்றிருக்கும் 'ஓ... போடு!' பாடலுக்கு இசை பரத்வாஜ் என்றால், வரிகள் வைரமுத்துவுக்குச் சொந்தம். 'ஓ... போடு' ஐடியாவை இரண்டு வருடமாக அடைகாத்து, 'ஜெமினி'யில் பொருத்தமான சூழ்நிலை வந்ததால் பயன்படுத்திக் கொண்டாராம் இயக்குனர் சரண்.

'ஓ... போடு!' புராணம் ஒரு பக்கம் இருக்கட்டும். சமீபத்தில் உங்களை 'ஓ' போட வைத்த விஷயம் எதுவென்று கேட்க, ஜெமினி டீமிலிருந்து கிடைத்த பதில்கள் இங்கே...



* விக்

சரண் : கிடைப்பதை உண்டு, மதிய உணவை கிட்டத்தட்ட மறந்தே போன, ஏழைக் குடும்பங்களின் எண்ணிக்கை இன்னும் குறையவில்லை. காகிதங்களையும், உடைந்த கண்ணாடிக் குப்பிகளையும் காய்ந்த வயிறோடு சேகரிக்கும் சாலையோரச் சிறார்கள் மெட்ரோ நகரங்களில் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். சென்னையில் வேலை செய்து நிறைய சம்பாதிக்கலாம் என்ற கற்பனையோடு இங்கே வந்து சோற்றுக்கு அல்லாடும் ஆட்களும் அதிகம். ஹோட்டலில் சாப்பிடவும் காசில்லாமல், பிச்சையும் கேட்க முடியாமல், கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள பசியோடு போராடும் பரிதாபத்திற்குரிய




* சரண்

ஓ... போடு!

இவர்களுக்கெல்லாம் தமிழக அரசு அறிவித்திருக்கும் ஆலய அன்னதான திட்டம் ஆறுதல் அளிக்கக் கூடியது. இந்தத் திட்டத்தில் தேவையில்லாதவர்களுக்கு இருபது சதவீதம் போய்ச் சேர்ந்தாலும் எஞ்சிய பலன் ஏழைகளின் பசிப்பிணி தீர்க்கக் கூடியது என்பதில் சந்தேகமில்லை. இந்தத் திட்டம் பற்றி கேள்விப்பட்டதுமே, அதற்கொரு ஓ.. போட வேண்டும் எனத் தோன்றியது.

ஏவி.எம்.சரவணன் 'ஓ... போடு' பாடலின் ஐடியாவை சரண் என்னிடம் சொன்னபோது, அது இத்தனை பெரிய வெற்றியடையும் என்று நினைக்கவில்லை. ஆனால் ஒலிப்பேழை வெளியிடப்பட்ட இரண்டு தினங்களுக்குள்ளாக தமிழக



• கிரண்

ரசிகர்கள் இதை ஸ்லோகன் மாதிரி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இத்தனை பெரிய வெற்றிக்கு முதல் காரணம் இயக்குனர் சரண். முதன்முதலில் அவர் என்னைச் சந்தித்து, கதை சொல்லி முடித்து, அதைப் படமாக்குவது என்று முடிவானதும், மறுநாள் என்னிடம் ஒரு பட்டியலைக் கொடுத்தார். இந்த தேதியில் ஸ்க்ரிப்ட் ரெடி, இந்த தேதியில் பாடல் பதிவு இந்திந்த தேதிகளில் படப்பிடிப்பு, இந்த தேதியில் படத் தொகுப்பு, இந்த தேதியில் பின்னணி இசைச் சேர்ப்பு, இந்த தேதியில் முதல் பிரதி ரெடி, இந்த தேதியில் சென்சார் அனுப்புவது என்று எல்லாம் மிகத் தெளிவாக இருந்தது.

திட்டமிடுவதும், பட்டியல் போடுவதும் எளிது. அதைச் செயல்படுத்திக் காட்ட

வேண்டுமே. அவர் குறிப்பிட்டிருந்த அந்தந்த நாட்களில், துல்லியமாகப் பணிகள் அனைத்தையும் முடித்துக் கொடுத்துவிட்டார். இதனால் அறிவித்த இரண்டு நாட்களுக்கு முன்பாகவே ஏப்ரல் பன்னிரண்டாம் தேதி படம் வெளியாகிறது. இத்தனை சுறுசுறுப்பான இயக்குனருக்குத்தான் 'ஓ' போட வேண்டும்.

விக்ரம் : இந்தச் சம்பவம் நடந்து இரண்டு வருடகாலமாகிவிட்டது. ஆனால் இப்போது நினைத்தாலும், இதயம் சிலிர்த்து என்னையும் அறியாமல் 'ஓ.. போடு'வேன்.

உடல் மற்றும் மனதளவில் ஊனமுற்றவர்களுக்காக சியாட்டிலில் நடந்த சிறப்பு ஒலிம்பிக் போட்டியின் இறுதி நாளன்று ஓட்டப் பந்தயம். சக்கர நாற்காலியிலும் ஊன்றுகோல் வைத்துக் கொண்டும், பலர் எதன் துணையும் இல்லாமலும் போட்டியாளர்களாக தட களத்தில் வந்து நின்றார்கள். 'ரெடி, ஸ்டார்ட், கோ' என்றதும் ஜெயித்தே ஆகவேண்டும் என்று வேகவேகமாய் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஓடத் தொடங்கினார்கள்.



பங்கேற்பாளர்களில் ஓடி வந்து கொண்டிருந்த ஒரு பெண் திடீரென தடுக்கிவிழ, ஒரு கணம்தான், ஓடிக் கொண்டிருந்தவர்கள் எல்லாரும் திரும்பிப் பார்த்தனர். யோசிக்கக்கூட இல்லை. அத்தனைபேரும் திரும்பவந்து, விழுந்த பெண்ணைத் தூக்கி நிறுத்தினார்கள். பிறகு எல்லோரும் கைகோத்துக் கொண்டு ஒற்றுமையாக பந்தய தூரத்தை நடந்தே கடந்தனர். ஒரு இலட்சம் பேர் திரண்டிருந்த அரங்கம், பத்து நிமிட கைதட்டலில் அதிர்ந்தது. அதைப் பார்த்த அத்தனை பேரின் இதயமும் உணர்ச்சிக் கொந்தளிப்பில் உருகியிருக்கும். உடலால் ஊனமுற்றிருந்தாலும், உள்ளத்தால் எத்தனை பலம் கொண்டவர்கள் என்பதை நிரூபித்ததோடு, இதுபோன்ற போட்டிகளில், வெற்றி, தோல்வி முக்கியமல்ல,

கல்கி
VBC Jewellery
இணைந்து வழங்கும்
புன்னகைப் போட்டி - 7 முடிவு

"நான் சாக விரும்புகிறேன்!" என்று புலம்பிய பிரதமருக்கு ஆறுதல் சொல்லும் வண்ணம், தமாஷ் கமெண்டுகள் கேட்டிருந்தோம். நான்கு கிராம் தங்கம் வென்ற இரு வாசகர்கள் இதோ.

அதாவது திரும்பவும் அ.தி.மு.க.வுடன் கூட்டு வைக்க விரும்புகிறாரோ!

ஜி.சத்தியமூர்த்தி.
த.பெ.எண்.2136, துபாய்.

சின்ஹா (பட்)ஜெட்டையே தாங்கி, உயிர் வாழ்கிறோம் நாங்கள்!
இதனினும் பெரிய துன்பம் என்ன கண்டீர் நீங்கள்!

ம. தக்ஷிணாமூர்த்தி,
10/32, ரங்கையா தெரு, சூளை,
சென்னை - 600 112.

பங்கேற்புதான் முக்கியம் என்பதைச் சொல்லாமல் சொன்னார்கள்.

கிரண் : படத்தில் இடம் பெற்றிருக்கும் எல்லா பாடல்களுமே தாளம் போட வைக்கிற ரகம் என்றாலும் 'ஓ... போடு' பாடலுக்கு பெரிய வரவேற்பு கிடைக்கப் போவது உறுதி என்று உள் மனசு சொன்னது. ஆனால் அந்தப் பாடலில் கதைப்படி ராணிதான், நடனமாடப் போகிறார் என்று தெரிந்ததும் சோகத்தில் ஜுரமே வந்துவிட்டது. இத்தனைக்கும் அந்தப் பாடலில் விக்ரமும் ராணியும் இணைந்து ஆடுவதை நான் ஏக்கத்துடன் பொறாமையாக ஒளிந்து ஒளிந்து பார்க்கிற மாதிரி சூழ்நிலை. நிஜத்திலும் எனக்கு அப்படியொரு மனநிலை வந்துவிட்டது. இயக்குனரிடம் என் ஏக்கத்தை மனம்விட்டே சொல்லிவிட்டேன்.

என் அதிர்ஷ்டமோ என்னவோ முழுப்படமும் முடிந்து சுவிஸ் நாட்டில் சுற்றுலாவில் இருந்த என்னைச் சென்னையிலிருந்து தொலைபேசியில் அழைத்தார் இயக்குனர். கதாநாயகனுடன் "கதாநாயகியை ஆட வைத்து 'ஓ... போடு!' பாடலை மறுபடியும் படம் பிடித்து, படத்தின் இறுதியில் சேர்த்துக் கொள்ளலாமே என்று தயாரிப்பாளர் சொன்னார். எனக்கு நல்ல யோசனையாகப்பட்டது. உடனே வந்து நடித்துக் கொடுக்க முடியுமா?" என்றார். சந்தோஷத்தில் திக்கித் திணறி சுற்றுலாவை ரத்து செய்துவிட்டு சென்னை வந்து 'ஓ... போடு!' பாடலுக்கு ஆடினேன். இந்த வாய்ப்பைக் கொடுத்த தயாரிப்பாளருக்குத்தான் 'ஓ' போட வேண்டும்.

ராணி : கடல் கடந்து காதலனைத் தேடி வந்த தலால் ஆஸ்மிதான் என்னை ஓ போட வைத்தவர். கட்டுப்பாடுகள் மிகுந்த நாட்டில் பிறந்தாலும், காதலுக்குக் கட்டுப்பாடு போட முடியாது என்பதற்கு தலால் ஆஸ்மி நல்ல உதாரணம். சட்டப்படி அவரைச் சிறையில் அடைத்தார்கள். ஆனால் விடுதலை செய்யும்வரை அவர் உறுதியாக உண்ணாவிரதம் இருந்தார். அவருக்காக பத்திரிகைகளும், பொதுமக்களும் காட்டிய ஆதரவு சூப்பரோ சூப்பர். இப்போதைக்கு 'ஓ' போட வேண்டியது தலால் ஆஸ்மிக்குத்தான்.

சந்திப்பு : **விஷ்வல்தாசன்**

சிவகாமியின் சபதம்

இருபத்து இரண்டாம் அத்தியாயம்

அசோகபுரத்தில்

காஞ்சிமா நகரத்திலிருந்து ஏழு காத தூரத்தில், தில்லைப் பதிக்குப் போகும் மார்க்கத்தில், அசோகபுரம் என்னும் ஊர் இருந்தது. இந்த ஊரின் மத்தியில் பரத கண்டத்தை ஒரு குடை நிழலில் ஆண்ட சக்கரவர்த்திகளுக்குள்ளே ஒப்புயர்வற்ற தர்ம சக்கரவர்த்தியான அசோகவர்த்தனர், தேசமெங்கும் நிலை நாட்டிய ஸ்தம்பங்களில் ஒன்று கம்பீரமாய் நின்றது.

ஒரு காலத்தில் இந்த அசோக ஸ்தம்பத்தைச் சுற்றியிருந்த புத்த விஹாரங்களில் ஓராயிரம் புத்த பிக்ஷுக்கள் வாசம் செய்தார்கள். புத்த மதத்தைச் சேர்ந்த கிரகஸ்தர்கள் வாழ்ந்த ஆயிரக்கணக்கான வீடுகளும் இருந்தன. மாலை நேரத்தில் புத்த சைத்தியங்களில் பகவான் புத்தருக்கு ஆராதனை நடக்கும்போது தூபங்களிலிருந்து எழும் நறுமணப் புகையானது, ஊரெல்லாம் கவிந்திருக்கும். நூற்றுக்கணக்கான பூஜை மணிகள் கணகணவென்று ஒலித்துக்கொண்டிருக்கும். புத்தரின் சந்நிதியில் ஆயிரக்கணக்கான தீபங்கள் ஜொலித்துக்கொண்டிருக்கும். பிக்ஷுக்களும், கிரகஸ்தர்களும் கையில் புஷ்பம் நிறைந்த தட்டுக்களை ஏந்திக்கொண்டு, பத்திபத்தியாகச் சைத்தியங்களுக்குப் போய்க்கொண்டிருப்பார்கள்.

அத்தகைய அசோகபுரமானது இப்போது பாழடைந்து, நிர்மானுஷ்யமாய்க் கிடந்தது. சைத்தியமும் விஹாரமும் சேர்ந்தமைந்த ஒரே ஒரு கட்டடத்திலே மட்டும், ஒரு சிறு தீபத்தின் ஒளி காணப் பட்டது. மற்றக் கட்டடங்கள் இடிந்து,

அமரர் கல்கி

தகர்ந்து பாழாய்க் கிடந்தன. இடியாத கட்டடங்களில் இருள் சூழ்ந்திருந்தது.

தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், அசோக சக்கரவர்த்தியால் நிலை நாட்டப்பட்ட தர்மபோதனை ஸ்தம்பம் மாத்திரம் தாவள்யமான சந்திரிகையில், "தர்மத்துக்குக்கு என்றும் அழிவில்லை" என்பதை ஸ்தாபித்துக்கொண்டு தலை தூக்கி நின்றது.

இத்தகைய அசோகபுரத்துக்கு இருட்டி இரண்டு நாழிகைக்குப் பிறகு ஆயனரும் சிவகாமியும் மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் அசோகருடைய ஸ்தம்பத்தின் அருகில் வந்தபோது, ஆயனர் வானை நோக்கி நெடிதோங்கி நின்ற அந்த ஸ்தம்பத்தை அண்ணாந்து நிலா வெளிச்சத்தில் பார்த்தார். அதுவரை அவர்களுக்குள் நிலவிய மௌனத்தைக் கலைத்துக்கொண்டு, "ஆஹா! அசோக சக்கரவர்த்தி எத்தகைய சர்வோத்தமர்! உலகத்திலே தோன்றும் அரசர்கள், சக்கரவர்த்திகள் எல்லாம் அசோகரைப் போன்றவர்களாயிருந்தால், இந்தப் பூவுலகம் எவ்வளவு ஆனந்த மயமாயிருக்கும்? யுத்தம் என்னத்திற்கு? பகைமை என்னத்திற்கு? ஒருவருடைய இரத்தத்தை ஒருவர் சிந்துவது என்னத்திற்கு? பூவுலக மாந்தர்கள் எல்லாம் ஒருவருக்கொருவர் அன்பு செய்துகொண்டு, அஹிம்சையை மேற்கொண்டு, ஆனந்தமாய் வாழலாகாதா?" என்றார்.

அப்போது சிவகாமி குறுக்கிட்டு, "அப்பா! இதென்ன! சற்று முன்னாலேதான் உங்களுக்கும் கத்தி எடுத்துக்கொண்டு யுத்தம் செய்ய ஆசை உண்டாவதாய்ச் சொன்னீர்கள். இப்போது அன்பு, அஹிம்சை, ஆனந்தம் என்கிறீர்களே உங்களுடைய மனது இப்படிச் சஞ்சலம் அடைந்து நான் பார்த்ததேயில்லை!" என்றாள்.

"உண்மைதான், சிவகாமி! என் மனது இப்போதெல்லாம் ஒரு நிலையில் இல்லை. புத்த பகவான் இந்த உலகத்தில் அன்பின் ஆட்சியை நிலை



நாட்டப் பார்த்தாரே? அவருடைய பிர யத்தனம் ஏன் வீணாகப் போயிற்று என் பதை நினைத்து மனம் சஞ்சலப்படு கிறது'' என்றார் ஆயனர்.

பிக்ஷு அப்போது வாய் திறந்து, "ஆயனரே! புத்த பகவானுடைய போத னையை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் மனிதகுலத்துக்கு இன்னும் ஏற்பட வில்லை! அதற்கு என்ன செய்வது?'' என்றார்.

யாரும் எதிர்பாராதபடி குண்டோ தரன் சம்பாஷணையில் கலந்து கொண்டு, ''மனிதகுலம் என்று பொதுப்படையாகச் சொன்னால் என்ன பிரயோசனம், அடிகளே? பிராணிகளிலே புலியும் இருக்கிறது. பசுவும் இருக்கிறது. ஜந்துக் களிலே பாம்பும் இருக்கிறது. அணிலும் இருக்கிறது. அதுபோலவே



மனிதர்களுக்குள்ளும் எத்தனையோ வித்தியாசம் இருக்கிறது. மௌரிய வம்சத்து அசோகவர்த்தனரைப் போலவே தான் நமது மகேந்திர பல்லவரும் தம் ராஜ்யத்தில் அன்பு மதத்தை ஸ்தாபிக்க முயன்றார். யுத்தம் என்பதே வேண்டாம் என்று நினைத்தார். அதைக் கெடுப்பதற்கு ஒரு புலிகேசியும், ஒரு துர்விநீதனும், ஒரு பாண்டியனும் புறப்பட்டு வந்தால், மகேந்திர பல்லவர் என்ன செய்வார்? பூலோகத்தில் பாம்பு இருக்கும்வரையில் கீரிப்பிள்ளையும் இருக்க வேண்டியதுதான். கீரிப்பிள்ளை இல்லாவிட்டால், மனிதனாவது தடியை எடுத்துப் பாம்பை அடித்துத்தானே தீர வேண்டும்?'' என்றான்.

''அடே அப்பா! நமது குண்டோதரன் இவ்வளவு வாசாலகன் என்று எனக்குத் தெரியவே தெரியாதே!'' என்றார் ஆயனர். புத்த பிக்ஷுவோ அருவருப்புடன் ஆத்திரத்துடனும் அவனை நோக்கினார்.

சிவகாமி, ''குண்டோதரன் சொல்வது நியாயம், அப்பா! உலகத்தில் பொல்லாதவர்கள் இருக்கும்வரையில் அவர்களை அடக்கக்கூடிய வீர புருஷர்களும் வேண்டும் அல்லவா?'' என்றாள்.

''ஆம் சிவகாமி, ஆமாம்! அது மட்டுமல்ல, உலகத்தில் எல்லாம் அன்புமயமாய்ப் போய்விட்டால், வீரம் என்பதே இல்லாமற் போய்விடும். வீரம் இல்லாத உலகம் என்ன உலகம்? அப்புறம் கதை ஏது, காவியம் ஏது, கலைதான் ஏது?'' என்றார் ஆயனர்.

குண்டோதரன், ''குருவே! நான் ஒன்று சொல்லட்டுமா? இந்த அசோகர் ஸ்தம்பம் இங்கே வெறும் ஸ்தம்பமாக நின்றுகொண்டிருப்பதில் யாருக்கு என்ன பிரயோசனம்? இதிலுள்ள உபதேசத்தைப் படித்து, அதை பின்பற்றி நடப்பார் யார்? இந்த ஸ்தம்பத்தை என்ன செய்ய வேண்டும் என்று நான் சொல்லட்டுமா...? என்று கூறிக்கொண்டே குண்டோதரன் ஸ்தம்பத்தைக் கையினால் தட்ட அது 'டாண்! டாண்!' என்று ஒலி செய்தது.

பின்னர், ''நல்ல எஃகினால் செய்திருக்கிறது; இதைக் கொல்லன் உலையில் போட்டு உருக்கி, வாள்களாகவும் வேல்களாகவும் செய்ய வேண்டும். இந்த ஸ்தம்பத்தை உருக்கினால், குறைந்த பட்சம் பத்தாயிரம் வாள்களும் வேல்களும் செய்யலாம்!'' என்றான் குண்டோதரன்.

அசோக ஸ்தம்பத்தினருகில் மேற்கண்ட சம்பாஷணை நடந்துகொண்டிருக்கையில், நாகநந்தி சற்று முன்னாலேயே நடந்து சென்று அருகிலே இருந்த புத்த விஹாரத்தை அடைந்தார். அதேசமயம் விஹாரத்துக்குள்ளேயிருந்து வயோதிக பிக்ஷு ஒருவர் கையில் தீபத்துடன் வாசலில் வந்தார். அந்தத் தீபத்தின் வெளிச்சத்தில் விஹாரத்தின் வாசலிலே நின்றுகொண்டு, பிக்ஷு குண்டோதரன் கொண்டு வந்த ஓலையைப் படித்தார். அப்போது அவருடைய முகத்தில் உண்டான மாறுதல்களைத் தீபச் சுடரின் சிவந்த ஒளியில் பார்த்துக்கொண்டிருந்த வயோதிக பிக்ஷுவே பயந்து போனார் என்றால், மற்றவர்கள் பாராததே நல்லதாய்ப் போயிற்று என்று சொல்ல வேண்டும்.

நாகநந்தி ஓலையைப் படித்து முடித்ததற்கும் ஆயனர் முதலியோர் விஹாரத்தின் வாசலில் வந்ததற்கும் சரியாயிருந்தது. உடனே அவர் தமது முகத்திலும் குரலிலும் அமைதி வருவித்துக்கொண்டு, மற்றொரு பிக்ஷுவைப் பார்த்து, ''சுவாமி! இவர்கள் எல்லாம் ஐந்தாறு தினங்கள் தங்கியிருக்கும்படி நேரிடலாம். அதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டும்'' என்று கூறினார். பின்னர் ஆயனரைப் பார்த்துச் சொன்னார்.

''ஆயனரே! உம்முடைய சீடனுக்கு உண்மையில் நான் நன்றி செலுத்த வேண்டும். இந்த ஓலையில் மிகவும் முக்கியமான விஷயந்தான் அடங்கியிருக்



கிறது. இதைக் கொண்டு வந்தவனை ஏரியிலே தள்ளிவிட்ட போதிலும் ஓலையைக் கொண்டு வந்தானல்லவா? இந்த ஓலையில் அடங்கிய விஷயத்தைக் கவனிப்பதற்காக நான் அவசரமாய்ப் போக வேண்டியிருக்கிறது. திரும்பி வருவதற்கு இரண்டு மூன்று நாள் ஆனாலும் ஆகலாம். அதுவரையில் நீங்கள் இங்கேயே சுகமாகத் தங்கி இருங்கள். இந்தப் பிக்ஷு உங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பார். மேலும் உங்களுக்கு ஒத்தாசையாகக் குண்டோதரனும் வந்து சேர்ந்து விட்டானல்லவா?''

இந்தக் கடைசி வாக்கியத்தைச் சொல்லும்போது, குண்டோ

தரனுடைய மார்பையே கிறி உள்ளே பார்ப்பது போல் பார்த்த நாகநந்தி, மறு கணம் சிவகாமியை நோக்கி, கனிவு ததும்பிய குரலில், "சிவகாமி! உங்களை அழைத்துக்கொண்டு வந்து இப்படி நடு வழியில் விட்டுவிட்டுப் போகிறேனே என்று நினைக்காதே! மிகவும் அவசர காரியமானபடியாலேதான் போகிறேன். சீக்கிரத்தில் திரும்பிவந்து உங்களுடன் சேர்ந்து கொள்வேன்" என்றார்.

அநேகமாக எல்லாப் புத்த விஹாரங்களிலும் உள்ளதுபோல் இந்தப் பாழடைந்த விஹாரத்திலும் நடுவில் புத்தர் சந்நிதி இருந்தது. இரண்டு பக்கத்திலும் பிக்ஷுக்கள் வசிப்பதற்குரிய அறைகள் இருந்தன. ஒரு பக்கத்து அறைகள் ஆயனருடைய குடும்பத்துக்காக ஒழித்துக் கொடுக்கப்பட்டன.

அவர்கள் தங்களுடைய அறைகளுக்குச் சென்ற பிறகு, இன்னொரு பக்கத்திலிருந்த இருண்ட அறைகளுக்கு நாகநந்தி சென்றார்.

இருபத்து மூன்றாம் அத்தியாயம்

தோற்றது யார்?

சிவகாமிக்கு அன்றிரவு வெகு நேரம் வரையில் தூக்கம் வரவில்லை; அன்று குண்டோதரன் கூறிய விஷயங்களையெல்லாம் எண்ணி எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தாள். குமார சக்கரவர்த்தியைப் பற்றி நாகநந்தி கூறிய அவதூறுகளை தான் முழுதும் நம்பிவிட்டதை நினைத்து வெட்கினாள். நாகநந்தியின் பேரில் அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது. அவருடைய பொய்மொழிகளைக் குறித்துக் கேட்டு, அவரை ஏளனம் செய்ய வேண்டுமென்ற ஆவல் அவள் மனத்தில் பொங்கிக்கொண்டிருந்தது.

இத்தகைய எண்ணங்களுக்கிடையில், மாமல்லரின் விருப்பத்தின்படி, தான் அரண்ய வீட்டில் இல்லாமற்போனது பற்றி அவருடைய கோபம் எத்தகையதாயிருக்குமோ என்ற கவலையும் தோன்றிக்கொண்டிருந்தது. அதை அவ்வளவு மன்னிக்க முடியாத பெருங் குற்றமாக மாமல்லர் கொள்ள மாட்டார் என்று, அவள் தன்னைத்தானே ஆறுதல் செய்துகொண்டாள். இவ்விதம் பலவாறாகச் சிந்தித்துக்கொண்டிருந்து, கடைசியில் தன்னையறியாது மேலிட்டு வந்த களைப்பினால் கண்ணயர்ந்தாள்.

அவள் அரைத் தூக்கமாயிருந்த போது, சமீபத்தில் எங்கேயோ பெருங் கூக்குரலைக் கேட்டுத் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு எழுந்திருந்தாள். கவனித்துக் கேட்டபோது, 'குய்யோ முறையோ' என்று குண்டோதரன் ஓலமிடும் சத்தமும், அத்துடன், 'டக் டக் டக் டக்' என்று குதிரை பாய்ந்து செல்லும் சத்தமும் கலந்துகேட்டன.

அயர்ந்து தூங்கிய ஆயனரைச் சிவகாமி எழுப்பினாள். இருவரும் வாசலில் வந்து பார்த்தபோது, அங்கே ஓலமிட்டுக் கொண்டிருந்த குண்டோதரன், "ஐயோ! குருவே; என்னுடைய குதிரையைப் பிக்ஷு திருடிக்கொண்டு போய் விட்டார்!" என்று கூச்சலிட்டான். ஆயனர் அவனுக்கு, "அப்பனே! அந்தக் குதிரை உன்னுடையதல்லவே!" என்று சமாதானம் சொல்லிப் பார்த்தார்.

குண்டோதரன், "அப்படித்தான் நாகநந்தி குதிரையைத் திருடிக்கொண்டு போனாரே? என்மேல் என்னத்திற்காகப் பாம்பைப் போட வேண்டும்!" என்று அலறினான்.

"அது என்ன சமாசாரம்?" என்று ஆயனர் கேட்டதற்கு, குண்டோதரன் கூறிய விவரமாவது: புத்த பிக்ஷு இரகசியமாய் எழுந்து வந்து, வாசலில் கட்டியிருந்த குதிரையை அவிழ்த்து, அதன்

மேல் ஏறிக்கொண்டார். அதேசமயத்தில் தற்செயலாகக் கண் விழித்த குண்டோதரன் ஓடிப் போய்க் குதிரையைப் பிடித்தான். பிக்ஷு தம் கையிலிருந்த ஒரு பையை அவிழ்த்து அதற்குள்ளிருந்து எதையோ எடுத்து அவன் மேல் வீசினார். அது ஒரு நாகப் பாம்பு என்று கண்டதும், குண்டோதரன் அலறிக் கொண்டு அப்பால் ஓட, குதிரையை விட்டுக்கொண்டு



பிக்ஷு போய்விட்டார்.

குண்டோதரனுடைய வார்த்தையில் ஆயனருக்கும் சிவகாமிக்கும் நம்பிக்கை உண்டாகவில்லை. ஏதோ உளறிக்

கொட்டுகிறான்; ஒருவேளை கனவு கண்டானோ என்னவோ என்று நினைத்தார்கள்.

குண்டோதரன், "குருவே! என்னுடைய அருமைக் குதிரையை விட்டுவிட்டு என்னால் இருக்க முடியாது. எப்படியாவது திரும்பப் பிடித்துக்கொண்டு வந்து சேர்வேன்!" என்று சொல்லிவிட்டு, குதிரை போன திசையில் அவனும் ஓடி மறைந்தான்.

ஆயனரும் சிவகாமியும் அசோகபுரத்துக்கு வந்து புத்த விஹாரத்தில் வசிக்கத் தொடங்கி ஐந்து தினங்கள் ஆயின.

முதல் மூன்று நாள் விசேஷம் ஒன்றும் நடைபெறவில்லை. சிவகாமிக்குப் பொழுது போவது கஷ்டமாயிருந்தது. ஆயனருக்கோ அதை விடக் கஷ்டமாயிருந்தது. ஆனால், புத்த பிக்ஷுவின் துணையை நம்பி வந்தவர்களாகையால், அவருடைய யோசனை இல்லாமல் மேலே எங்கே போவது என்பதை ஆயனரால் நிச்சயிக்கக் கூடவில்லை. குண்டோதரன் கூறிய விவரங்களைக் கேட்ட பிறகு, சிவகாமிக்கு மேலே போகும் ஆவலே இல்லாமல் போய்விட்டது. "திரும்பிக் காஞ்சிக்குப் போனால் என்ன?" என்ற எண்ணம் அடிக்கடி தோன்றியது.

இந்த நிலைமையில், அவர்கள் அசோக புரத்துக்கு வந்த நாலாம் நாள் இரவு, சில அபூர்வ சம்பவங்கள் நடைபெற்றன.

அன்று அஸ்தமன நேரத்தில் எங்கேயோ வெகுதூரத்தில் வான முகட்டின் அருகில், இடைவிடாமல் இடி இடிப்பது போன்ற சத்தம் முதலிலே வெகு இலேசாகக் கேட்டது. உற்றுக் கேட்கக் கேட்க, சத்தம் அதிகமாகி வந்ததாகத் தோன்றியது. சற்று நேரத்துக்கெல்லாம் அதுவே சமுத்திர கோஷம்போல் தொனிக்கத் தொடங்கியது. முதலிலே தூரத்திலிருந்த சமுத்திரம் வரவர நெருங்கி வருவது போலவும் இருந்தது.

திடீரென்று சத்தம் பெரிதாகி அருகிலே நெருங்கி, பல்லாயிரம் பேர் தடதடவென்று ஓடி வருவது போன்ற சத்தமாக மாறிற்று.

ஆயனரும் சிவகாமியும் உள்ளேயிருந்து வாசற் பக்கம் ஓடி வந்து பார்த்தார்கள். சற்றுத் தூரத்தில் மரங்களின் இடுக்கு வழியாகச் சிதம்பரம் சாலை தெரிந்தது. அதிலே அநேகம் பேர் தலைகால் தெரியாமல் ஓடிக் கொண்டிருந்த காட்சி புலப்பட்டது.

அந்தக் கூட்டத்தின் நடுவே, அம்பாரி வைத்த பெரிய யானை ஒன்று அதிவிரைவாக நடந்து சென்றது. அதைச் சூழ்ந்து ஏழெட்டுக் குதிரைகளும் சென்றன. குதிரைகள் மேல் ஆயுதபாணிகளான ஆட்கள் இருந்தார்கள். அதே கூட்டத்தில் ஒரு புறத்தில் உயரமான கொடிமரம் ஒன்றைத் தூக்கிக் கொண்டு ஓடிய சிலர் காணப்பட்டார்கள். அந்தக் கொடி தாறுமாறாய்க் கிழிந்திருந்தது.

அதற்குப் பிறகு அன்றிரவெல்லாம் பத்துப் பத்துப் பேராகவும், ஐம்பது நூறு பேராகவும், அதற்கு மேற்பட்ட கூட்டமாகவும் அடிக்கடி சாலையில் மனிதர்கள் தடதடவென்று ஓடிய சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது.

சில சமயம் அசோக ஸ்தம்பத்தைச் சுற்றிக்கொண்டு, புத்த விஹாரம் இருந்த பாழும் வீதி வழியாகவும் சிற்சில கூட்டத்தார் ஓட்டமும் நடையுமாகச் சென்றதைச் சிவகாமி கவனித்தாள்.

இதையெல்லாம் பற்றிச் சிவகாமி ஆயனரைக் கேட்க, அவர், "எங்கேயோ யுத்தம் நடந்திருக்கிறது, அம்மா! யுத்தத்தில் ஒரு கட்சி தோற்றுவிட்டதாகத் தெரிகிறது. தோற்றவர்கள்தான் இப்படி நிலைகுலைந்து ஓடுவார்கள்" என்றார்.

"அப்பா! தோற்றவர்கள் பகைவர்களாகத்தான் இருக்க வேண்டும். ஓடுகிறவர்களைப் பார்த்தால், பல்லவ வீரர்களாகத் தோன்றவில்லையல்லவா?" என்றாள் சிவகாமி.

"நாம் என்னத்தை அம்மா கண்டோம்? இருட்டிலே என்ன தெரிகிறது! மாமல்லர் படைத்தலைமை வகித்த கட்சி ஜெயித்திருக்க வேண்டுமென்றுதான் நானும்



கருதுகிறேன்'' என்றார் ஆயனர்.

இவ்வளவு தடபுடலும் இரவு முடிந்து, பொழுது விடிவதற்குள்ளாக நின்றுவிட்டது. சூரியோதயத்துக்குப் பிறகு சத்தம், சந்தடி, ஓட்டம் ஒன்றுமேயில்லை.

சிவகாமி புத்த விஹாரத்தில் வாசலில் நின்று சாலையை நோக்கிய வண்ணம் இருந்தாள். யாராவது அந்தப் பக்கம் வர மாட்டார்களா? வந்தால் நேற்று இரவு நிகழ்ச்சிகளைப் பற்றி அவர்களிடம் விசாரிக்கலாமே என்று காத்திருந்தாள்.

சூரியன் உதயமாகி, ஒரு ஜாமம் இருக்கும், காலையிலிருந்து குடி கொண்டிருந்த நிசப்தம் சட்டென்று கலைந்தது.

சாலையோடு குதிரைகள் பாய்ந்து வரும் சத்தம் கேட்டது.

அடுத்தாற்போல் குதிரைகளும் காணப்பட்டன. அப்பப்பா! எவ்வளவு குதிரைகள்? பத்து ஐம்பது, நூறு, ஆயிரம்கூட இருக்கும் போலிருக்கிறதே? அவ்வளவு குதிரைகள் மீதும் வேலும் வாளும் பிடித்த வீரர்கள் எவ்வளவு உற்சாகமாக அமர்ந்திருக்கிறார்கள்? அந்தக் குதிரைப் படையின் மத்தியில் ஒரு கம்பீரமான கருநிறக் குதிரையின் மேல் ஒரு வீரன் ரிஷபக் கொடியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டிருப்பதைக் கண்டதும், சிவகாமியின் உள்ளமும் தோள்களும் பூரித்தன. அவள் நினைத்தபடியே பகைவர்கள்தான் தோற்று ஓடுகிறார்கள் என்றும் பல்லவ சைனியந்தான் ஓடும் பகைவர்களைத் தொடர்ந்து செல்கிறதென்றும் தீர்மானித்துக்கொண்டாள்.

அந்தப் பெரிய குதிரைப்படை சாலையோடு போய்ச் சற்று நேரத்துக்கெல்லாம் இரண்டு தனிக்குதிரைகளும், அவற்றின் பின்னால் ஒரு ரதமும் விரைந்து வருவது காணப்பட்டது. இதென்ன விந்தை? அந்த இரு குதிரைகளும் ரதமும் சாலையிலிருந்து குறுக்கே திரும்பி, அசோக ஸ்தம்பத்தையும் சிவகாமி இருந்த புத்த விஹாரத்தையும் நோக்கி வருகின்றனவே? குறுக்கு வழியாக அந்தத் தெருவில் புகுந்து சென்று, சாலை ஏறி, முன்னால் போன குதிரைப் படையைப் பிடிப்பதற்காக இவர்கள் இப்படி வருகிறார்கள் போலிருக்கிறது!

ஆஹா! அந்த முதல் குதிரை மேல் வருகிறது யார்? தன் கண்கள் காண்பது உண்மையா? - சிவகாமியின் இருதயம் அப்படியே நின்றுவிடும் போலிருந்தது!

ஆம்; அதன்மேல் வந்தவர் மாமல்ல நரசிம்மர்தான்!

விஹாரத்தின் வாசலில் நின்ற சிவகாமி, திடீரென்று மாமல்லரைக் குதிரை மீது பார்த்ததும், எங்கிருந்தோ, எதனாலோ அவளுடைய கண்களில் கண்ணீர் வந்து நிறைந்துவிட்டது. உணர்ச்சி மிகுதியினாலும் காரணந் தெரியாத நாணத்தினாலும், சிவகாமி சட்டென்று திரும்பி, உள்ளே போவதற்குக் காலை எடுத்து வைத்தாள்.

அதேசமயத்தில் 'ஆ!' என்ற குரல் ஒலியும், வேகமாக வந்த குதிரையைத் திடீரென்று இழுத்துப் பிடித்து, அது தட் தட் என்று கால்களைத் தட்டிக்கொண்டு நின்ற சத்தமும் கேட்டன.

சிவகாமி வீதிப் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

மாமல்லருடைய கண்கள் தீவிரமான நோக்குடன் அவளுடைய நெஞ்சையே ஊடுருவது போல் பார்த்தன. அந்தப் பார்வையில் சொல்ல முடியாத வியப்பும் மகிழ்ச்சியும் அளவிடக் கூடாத அன்பும் ஆத்திரமும் கலந்திருந்தன.

இதெல்லாம் ஒரே கணந்தான்; மறு கணத்தில் குதிரை மீண்டும் காற்றாய்ப் பறந்து சென்றது.

மாமல்லருக்குப் பின்னால் வந்த தளபதி பரஞ்சோதியும் சிவகாமியைப் பார்த்த போதிலும் அவருடைய குதிரை ஒரு கணமும் நிற்காமல் மேலே சென்றது.


அவர்களுக்குப் பின்னால் வந்த ரதத்தைக் கண்ணபிரான்தான் ஓட்டி வருகிறான் என்று தெரிந்ததும் சிவகாமி மீண்டும் வாசற்புறத்துத் தூணண்டை வந்து நின்று, ரதத்தை நிறுத்தும்படி கையினால் சமிக்ஞையும் செய்தாள்!

கண்ணபிரான் குதிரைகளை இழுத்துப் பிடித்து ரதத்தை நிறுத்தினான். குதிரைகள் திடீரென்று நின்றபடியால், அச்சு முறிவது போன்ற சடசட சத்தத்துடன் 'தடக்' என்று நின்றது.


(தொடரும்)



* சிவராமன்



* நடராஜன்



* சுப்ரமணியம்

பாயசம், வடை, பீடா, பழம், மினரல் வாட்டர் என பதினாறு வகை ஐட்டங்களுடன் தடபுடல் காட்டிய அம்மாவின் அன்னதான திட்டத்தின் தற்போதைய நிலைமை என்ன என அறியும் ஆவலுடன் மயிலை, கபாலீஸ்வரர் கோயிலுக்கு திடீர் விசிட் அடித்தபோது...

அன்றைக்கு வெள்ளிக்கிழமை என்பதால், அம்பாள் சந்நிதியில் நல்ல கூட்டம்.

"இங்கே அன்னதான மண்டபம் எங்கே சார் இருக்கு?" என்று கேட்டதும் வழி காட்டினார் ஒரு கோயில் ஊழியர். ஆனால் அவர் காட்டிய இடத்தில், மதிய உணவு போடும் அறிகுறியே இல்லை. கல் தரையின்மீது மஞ்சள் நிற பெயின்டால் பலகைகள் வடிவத்தில் செவ்வகங்களாக வரைந்து, 102, 103, ... என எண்கள் குறிக்கப்பட்டிருந்தன.

''பதினோரு மணிக்கே டோக்கன் கொடுத்து முடிச்சுடுவாங்களே. நீங்க லேட்டா வந்துட்டீங்க. எதுக்கும் மகா மண்டபத்துலே விசாரிச்சுப் பாருங்க.'' என்றார் இன்னொரு பக்தர்.

மகா மண்படத்தில் ஆறடிக்கு இருந்த பளபள அன்னதான உண்டியலைத் திறந்து காணிக்கையை எண்ணிக் கொண்டிருந்தனர்.







''இருபத்து மூவா யிரத்து நானூற்று ஐந்து ரூபாய்!'' என்று பதிவேட்டில் கையெழுத்திட்டு நிமிர்ந்தார் அறநிலையத்துறை செயல் அலு வலர் சுப்ரமணியம்.

"அன்னதான டோக்கன் எங்கே கிடைக்கும்?"

"ஆரம்பத்துலே இரண்டு நாள் டோக்கன் சிஸ்டம் வைச் சிருந்தது என்னவோ நிஜம்தான். உச்சி வேளை பூஜை தரிசனம் முடிஞ்சு வர்ற பக்தர்களுக்கு மதிய உணவு டோக்கன் தரப்

கபாலியே துணை!

பட்டது. ஆனால் அப்படியெல்லாம் கட்டுப்பாடு பண்ணக்கூடாது; 'பசி'னு யார் வந்தாலும் 'இல்லை'னு சொல்லாமல் சாப்பாடு போடணும்னு அமைச்சகத்துலேயிருந்து உத்தரவு வந்துடுச்சு. அதையே கடைப்பிடிக்கிறோம்" என்றார் சுப்ரமணியம்.

முதல் நாள் அம்மா ஆரம்பித்த அன்னதான விழாவில் இரண்டாயிரத்து ஐந்நூறு பேர் உணவருந்த, அன்றைய செலவு சுமார் ஒரு இலட்சத்தை, ஏற்றுக் கொண்டவர் அறுசுவை அரசு நடராஜன். பரிமாறுவது அம்மாவின் தங்கக்கை என்பதாலும், மாண்புமிகுக்கள், கட்சிப் பிரமுகர்கள், வி.ஐ.பிகள் என திரளாகக் கலந்து கொண்டு சாப்பிட்டதாலும், அன்றைக்கு மட்டும் தலைவாழை ஸ்பெஷல் மீல்ஸ். ஆனால் அதற்குப் பின்பு ஜனதா மீல்ஸ் மட்டுமே! நாங்கள் சென்றிருந்த அன்று, சாதம், வெண்டைக்காய் சாம்பார், முட்டைக்கோஸ் கூட்டு, தக்காளி ரசம், தக்காளி ஊறுகாய், மோர்...

கோயிலில் சுவாமிக்குப் பிரசாதம் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும் என்பதாலும், கோயில் பிராகாரத்தில் எச்சில் இலைகளைத் தவிர்க்க வேண்டும் என்பதாலும், அருகிலுள்ள கருணை இல்லவளாகத்தில் உணவு சமைக்கப்பட்டு, அங்கேயே பரிமாறப்படுகிறது. சுகாதாரத்தோடு, கோயிலின் புனிதமும் பாதுகாக்கப்படுவதில் ஓர் ஆறுதல்.

கார் கதவைத் திறந்துகொண்டு யாராவது இறங்கினால், உடனே அன்னதான திட்டத்துக்கு நன்கொடை அளிக்கச் சொல்லி அன்புத் தொல்லை தரப்படுகிறதாமே என்று விசாரித்தால், அப்படியெல்லாம் இல்லை என்று மறுக்கிறார் சுப்ரமணியம்.

"நாங்க யாரையும் வற்புறுத்தறதில்லை. வாரம் ஒரு முறை உண்டியலைத் திறக்கிறோம். விருப்பப்பட்டு தரப்படும் நன்கொடையை ஏற்றுக் கொள்கிறோம். அன்னதான உண்டியலைத் திறந்து வைத்த மேடம், அவங்க கையாலே ஆறாயிரம் ரூபாய் போட்டு ஆரம்பிச்சு வைச்சாங்க. அமைச்சர்களும், கட்சிப் பிரமுகர்களும் பணம் போட்டாங்க. அப்போ அறுபத்து மூவர், தேர் திருவிழான்னு கோயில்லே விழாக்காலம். ஐம்பத்து மூவாயிரத்து நானூற்று இருபத்தைந்து ரூபாய் சேர்ந்திருந்துச்சு. இந்த வாரம் இருபத்து மூவாயிரம் ரூபாய். காணிக்கை எந்த அளவு வந்தாலும் சாப்பாடு மட்டும் உயர்தரமாகவே இருக்கணும்னு ரொம்ப கவனமா இருக்கோம்." என்றவர், கருணை இல்லத்துக்கே அழைத்துக் கொண்டு போய் காட்டினார்.


கபாலீஸ்வரர் கோயிலை ஒட்டியே அமைந்துள்ளது கருணை இல்லம். நாம் சென்று பார்த்தபோது இரண்டாவது பந்தி நடந்து கொணடிருந்தது. ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள் எல்லாருமே மயிலாப்பூர் வாசிகள். பிச்சைக்காரர்கள், ரிக்ஷா தொழிலாளர்கள், தெருவோர வியாபாரிகள்தான் அதிகம் காணப்பட்டார்கள்.

"முதல் பந்தியிலே கோயிலுக்கு வர்ற பக்தர்களைத்தான் அனுமதிக்கிறோம். அடுத்தடுத்த பந்திகளில் 'பசி'னு வர்ற எல்லாரையும் உட்கார வைக்கிறோம். நேற்று கூட சேலத்துலேயிருந்து ஒரு பஸ் நிறைய சுற்றுலாப் பயணிகள் வந்துட்டாங்க. உடனே இல்லைனு சொல்லாமல், மறுபடி உலை வைச்சு, ஆறுபடி அரிசி வடிச்சு, சுடச்சுட சாப்பாடு போட்டோம்." என்றார் பந்தியைக் கண்காணிக்கும் நடராஜன். 'சாப்பாடு ரொம்ப நல்லா இருக்கு' என்று பாராட்டு கிடைத்திருப்பதில், அறநிலையத் துறை ஊழியர்களுக்குச் சந்தோஷம்தான் என்றாலும், சில விஷயங்களைத் தடுக்க முடியவில்லை என்று புலம்புகிறார்கள்.

எவர்சில்வர் தம்ளர்கள் காணாமல் போவது, சாப்பிட்டதும், பாலிதீன் கவரில் 'பார்சல்' கட்டிச் சென்று வெளியே விற்பது, சண்டைக்கு வரும் 'குடி'மகன்கள், கத்தி,



அருள்வாக்கு!



எல்லாமே பகவான் ஸங்கல்பந்தான். ஆனால் கார்ய ரூபத்தில் ஒவ்வொரு கருவி பண்ணினதாகக் காட்டுகிறார். ஒரோரு ஸந்தர்ப் பத்தில் அதர்மம் ஓங்குகிறதென்றால் அதுவும் அவர் ஸங்கல்பந்தான். ஆனால், 'அவர் பரமாத்மாவாகவே எங்கேயோ உட்கார்ந்து கொண்டு ஸங்கல்பம் செய்தார். உடனே லோகம் அதர்மமாகிவிட்டது' என்று எங்கே யாவது படித்திருக்கிறோமோ? அஸுரர், ராக்ஷஸர், துஷ்ட ராஜாக்கள், தப்பான கொள்கைகளை மதமாக ப்ரசாரம் செய்பவர் கள், இன்னம் பல பேர், திருடர்கள், கொலை காரர்கள், ஃபோர்ஜரிக்காரர்கள் என்பவர்கள் கார்ய ரூபத்தில் அநேகம் பண்ணுவதால்தான் அதர்மம் தலையெடுக்கிறது. கலியில் ஜனங் களின் மனஸ் கெட்டதுகளில் போகிறது என்றால் அதுவும் கையால், காலால் செய்யும் கார்யந்தான்! மனஸ் கெட்டதை நினைத்த பிறகு, அந்தக் கெட்டதை அநுபவிப்பதற்காகக் கையும் காலும் வெளிக் கார்யமாகவே கெட்டதைச் செய்ய ஆரம்பிக்கிறது. இப்படிக் கருவி, கார்யங்களாலேயே லோகத்தில் எல்லாம் நடக்கிறபோது, (கெட்டது மட்டு மில்லை, நல்லதுந்தான் - எல்லாமே கருவி, கார்யங்களால்தான் நடத்துகிறானே தவிர, ஸகலமும் அவன் ஸங் கல்பமென்றாலும், ஸங்கல்ப மாத்ரத்தால் நடந்ததாகக் காட்டு வதேயில்லை; - இப்படி நடந்து வரும்போது) அதாவது அவன் நடத்தி வருகிறபோது, அதர்மத் தின் பெரிய எழுச்சியும் இப்படியே நடக்கும் போது, தர்மத்தின் மறுமலர்ச்சி மட்டும் ஸங்கல்ப மாத்ரத்தாலேயே நடக்க வேண்டும் என்றால் எப்படி? அதற்கும் லோகத்தில் கருவி, கார்யங்களைக் காட்டாவிட்டால் அவனுடைய 'ஸ்போர்ட்'டில் ரொம்ப விறு விறுப்பான ஒரு அம்சம் இல்லாமல் செய்கிற மாதிரிதான்!

அதனால், தர்மம் குறையும்போது அதை அபிவ்ருத்தி செய்வதற்காகத் தன் தூதர்கள் மாதிரியான மஹான்களைக் கருவியாக அனுப்பவான். அதுவும் பலிக்காது என்கிற கட்டத்தில் தானே தன் கருவியாகி அவதாரம் எடுப்பான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

பிளேடு போன்ற ஆயுதங்கள் காட்டி மிரட்டும் கட்சிக்காரர்கள் என நாளும் சில சில்லறைத் தகராறுகளைச் சமாளிக்க வேண்டியிருக்கிறதாம்.

"அம்மாவின் அன்னதான திட்டத்துக்கு நன்கொடையாளர்களும் சேவை மனப் பான்மைமிக்க உள்ளங்களும் மனமுவந்து உதவுவதால், இந்தக் குறைகளைச் சமாளித்து விடலாம்" என்றார் முருகானந்தம் என்ற பக்தர்.

ரமணி என்பவர் ஐந்து இலட்சம் ரூபாய் நன்கொடை தந்துள்ளாராம். பாடியில் ஜெராக்ஸ் கடை வைத்திருக்கும் சிவராமன் என்பவர் தினமும் சாப்பாட்டு வேளையில் ஆஜராகி, உணவு பரிமாறுகிறார்.

"அப்பன் கபாலீஸ்வரன் உத்தரவு" என்று புன்னகை செய்கிறார் சிவராமன்!

அம்மாவின் விருப்பத்துக்குரிய திட்டம் என்பதால், எப்போது அமைச்சகத்திலிருந்து ஃபோன் வருமோ, சி.எம். ஆபிஸிலிருந்து ஃபோன் வருமோ என்று விரல் நுனியில் தகவல்களை வைத்துக் கொண்டு எந்நேரமும் இலேசான பதற்றத்துடன் இருக்கிறார்கள் அலுவலக ஊழியர்கள்.

"சார்... அன்னதான..." என்று கேட்டாலே, "இன்னிக்கு நூற்று நாற்பது பேர் சாப் பிட்டாங்க. மூணாவது பந்தி நடக்குது. வெண்டைக்காய் சாம்பார், ரசம்.." என்று மளமளவென்று தகவல் சொல்கிறார்கள்.

விடை பெற்றுக் கொண்டு கிளம்பிய போது,


"நிதிமிகுந்தோர் பொற்குவை தாரீர். நிதி குறைந்தோர் காசுகள் தாரீர். ஆன்றோர், பெரியோர் ஆசிகள் தாரீர்" என்று பலகை அன்புடன் கேட்கவே, எம்மாலியன்ற அளவு ஆசிகள் தந்துவிட்டு கிளம்பினோம்.

பக்தர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற் றுள்ள இந்தத் திட்டம், தேய்ந்து கட்டெறும் பாகாமலிருக்க, கடவுள் கபாலியே துணை.

- அனுராதா சேகர்

படங்கள் : யோகா

விமர்சனத் துறையில் ஒரு கிழச்சிங்கம்...





கர்நாடக சங்கீதத்தில் மிகுந்த தேர்ச்சியடைந்த பலர் இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி நாளிதழ்களில் பணிபுரிந்ததுண்டு. எக்ஸ்பிரஸ் சென்னைப் பதிப்பின் ஆசிரியராக இருந்த கே.வி. ராமநாதன், இசைத் துறையில் பெரும்புலமை பெற்றவர். உயர்ந்த கலாரசிகர்.

தினமணி ஒரு சிறந்த வயலின் வித்வானை உதவியாசிரியராகப் பெற்றிருந்தது. அவர் கே.பி. நீலமணி. தம் 'புல்லின் இதழ்கள்' என்ற சங்கீத நாவலுக்காக, கலைமகள் நாராயணஸ்வாமி ஐயர் பரிசு பெற்றவர். வாழ்வின் கடைசி சில ஆண்டுகள், பாவை சந்திரனை ஆசிரியராகக் கொண்ட 'புதிய பார்வை' இதழில் பணியாற்றியவர்.

கலைகளை - முக்கியமாக கர்நாடக இசையையும் பரத நாட்டியத்தையும் - போற்றி வளர்த்ததில் எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் பங்கு கணிசமானது. அந்த நிறுவனத்தின் ஆஸ்தான கலைவிமர்சகர் போல் பல்லாண்டுகள் இயங்கியவர் சுப்புடு.

இசைவிழா நடக்கும் டிசம்பர் மாதத்தையொட்டி, சுப்புடு தில்லியிலிருந்து சென்னை வந்துவிடுவார். எக்ஸ்பிரஸ், தினமணி இரண்டுக்கும் சேர்த்து அவர் விமர்சகராக இயங்குவது வழக்கம். பெரும்பாலும் எக்ஸ்பிரஸ் எஸ்டேட்டுக்கு அருகில் உள்ள கன்னிமரா உணவகத்தில் தங்கிக் கொள்வார். அவருக்கு ஓர் உதவியாளரும் உண்டு.

நாள்தோறும் இசை, நடன நிகழ்ச்சிகளுக்குச் செல்வார். இரவு அறைக்கு வந்து நடந்துகொண்டே தம் உதவியாளருக்கு விமர்சனத்தை டிக்டேட் செய்வார். தமிழிலும் பிறகு ஆங்கிலத்திலும் மறுநாள் காலை விமர்சனம் அலுவலகத்திற்கு வந்துவிடும். மறுநாள் தமிழ், ஆங்கில நாளிதழ்கள் அவரது காரசாரமான விமர்சனத்தைச் சுடச்சுடத் தாங்கி வெளிவரும்.

சாவி கதிருக்கு ஆசிரியராக இருந்த காலத்தில்தான் இந்த மரபு தொடங்கியது என்று நினைக்கிறேன். பின் கேயார்வி, நா.பா என்று அடுத்தடுத்து கதிர் ஆசிரியர்கள் மாறியபோதும், இசை விழாவுக்கான கலை விமர்சகர் மாறவில்லை. சுப்புடுவின் எழுத்தை எக்ஸ்பிரஸ் குடும்பப் பத்திரிகைகள் தொடர்ந்து வெளியிட்டு வந்தன. பல வருஷங்கள் இந்த மரபு தொடர்ந்தது.

பனிச்சென்று நெற்றிப் பொட்டில் அறைகிற மாதிரி, வசீகரமான மொழியில் விமர்சனம் எழுத சுப்புடுவால்தான் முடியும். அவர் எழுதும் கலை விமர்சனங்களில் எனக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துகள் இருந்ததுண்டு. ஆனாலும் அவர் அபிப்ராயங்கள் மேல் எனக்கு மரியாதை உண்டு.

சுப்புடு எழுத்தின் தூக்கலான குணங்கள் இரண்டு. ஒன்று துணிச்சல். இன்னொன்று நகைச்சுவை. இப்படி அப்படி என்றில்லாமல் ஒட்டுமொத்தமாகத் தாக்கித்

சுவடுகள்-15

திருப்பூர் கிருஷ்ணன்

தகர்ப்பது, அல்லது ஐஸ்மழை பொழிந்து கலைஞர்களை ஏகத்துக்குக் குளிரச் செய் வது என இரண்டு அதிகபட்ச எல்லை களிலும் அவர் பேனா இயங்குவதுண்டு.

அவரது கலை விமர்சனங்களால் நாட்டில் என்னென்னவெல்லாம் நடந் திருக்கின்றன! நடனமாடும் ஹேம மாலினியும் யாமினி கிருஷ்ணமூர்த்தியும் கோர்ட்டில் அவரை எதிர்த்து வழக் காடினார்கள். ஒருமுறை அரசியல் தலைவர் அந்தஸ்தை அடைந்துவிட்டார் சுப்புடு. தஞ்சையில் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டினார்கள்! தம் நெஞ்சம் திறந்து அவர் எழுதிய விமர்சனங்களால் திருவையாறில் சட்டை கிழிக்கப்பட்டுத் தம் திறந்த நெஞ்சோடு வெளியேறினார்! 'சுப்புடுவும் நாய்களும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்' என்று ஒரு கச்சேரியில் அறி விப்புச் செய்ததை அறிந்து சுப்புடுவுக்குப் பரம சந்தோஷம். எதற்கும் அயராத அந்த எண்பத்தைந்து வயதுக் கிழச் சிங்கத்தின் மேல் எனக்கு அன்பும் மதிப்பும் உண்டு. (அவர் தம்மைச் சிங்கம் என ஒப்புக் கொள்ளக்கூடும். ஆனால் கிழவர் என்று ஒப்புக் கொள்வாரா எனத் தெரிய வில்லை!)



சுப்புடுவுக்கும் செம்மங்குடிக்கும் இடையே பச்சைப் புல்லைத் தண் ணீர் தெளித்துப் போட்டால் கூடப் பற்றிக் கொள்ளும். செம்மங்குடியைத் தொடர்ந்து தாக்குவதைக் கோட்பாடாகக் கொண்டவர் சுப்புடு. சாவி, சுப்புடுவுக்கு ஒரு பாராட்டு விழா ஏற்பாடு செய் தார். சென்னை மயிலை ஆர்.ஆர். சபாவில் நிகழ்ச்சி. பேச்சாளர்களில் ஒருவர் செம்மங்குடி! சாவி கதிரை விட்டு வில கித் தம் பெயரிலேயே தனி வார இதழ் நடத்திக் கொண்டிருந்த போது நடந்தவிழா. 'செம்மங்குடியும் சுப் புடுவும் என்ன பேசு கிறார்கள் என்று நீங் களும் வந்து கேளுங் களேன்!' என்று ஃபோன் செய்தார் சாவி.

ஆவலோடு விழா வுக்குப் போனேன்.

"இந்த ஆபீஸ்ல 'உங்களுக்குப் பணி செய்ய எங்களுக்கு உதவுங்கள்'னு எழுதி வைச்சிருக்காங்களே, அதுக்கு என்ன அர்த்தம்?"

"வேற என்ன...! லஞ்சம் கொடுங்கன்னு அர்த்தம்!"

- சீர்காழி வி. ரேவதி



"ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்றால் என்ன?"

"பல் டாக்டர்கிட்ட கேட்டாத்தான் தெரியும் சார்!"

- புளியரை கணேசன்

ஏராளமான கூட்டம். செம்மங்குடி எழுந்தார். 'சுப்புடு என்னைத் தொடர்ந்து கண்டனம் பண்ண வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அவர் கண்டனம் பண்ணினால்தான் எனக்கு நிறைய கச்சேரி புக் ஆகிறது. அப்படி ஒரு ராசி சுப்புடுவுக்கு!' என்று விஸ்தாரமாகப் பேசினார். 'அடடா! செம்மங்குடி என்ன அழகாக மேடையில் பேசுகிறார்! அவர் கச்சேரி செய்வதை நிறுத்திவிட்டுப் பேச்சாளராக இயங்கலாமே!' என்று பரிந்துரைத்தார் சுப்புடு!

கதிரில் ஒருமுறை சுப்புடு எழுதிய ஒரு வரி படுத்திய பாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஸ்ரீவித்யா நடனமாட வந்த புதிது. ஸ்ரீவித்யா அப்போது(ம்) குண்டாக இருப்பார். தமிழ் ரசிகர்கள் பருமனான பெண்மணிகளை அந்த ஒரு காரணத்திற்காக ஒருபோதும் வெறுத்ததில்லை. நடிகையர் திலகங்களின் உடல் எடையைப் பொருட்படுத்தாமல், அவர்களது நடிப்பை எடை போட்டு மெச்சும் பண்பாடு நம்மவரிடம் உண்டு. ஸ்ரீவித்யா கலையுலகில் நிகழ்த்திய சாதனைகளைக் குறைத்து மதிப்பிட முடியுமா! அபூர்வராகங்களில் பாலசந்தர், அவரது விழிகளை மையமாக வைத்தே படமெடுத்தார் என்று சொல்வதுண்டு.

ஸ்ரீவித்யாவின் நடனத்தைப் பார்த்துவிட்டு சுப்புடு கதிரில் எழுதினார். 'சுற்றி வரலாம் உலகை, சுற்றளவைக் குறைத்துக்கொண்டால்!' என்று. ஒரு நடனமணியின் கலைத்திறன் பற்றி விமர்சித்தால் சரி. ஆனால் தோற்றத்தைப் பற்றிப் பேசுவதாவது! ஏகப்பட்ட கண்டனக் கடிதங்களைச் சம்பாதித்துக் கொண்ட வாக்கியம் இது. சுப்புடு பதில் சொல்லியாக வேண்டும். என்ன சொல்லப்போகிறார்?

'ஸ்ரீ வித்யாவின் கலைத்திறமை பற்றி நான் குறை சொல்லவில்லையே? ஆனால் தோற்றம் நடனத்தில் ஒரு முக்கிய அம்சம். தோற்றமே நடனக் கலையின் ஆதாரம். அம்மையார் தன் தாயார் எம்.எல்.வி போல் பாட வந்திருந்தால் நான் ஏன் அவர் தோற்றத்தைப் பற்றிப் பேசப் போகிறேன்! அவர் உலகத்தைச் சுற்றி வர வேண்டும் என்பதே என் ஆசை!' என்று பதிலெழுதினார் சுப்புடு.

'சரியான பதில்' என்று நான் அவரை மெச்சினேன். "முதன்முதலில் கல்கிக்குத் தான் இசை விமர்சனம் எழுதினேன் நான். 'பலே ஜோரய்யா!' என்று கல்கியே என்னைப் பாராட்டினார் தெரியுமோ!" என்றார் சுப்புடு.

*ர*த்த வங்கி, கண் வங்கி தெரியும். உடை வங்கி? இது புதுசு! ஹைதராபாத்தில் இயங்கி வரும் இதனை வெற்றிகரமாக, நடத்தி வருகிறார் நளினி கங்காதரன்.

"எனக்குத் தெரிந்த ஒருவர், இந்தியாவை விட்டு, அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தபோது அவரது குடும்ப உறுப்பினர்களின் துணிமணிகளை எல்லாம் என்னிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றார். அந்தத் துணிமணிகளை வேலைக்காரி, டிரைவர், வாட்ச்மேன் போன்றவர்களுக்கு விநியோகிப்பதை விட, ஆதரவற்ற குழந்தைகள், முதியவர்கள் வசிக்கும் இல்லங்களுக்குக் கொடுத்தால் இன்னும் உபயோகமாக இருக்குமே என்று தோன்றியது.

"அத்தனை துணிகளையும், நன்றாகத் தோய்த்து, இஸ்திரி போட்டு, ஹைதராபாத்தில் உள்ள சில இல்லங்களுக்குக் கொடுத்தேன். இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட இன்னும் சில நண்பர்களும், தேடிவந்து துணிகளைக் கொடுக்க ஆரம்பித்தார்கள். அவற்றைத் தோய்த்து, தேவையான சிறு மாற்றங்களைச் செய்து, ரகவாரியாய்ப் பிரித்து, விநியோகிக்க ஆரம்பித்தேன். இப்போது, எங்கள் உடை வங்கிக்கு இரண்டு வயதாகிறது" என்றார் நளினி.

நல்லகாரியம் செய்யும் நளினி!

*ந*ளினி பிறந்து, வளர்ந்தது சென்னையில்தான். திருமணத்துக்குப் பின் ஹைதராபாத் வாசியாகிவிட்டார். அங்கே உள்ள டாக்டர் ரெட்டி பவுண்டேஷன் என்ற அமைப்பின் எக்ஸிகியூடிவ் டைரக்டராக இருக்கும் நளினி, உடைவங்கிப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்.



இவரது உடை வங்கி, இப்போது ஹைதராபாத்தில் மூன்று படுக்கை அறைகள் கொண்ட ஃபிளாட்டில் இயங்கி வருகிறது. இடத்தின் வாடகை, மின்சாரக் கட்டணம் போன்ற செலவுகளை, ரெட்டி பவுண்டேஷன் ஏற்றுக் கொள்கிறது. துணிகளைத் துவைப்பதற்குத் தேவையான 'ஏரியல்' சலவைப் பவுடரை ப்ராக்டர் அண்டு கேம்பிள் நிறுவனம் இலவசமாக வழங்குகிறது. இவர்கள் பயன்படுத்துகிற பத்து வாஷிங் மெஷின்களும் அன்பளிப்பாய் வழங்கப்பட்டவையே! டி.என்.டி. இந்தியா நிறுவனம், இந்தியாவின் எந்தப் பகுதியில் இருந்தும், பழைய துணிகளை உடை வங்கிக்குக் கொண்டு வருகிற மற்றும் இங்கிருந்து உடைகளை, தேவையான இடங்களுக்கு எடுத்துச் செல்கின்ற சேவையை இலவசமாகச் செய்கிறது.

ஹைதராபாத்தில், சுமார் நூறுபேர் தங்கள் ஓய்வு நேரத்தில் இந்த வங்கிக்கு வந்து, சேவை செய்கிறார்கள். வேறுபல ஊர்களிலும், ஒருங்கிணைப்பு சேவை செய்ய பலர் இருக்கிறார்கள்.

"*எ*ங்கள் உடை வங்கி பற்றி பத்திரிகையில் படித்து விட்டு காஷ்மீரில் எல்லைப்புற பகுதியிலிருந்து ராணுவ அதிகாரி ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். 'எல்லையோர கிராமங்களில், பிழைப்புக்கு வழியில்லாமல், குடும்பத்தின் ஆண் உறுப்பினர்கள் வெளியூர்களுக்குச் சென்று விட்ட சூழ்நிலையில், பெண்களும், முதியோர்களும் மட்டும் கிராமங்களிலேயே வசிக்கிறார்கள். சாப்பாட்டுக்கே சிரமப்படும் அவர்களுக்கு ராணுவத்தின் மூலமாக உடைகள் விநியோகிக்க திட்டமிட்டிருக்கிறோம். உதவ முடியுமா?' என்று அவர் கேட்டிருந்தார். உடனடியாக, ஏராளமான உடைகளை அனுப்பி வைத்தோம். நன்றி கூறி அவர் எழுதியிருந்த கடிதம் என்னை நெகிழச் செய்தது" என்கிறார் நளினி.

சந்திப்பு:
எஸ். சந்திரமௌலி
படம் : யோகா

ஆகாயத்தில் முட்டிக் கொண்டேன்

சிங்கராஜ் காலை விழித்தபோது உலகம் வேறுவிதமாய் இருந்தது.

வாழ்க்கையே விசித்திர நிஜம். இரவில் தெரிகிற வாழ்க்கை முகம் வேறாகவும், பகலில் முற்றிலும் வேறாகவுமாக அல்லவா அமைந்துவிடுகிறது. வெளிச்சம் மனிதனை மிருகமாக, சற்று 'மதம்கொண்ட யானைத் தனமாக' ஆக்கி விடுகிறது. இரவு நல்லமைதியின் வாசனை நிரம்பியது. சற்று இளக்கமான, நெகிழ்ந்த மனது, ஈரமனது அப்போது வாய்க்கிறது. கனவுகளைக் கொண்டுவந்து, பூக்கூடையில் இருந்து கொட்டுவதைப் போல கொட்டுகிறது இரவு. பகலிலோ அநேகப் பூக்கள், சூடு தாளாமலோ என்னவோ, வாடி விடுகின்றன...

அருகில் கிழவியொருத்தி படுத்திருக்கிறாள். யாரிவள்?

அவள் திரேஸ். மகன் இறந்து அத்தோடு அவளது வாழ்க்கை, பஞ்சுகள் சிதறடிக்கப் பட்ட தலையணையாகிப் போனது. எல்லாம் தாண்டியதோர் விரக்தியில் அவள் ஊரைவிட்டு - திருச்செந்தூர்ப் பக்கம் ஏதோ ஊர் சொன்னாளே? - எங்கெங்கோ சுற்றி அலைந்து திரிந்து...

உறவுப் பிடிகள் கழன்று, இற்று வீழ்ந்த நிலைதான் எனினும், காலப்போக்கில் அதுவும் அவளுக்குப் பழகிவிட்டது. தினசரி மணித்துளிகளைக் கடப்பதுகூட சாதனை என்கிற அளவில் நெருக்கடிகள். பசி தாங்கும் வயதுமல்ல. பசி அவளை வாட்டி, புரட்டியெடுத்தது. உடம்பே சருகென வற்றி உலர்ந்துவிட்டது. பிறந்த நாளுக்குச் சுருள் சுருளாய்க் கட்டிய காகித தோரணம் போன்ற, எண்ணெயில் சரியாகப் பொரிபடாத அப்பளம் போன்ற, உட்கருண்ட சருகு. அதன் உட்பக்கத்து சிறு ஈரம்போல இன்னும் அவளிடம் உயிரின் மிச்சம்.

மகனுக்கு வந்த சாவு எனக்கு வந்திருக்கலாம், என்று நேற்று கிழவி அலட்சியமாய்ப் பேசினான். அவளது ஒவ்வொரு பேச்சும் அவனை அயர்த்தியது. அவளது சிரிப்பு மிக அபூர்வமானது. பேச்சிலும் சிரிப்பிலும் அவள் காட்டும் எளிமையும் நேர்மையும்... அவையே அவற்றின் அழகு.

பார்த்த கணத்தில் ஒரு கவர்ச்சியம்சம் அவளிடம் அவனுக்கு வாய்த்ததே அதைச் சொல். தனக்கான உணவை, தேவையை - சாராயம் என ஒரு தேவையும் அதில் உள்ளடக்கம்! - யாரிடமும் கெஞ்சாமல் கூசாமல் அவள் பெற முடிந்தது.

எப்போது குளித்தாளோ? முகங் கழுவிக் கொள்வாளோ, பல் விளக்குவாளோ, என்பதெல்லாம்கூட சந்தேகம் தான். என்றாலும் அந்தக் கண்களின்



அசாதாரணத்தன்மை, சுதந்திரமான நிமிர்ந்த தன்மை அவனுக்குப் பிடித்திருக்கிறது.

இதெல்லாம் அவன் உணர்ந்து அனுபவித்தான் என்பதல்ல. ஒரு புரிபடாத அன்பின் ஒளி அவளிடமிருந்து அவனைத் தீண்டியதுபோல அவன் உணர்ந்தான்...

மனைவி இறந்த இத்தனை நாட்களில் இது போன்றதொரு உறவும், பிடிப்பும், அர்த்தமும், அறிவுக்குள் ஒரு ருசித் திகட்டலும் வாய்த்ததேயில்லை!

அவளை எழுப்பாமல் வெளியே வந்தான். இரவின் காட்சிகள் மெல்ல மனத்தில் தூரத்தில் போன ரயிலின் மிச்சசொச்ச படபடப்பாய் அலை தளும்புகின்றன.

இருவரும் குடித்திருந்தார்கள். தள்ளாடி ஒருவரை யொருவர் சாரைப் பாம்புகள் என உறவைப் பின்னிக் கொண்டபடி வீடு நோக்கி வந்தார்கள். நினைக்கவே வேடிக்கை!

"இனிமே நீயி யார்ட்டயும் கைநீட்டிக் காசு கேக்கப்படாது..." என்கிறான். நெஞ்சைத் தட்டுகிறான். "உனக்கு நான் இருக்கேன். வண்ணை சிங்கராஜ் சொன்ன சொல் தவற மாட்டான்!" அப்போதுகூட கிழவி ஒரு சிரிப்பு சிரித்தாள். ஆனந்தச் சிரிப்பு அது. அவனை உள்ளக் கிறுகிறுப்பில் ஆழ்த்துகிற சிரிப்பு.

சாராய போதையைவிட, அவள் சிரிப்பின் போதை இன்னுமான உற்சாகம்... இந்தக் கணங்கள், முன்பு மனைவியுடன் அவனுக்கு வாய்த்தன!

அவள் முகக் குறிப்பு பார்த்தே, அவள் கேட்டதை வாங்கித் தந்துவிட்டால், எத்தனை உற்சாகமாய்க் கூட வருவாள் சாமந்தி. அவனை முழங்கையோடு பிடித்துக் கொண்டு



3

எஸ்.ஷங்கரநாராயணன்

உரச, உரச அவள்கூட நடக்கும்போது மிதக்கிறாப் போலிருக்கும். உலகமே மறந்து போகும்.

நெற்றியில் புருவ மத்தியில் குங்குமப் பொட்டும், மேலே சிறு திருநீற்றுக் கீற்றும்.

மெல்லிய சிரிப்போடு, அன்பு தெளித்து அவள் உணவு பரிமாறும் அழகே தனிதான்!

அடேய், அவளும் இந்தக் கிழவியும் ஒண்ணா... என ஒரு மனம் மறித்தது.

இல்லை. யாரும், எந்த உறவும்... இன்னொருவருக்கு நிகராக, இன்னொரு அனுபவமாக 'பாவிக்க முடியாதவை. ஏன் பாவிக்க வேண்டும்? ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஒரு பிரத்யேக அழகு, அந்தரங்க ஒளி உண்டு!

இப்படியெல்லாம் அவன் சிந்தித்ததேயில்லை. சில கொடூரமான கணங்களை, சோகங்களைக் கடந்தபின் வாழ்க்கை அபூர்வமான ஒளிகளையெல்லாம் காட்டித் தருகிறது. பாலின் மேலாடையை விலக்கினாப் போல.

அர்த்தமற்றுத் தெரிகிற, திரிகிற வாழ்க்கை. காலப் போக்கில் புதிய அர்த்தங்களை எட்டித் தெளிகிறது. நெல் ஒரு போகம் என்றால் அடுத்து தானியப் பயிர்கள்!

மாற்றங்கள் அல்ல. இயக்கங்கள். காட்சிகளின் தாயக்கட்டைகள் உருண்டபடி.

வெளியே டீ குடித்துவிட்டு சிங்கராஜ் திரேஸ் கிழவிக்கு என ஒரு தம்ளரில் வாங்கிக் கொண்டான். "என்னா வண்ணை, வீட்ல விருந்தாளியா?" என்கிறான் கடைக்காரன்.

கிழவி எனக்கு உறவா, விருந்தாளியா?

"தெர்ல!" என்று பதில் சொன்னபோது அவனுக்கே சிரிப்பு வந்துவிட்டது.

தூரத்திலேயே தெரிந்தது. கிழவி எழுந்து, வாசலைத் தெளித்து, கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

"எங்க போயிட்டே" என்றாள் அவனைப் பார்த்து.

"ஏன்?" என்றான் ஒரு வேடிக்கை போல.

"இல்லே. சாராயக் கடைக்குத்தான் நடந்திட்டியோன்னு பாத்தேன்."

இருவரும் மனம்விட்டுச் சிரித்தார்கள்.

"இந்தா" என்று நீட்டினான்.

"என்னது?"

"டீ!"

"இனி வீட்லயே போடலாம். பக்கத்துல மீனு கீனு கெடைக்குமாவே?"

அவள் சுவாதீனமாய் நடமாடியது பிடித்திருந்தது. என்னதான் நிமிர்ந்த நிலை காட்டி அவன் நின்றாலும் உள்ளூர இப்படியோர் உறவின் ஈரக் குளுமை அவன் நரம்புகளுக்குள் வேர்ச்சிலிர்ப்பாய்ப் பாய்ந்ததை உணர முடிந்தது அவனால்.

ஒரு வீட்டுக்கான கதகதப்பும் தன்னம்சங்களும் ஒழுங்குகளுமாக வாழ்க்கை புல்லின் தலையென எட்டிப் பார்க்கிறதா?

ரொம்ப நாளைக்குப் பிறகு, இருப்பதில் நல்ல சட்டையாக எடுத்து அணிந்து கொண்டு அலுவலகம் கிளம்பினான்.

"ஏன்யா சைக்கிள் வைச்சிருக்கியே? அதைக் கொஞ்சம் ஒழுங்கு பண்ணி, அதுலே போய் வரலாம்ல?" என்று 'சிரித்தாள்' கிழவி.

அவனுக்குச் சிலிர்த்தது.

சாமந்தி இறந்தபின் அதைக் தொடுவதேயில்லை. சினிமா என்றும் வெளியிடங்களுக்கு என்றும் சாமந்தியோடு அதில் போய்வந்த கணங்களை எப்படி மறக்க முடியும்? சைக்கிள் தரையில் போகிற பாவனையே இராது. அவள் பின்னே இருக்கிற உற்சாகத்துக்குச் சுமையே தெரியாது. தெருத் திருப்பத்தில் ஒருத்தி பூ விற்றுக் கொண்டிருப்பாள்.


இவனைப் பார்த்ததும் அவளுக்கு ஒரு புன்னகை வரும். கை தன்னைப் போல முல்லையை எடுத்து முழம் போடும்...

"அந்த நடிகைக்கு கால்லே சுளுக்கா... எப்படி?"

"சின்னத் திரையிலேர்ந்து பெரிய திரைக்குக் கொஞ்சம் வேகமா தாவிட்டாங்களாம்!"

- தஞ்சை தாமு





"கூட்டி பெருக்க ஆள் வேணும்னு சொன்னேன். இல்லேன்னு சொல்லலே. அதுக்காக கணக்குபிள்ளை ஒருத்தரைக் கூட்டிட்டு வருவீங்கன்னு சத்தியமா எதிர்பார்க்கலை!"

- சீர்காழி சாமா

சாமந்தியின் உடம்பை அறுத்துக் கொடுத்தார்கள்.

உள் சிசுவாவது பிழைத்திருக்கலாம், என்று எல்லாரும் அபிப்ராயப்பட்டாலும் அது தழைக்காததும் நல்லதுதான். தனியே அந்தச் சிற்றம் சிறு சிசுவை வைத்துக் கொண்டு அவன் என்ன செய்வான்?

தெருவே அவன் வீட்டில் கூடிவிட்டது. பேப்பரில் செய்தி - கண்ணீர்க் கதை என்று தினத்தந்தியில் எழுதியிருந்தான். அதைப் பார்த்ததில் இருந்தே நிறைய பேர் விசாரிக்க வந்து விட்டார்கள். அதில் ஒருத்தனுக்கு வருத்தம். அவன் பெண்டாட்டியும் விபத் தில் செத்துப் போனாள். நாளிதழில் செய்தி வரவேயில்லை.

தெருமுனைப் பூக்காரி அவளுக்குப் பூ கொண்டு வந்து போட்டுவிட்டு அழுதாள்.

மறுநாள் காலை கிழவி எழுந்தபோது சிங்கராஜ் வண்டியை எண்ணெய் போட்டுத் துடைத்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்து கிழவிக்குச் சிரிப்பு. "எலேய், என்னி யப் பின்னால உக்காத்தி வைச்சிட்டுப் போவியா?"

"விட்டா பூ வாங்கித் தர்றியான்னு கேப்பியே?" என்று சிரிக்கிறான் சிங்கராஜ். அழுகை, தானாய் ஒண்டியாளாய் அழலாம். யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள். தனியே சிரித்தால் விபரீதமாய் உணர்கிறார் கள் ஏனோ...?

உற்சாகமான மனம் என்னவெல்லாம் வேடிக்கை பண்ணுகிறது!

வீட்டின் ஜன்னல்கள் திறந்து விடப் பட்டு உள்ளே சிறைப்பட்ட காற்று விடு பட்டிருந்தது. வெளிச்சமாயிருந்தது வீடு. புதுக் காற்றின் குளுமை வந்திருந்தது.

அடுப்பங்கரையில் ஒலிகளின் சங்கீதம்.

சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினான்.

ஒருவரை ஒருவர் சீண்டிக் கொள்வதில் குறைச்சல் இல்லை.

திடீரென்று கிழவி "ஏய்யா, இந்தக் குடியை விட்ருய்யா..." என்று அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"அப்படிப் போடு... என்னா கிழவி தத்து வத்துல இறங்கிட்டே?" என்று பகடியடித் தான்.

"இவ்வளவுநாள்ல ஒரு நாள் ஒரே ஒரு நாள் இந்த வார்த்தையை உனக்குச் சொல் லிக்கிடக்கூடாதா?"

"எனக்கு எம் மவன் கெடைச்சிட்டான் இப்ப..."

"அட கெழவி.. உன் மகன் குடிப்பானா?"

"சேச்சே... தொட மாட்டான்!" என்றாள் பெருமிதமாய்.

"எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது அவனுக்கு..."

"பின்னே ஏன் அவனை சாராயக் கடைலே தேடிப் போனே?" என்று கிண்டல் பண்ணினான் அவன்.

"சும்மா இருவே... கடைசிலே அங்க தானே எம் மவன் கெடைச்சான்?" என் கிறாள் அவளும் விடாமல்.

சைக்கிள் ஓடிக் கொண்டிருக்கையி லேயே இதையெல்லாம் நினைத்துப் பார்த் துக் கொண்டே போனான். தெக்கத்து ஆளு களுக்கே வார்த்தையிலே ஒரு சண்டியர்த் தனம் இருக்கத்தான் செய்யுது! அதுலே படிச்ச ஆளுக, படிக்காத ஆளுகன்னு இல்லை.

"ஒனக்குத் தெரியாம நான் போயிட்டு வந்தா என்ன பண்ணுவே கிழவி?"

"நீ போகமாட்டே... எனக்குத் தெரியும். நான் நம்புறேன் அதை..."

"என்னை நானே நம்ப மாட்டேன்." என்றான் சிங்கராஜ்.

எல்லாம் உற்சாகமாய்த்தான் இருந்தது.

... கிழவி இரத்த இரத்தமாய் வாந்தி யெடுத்த அந்த நாள் வரை...

(அடுத்த இதழில் முடிகிறது)

காதில் விழுந்தவை



படங்கள் : செளரா

• ஸ்டாலின்



• துர்கா

"அரசுத் தரப்புக்கு சாதகமான செய்திகள் ஏன் வருவதில்லை" என்று கோபப்பட்டாராம் அவர்.

● கலைஞரைக் கைது செய்த போது போலீஸ் வேளச்சேரியில் உள்ள ஸ்டாலின் வீட்டுக்கும் அவரைக் கைது செய்யச் சென்றது. ஆனால் அப்போது ஸ்டாலின் வீட்டிலில்லை. இருந்தும், அந்தச் சமயத்தில் மனித உரிமை மீறல்கள் நடந்ததாக ஸ்டாலின் மனைவி துர்கா மாநில மனித உரிமை ஆணையத்தில் புகார் கொடுத்தார். அது பற்றிய விசாரணை இப்போது நடந்துவருகிறது. ஆணையத்தின் விசாரணையை விரைந்து முடிக்க நீதிபதிகள் விரும்பினாலும் தமிழக அரசு பல ஸ்பீட் பிரேக்கர்களைப் போடுகிறது. இதன் காரணமாக மனித உரிமை ஆணையத்தில் அரசு சார்பில் வாதாடும் வழக்கறிஞர் ரகு ராமனுக்கும், ஸ்டாலின் தரப்பு வழக்கறிஞர் கே.எஸ். ராதாகிருஷ்ணனுக்கும் கடும் மோதல் ஏற்பட்டு கமிஷன் நடவடிக்கையில் ஒரு விறுவிறுப்பு கூடுகிறது. சமீபத்தில் துர்கா இரண்டு முறை சாட்சி சொல்ல ஆஜரான போதிலும், அரசு தரப்பு ஒத்துழைப்பில்லாததால் வாக்குமூலம் கொடுப்பது தள்ளிப் போயிருக்கிறது. இந்த விஷயத்தில் ஸ்டாலின் தரப்பு செய்திகள் மட்டும் அதிகமாக பத்திரிகைகளில் வருவது குறித்து முதல்வர் எரிச்சலடைந்திருக்கிறாராம்.



• ஜெகத்ரட்சகன்

உற்சாகத்தில் மதுபான ஆலை அதிபர்கள்!

● மலிவுவிலை மதுவை ஒழித்துவிட்டு, 'பார்'களை அறிமுகப்படுத்தியிருக்கும் தமிழக அரசின் செயலை நெஞ்சம் பொங்க வாழ்த்தி வரவேற்கிறார்கள், மதுபான ஆலை உரிமையாளர்கள். செய்ய மாட்டார்களா என்ன? மலிவு விலை மதுவை பாட்டில் ஒன்றுக்கு மூன்று ரூபாய்க்குத்தான் அரசுக்கு விற்க வேண்டும் என்று கண்டிஷன் போட்டு ஆலை அதிபர்களிடம் கொள்முதல் செய்தது தமிழக அரசு. நஷ்டத்துக்கு விற்க வேண்டி வந்ததால் மூக்கால் அழுதுகொண்டே தமிழக அரசுக்கு சரக்கை விற்று வந்தார்கள் ஆலை அதிபர்கள். "எங்களுக்கும் கருணை காட்டுங்கள்" என்று ஐந்து மதுபான ஆலை அதிபர்கள் 'வேண்டி'க் கொண்டதும் மலிவு விலை மது ரத்தானதற்கு ஒரு காரணமாம். 'பார்'களைத் திறப்பதன் மூலம் 'குடிமகன்களின்' எண்ணிக்கை கூடும் என்பதும் ஆலை அதிபர்களின் உற்சாகத்துக்கு மற்றொரு காரணம். இதற்கிடையில் "பார்களை, திறப்பதற்கு முன், சட்டதிட்டங்களை வகுக்க வேண்டும்" என்று காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு தலைவர் சூர்ய பிரகாஷ் கோர்ட்டுக்குச் சென்றிருப்பது மதுபான வியாபாரிகளுக்குக் கடுப்பை உண்டாக்கியிருக்கிறது.

● சமீபத்தில் வன்னியர் அமைப்பு ஒன்று, கட்சி அரசியலை மறந்துவிட்டு, கிண்டியில் உள்ள ராமசாமி படையாச்சியார் சிலைக்கு அவரது பிறந்தநாள் அன்று மாலையிட எல்லா கட்சியிலும் உள்ள வன்னியர் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பியது. ஆனால் வீரவன்னியர் பேரவை நடத்தும் ஜெகத்ரட்சகன் மற்றும் பா.ம.க தரப்பிலிருந்து யாரும் வரவில்லையாம். இது பற்றி சொன்ன ஒரு வன்னியப் பிரமுகர், தற்போது அரசு மட்டத்திலும், அதிகாரிகள் மட்டத்திலும் வன்னியர்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகிறார்கள். இந்த சமயத்தில் கூட ஒற்றுமையைக் காட்டாவிட்டால் எப்படி?" என்று வருந்தினார். சில வன்னியப் பிரமுகர்கள் தங்கள் தரப்பை எடுத்துச் சொல்ல முதல்வரிடம் குழுவாக தூது போகவிருக்கிறார்களாம். இந்தக் குழுவில் டாக்டர் அன்புமணியையும் சேர்க்க முயற்சி நடக்கிறது.

- சஞ்சயன்

100 வயதில்...

"பங்குனி மாசம், ரேவதி நக்ஷத்திரத்திலே பிறந்தேன். நவராத்திரி சமயம். ஸ்ரீராமநவமியை யொட்டி. அதனாலே ராமன்னு பேர் வச்சா... எனக்கு" என்று நூறாண்டுக்கு முந்தைய நிகழ்வைச் சொல்கிறார், ஸ்ரீபெரும்புதூர் சமஸ்கிருத அறிஞர் டி. ராமச்சந்திர சாஸ்திரி.

பங்குனி மாசம் ஏது நவராத்திரி? ஆனால் வஸந்த நவராத்திரி என்று ஒன்று உண்டாம். பெரியவர் அதைச் சொன்னார். நூறு வயதைத் தாண்டிய பிறகும் பழைய நினைவுகளில் ஆழ்ந்து போகிறபோது குழந்தையாய் மாறிச் சிரிக்கிறார். தினமும் மாலை ஆறரை மணி முதல் எட்டரை மணிவரை தொலைக்காட்சிக்கு அடிமையாகிவிட்ட இவரிடம், என்னதான் அப்படி ரசிக்கிறீர்கள் என்று கேட்டால் 'கங்கா யமுனா சரஸ்வதி' என்று அந்தத் தொடரின் டைட்டில் சாங்கையே பாடிக் காட்டுகிறார்.



அண்மையில், திருப்பெரும்புதூரில் நடைபெற்ற இவரது நூறாம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சியின்போது காஞ்சி ஸ்ரீ மடத்தின் சார்பில் நவரத்னமாலையும், 'வ்யாகரண விசாரத ரத்னாகரர்' என்னும் பட்டமும் வழங்கப் பட்டன.

தொண்ணூற்றைந்தாவது வயதில், பாரத அரசு வடமொழி அறிஞர்களுக்காக வழங்கும் விருதை, இவர் அப்போதைய குடியரசுத் தலைவர் சங்கர்தயாள் சர்மாவிடமிருந்து பெற்றுக் கொண்டார். பாலி, ப்ராகிருதம் போன்ற பழைமையான மொழி அறிஞர்களுக்கு வழங்கப்படும் இந்த விருதைப் பெற்றுக் கொண்டவர்களில் வயதில் மிக மூத்தவர் என்பது மட்டுமின்றி, யாரும் துணைக்குப் பிடித்துக் கொண்டு வர வேண்டிய அவசியமின்றி, தாமே நடந்து வந்து சர்மாஜியிடம் அந்தப் பரிசைப் பெற்றுக் கொண்டார். சிறந்த சமஸ்கிருத அறிஞரான சர்மாஜி, பொன்னாடையைப் பிரித்துத் தாமே அணிவித்தபோது, ராமச்சந்திர சாஸ்திரிகள் நெகிழ்ந்து போய் 'தன்யோஸ்மி' (நான் ரொம்பவும் கொடுத்து வைத்தவன்) என்று சர்மாஜியிடம் சொல்ல, அவரும் பதிலுக்கு 'அஹம் தன்யோஸ்மி' (நான்தான் அப்படி) என்று சொன்ன நிகழ்ச்சியை நினைவு கூரும்போது மிகவும் உணர்ச்சிவயப் படுகிறார்.

காஞ்சி மகாப் பெரியவர் சதாராவில் முகாமிட்டிருந்த சமயம். அப்போது அதிகாலையில் இவர் அங்கு போயிருக்கிறார். "வந்துட்டயா. உன்னைத் தான் எதிர்பார்த்தேன். சீக்கிரம் மடி பண்ணிண்டு சதஸுக்கு வா" என்றார்



பரமாச்சார்யார்.

உடனே குளித்து அனுஷ்டானங்களை முடித்து சபைக்குப் போனார் ராமச்சந்திர சாஸ்திரி. காலை ஏழரை மணிக்குத் தொடங்கிய விவாதம் பகல் ஒன்றரை வரை நீண்டது. வழக்கத்துக்கு மாறாக ஸ்வாமிகள் இவரிடம் ஒருவித ஆவேசத்தோடு கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டு மடக்கிக் கொண்டே போனார். இவரும் சளைக்காமல் எல்லாவற்றுக்கும் பதில் சொன்னார். சதஸ் ஒரு மாதிரி முடிந்து எல்லோரும் உணவு அருந்தியவுடன் பரமாச்சார்யாள் இவரை அழைத்து "இன்னிக்கு உன்னிடம் ரொம்பக் கத்துண்டேன்'' என்று சொன்னபோது இவரால் தாள முடியவில்லை. ''அபசாரம், பெரியவா அப்படிச் சொல்லலாமா. நான் ரொம்ப சின்னவன்'' என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினார் இவர்.

பரமாச்சார்யாள் இடக்கு மடக்காகக் கேள்வி கேட்ட மர்மம், அப்புறம்தான் தெரிந்தது. முதல் நாள் சதாராவுக்கு வந்திருந்த ஒரு மகாராஷ்டிர சாது, பரமாச்சார்யாளிடம் கேட்ட இடக்கு மடக்குக் கேள்விகளையே, இவரிடம் அவர் கேட்டிருக்கிறார். அந்த சாது கேட்டபோது பரமாச்சார்யாள் பதிலே பேசவில்லை என்று மற்றவர்கள் சொன்னார்கள்.

ஸ்ரீபெரும்புதூரிலிருந்த சம்ஸ்கிருத கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர் ராமச்சந்திர சாஸ்திரி. இப்போதைய ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள் உட்பட முன்னூறு பேருக்குமேல் இவரிடம் பயின்றவர்கள். ஆண்டவன் ஸ்வாமிகள், பூர்வாசிரமத்தில் மதுராந்தகத்தில் ஆசிரியர் வேலை பார்த்த போதும் அடிக்கடி ஸ்ரீபெரும்புதூர் வந்து தம்முடைய ஆசிரியரிடம் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டதுண்டாம்.

வியாகர்ணத்தில் சிறப்பான புலமையுடையவர் என்பதற்காக அப்போதைய சென்னை ராஜ்யம் வழங்கிய பட்டம் சாஸ்திரி என்பது. வேதாந்தம், வியாகரணம் சிரோமணி பட்டம் பெற்றவர். ஸாகித்யமும் ஆரம்ப நிலை பயின்றவர். திருவையாறிலிருந்து தாத்தாச்சார்யார் நடத்திய 'உதயான பத்ரிகை'யில் நூறு கட்டுரைகளுக்குமேல் வடமொழியில் எழுதியிருக்கிறார். அவை நூல் வடிவம் பெற்றால் பலருக்கும் உதவியாயிருக்கும்.

ஒரு மடக்கு நாற்காலியை நடைவண்டி மாதிரி தள்ளிக் கொண்டே, வீட்டின் முற்றப் பகுதிக்குப் போனார் ராமச்சந்திர சாஸ்திரி.

யாராவது உதவக் கூடாதா என்றால் ''உதவியா! எல்லாம் தானே செய்யணும் மாமாவுக்கு. கிட்டப் போனால் சண்டைக்கு வருவார்'' என்று சொல்லிச் சிரிக்கிறார் மருமகள் மங்களம் பாலசுப்ரமண்யம்.

சமஸ்கிருதம் போலவே சாப்பாட்டையும் ரஸிக்கிறார் பெரியவர். மணத்தக்காளி வற்றல் குழம்பு, கருணைக் கிழங்கு மசியல், நாரத்தங்காய் வெல்லப் பச்சடி, நன்றாக மிருதுவாகத் துருவிய மாகாளிக் கிழங்கு ஊறுகாய் என்று இவருடைய மெனு நீள்கிறது. தள்ளுபடி சப்பாத்தி மட்டும்தான். மெல்லுவதற்குப் பற்கள் வேண்டுமே! பூரியைக் கூடப் பாலில் நனைத்துத் தருகிறார் மருமகள்.

காலையில் நாலரைக்குத் திருப்பள்ளி எழுச்சி... காபியைத் தொடர்ந்து பேப்பர் படிக்க வேண்டும்.

காலை எட்டரைமணிக்கு ஒரு தம்ளர் ஹார்லிக்ஸ். குடும்ப டாக்டர் மகாலிங்கம் சொன்னாராம். "ராஜாஜி கூடக் கடைசிவரை காம்ப்ளான் குடிச்சார் தெரியுமோ?'' என்றவுடன் இவரும் ஏற்றுக் கொண்டார். ராஜாஜி, பரமாச்சார்யாள் இரண்டு பேர் மீதும் அத்தனை பக்தி.

நான்கு பெண்கள் சென்னையில். ஸ்ரீபெரும்புதூரில், மருத்துவத்துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற மகன் பாலசுப்ரமணியம் தம்பதிகளின் அரவணைப்பில் இருக்கிறார் பெரியவர். 'சென்னைக்கு வந்து விடுங்களேன். நிறைய மருத்துவ வசதி உண்டே" என்று சொல்லும் பெண்களுக்கு இவர் பதில், "அங்கேயிருக்கிற டாக்டர் மட்டும் என்ன யமனைத் தடுத்துடுவாராமா?"

ஆரம்பகாலம் முதல் ஸ்ரீபெரும்புதூரின் கல்கி ஏஜெண்ட் இந்தப் பெரியவர்.

— சுப்ர. பாலன்



வெங்காயம் கிடைத்ததற்கே ஒருவன் துள்ளிக் குதித்தால், வெல்லம் கிடைத்தால் என்ன செய்வான்.

— அரேபியப் பழமொழி

தகவல்: பம்பேட்டை ஜி.மூர்த்தி

இந்த
இதழ்
அன்பளிப்பு

உலகமெங்கும்
வேகமான
விற்பனையில்

ஓம்
சரவணபவ
தெய்வீக மாதஇதழ்

அதிக பக்கங்கள்!

பிரதிகளுக்கு
முந்துங்கள்!

தமிழகத்தில் இதுவரை யாருமே தராத பரிசு!

தெய்வத் திருவள்ளுவனின்

திருக்குறள்



தெளிவான
விளக்க
உரையுடன்!

304
பக்கங்கள்

அழகான
வடிவமைப்பு!

கச்சிதமான
பைண்டிங்!

சந்தா விபரம்

	உள்ளூர் (சென்னை)	வெளியூர்	வெளிநாடு	
1 வருட சந்தா	ரூ. 198/-	ரூ. 222/-	10 US$	12 இதழ்கள்
3 வருட சந்தா	ரூ. 594/-	ரூ. 666/-	30 US$	36 இதழ்கள்
5 வருட சந்தா	ரூ. 990/-	ரூ. 1110/-	50 US$	60 இதழ்கள்

ஆயுள் சந்தா ரூ. 2750/ மட்டும்

★ தொகையை கீழ்காணும் முகவரிக்கு D.D. அல்லது M.O. மூலமாக அனுப்பவும்.
★ இதழ்கள் கூரியர் மூலம் அனுப்பப்படும்! (இந்தியா மட்டும்)
★ பரிசுப் பொருட்கள் வெளிநாடுகளுக்கு அனுப்ப இயலாது

விபரங்களுக்கு : சாருபிரபா பப்ளிகேஷன்ஸ்,
105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி : 8487858, 8484242

பொய்யில் பூத்த நிஜம்



பாட்டி அழைத்தது காதில் விழாதது போல சிறுவர்கள் 'கெக்கிலி பிக்கிலி' என்று சிரித்தபடி ஒருவரையொருவர் துரத்திப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்த அம்மாள் பொறுமையில்லாமல் கத்தினாள். 'சோட்டு! பிட்டு! மை ஜாரஹி ஹூம்!' (நான் போகிறேன்!)

சிறுவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது தங்களது பிரச்னைபோல விவேக்கும் சுதீரும் சகுந்தலாவும் புல்வெளியைப் பார்த்தபடி நின்றார்கள். சோட்டுவும் பிட்டுவும் சிரித்துக் கொண்டே ஓடோடி வந்து பாட்டியின் இரு பக்கமும் நின்றதும், பாட்டி செல்லமாக இருவர் தலை மீதும் 'சைத்தான்!' என்று குட்டினாள். பெரிய ஹாஸ்யம்போல சைத்தான்கள் சிரித்தன.

சகுந்தலா மெள்ளத் திரும்பினாள். விவேக்கையும் சுதீரையும் பார்த்து, "நா அவங்களுக்கு என்னை எப்படி அறிமுகப்படுத்திக்கட்டும்?" என்றாள்.

விவேக் தடுமாறினான்.

"யூ மீன், ராஜா உன்னைப் பத்தி அவங்ககிட்ட சொல்லவேயில்லேங்கறியா?"

"இல்லே" என்றாள் அவள் சாதாரணமாக.

"என்னா இரண்டு வருஷத்துக்கு மேலே ஆச்சு அவங்களோட அவன் பேச்சை நிறுத்தி. ஆனா அதுக்கு நா காரணமில்லே. வேறு ஏதோ காரணம்."

"அவங்க முயற்சி பண்ணலையா இவனோடு திரும்பிப் பேச?"

"பண்ணினாங்களான்னு எனக்குத் தெரியாது. எங்கிட்ட ராஜா அவங்க பேச்சையே எடுக்கமாட்டான். கேட்டா அவனுக்குக் கோபம் வரும்."

"அவங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லேங்கறியா?"

"எனக்குச் சொல்லத் தெரியல்லே விவேக். ஏன் கூப்பிட்டீங்கன்னு அவன் கோபப்படலாம்."

"இதப்பார், சகுந்தலா. நீ குழப்பத்திலே இருக்கே. உன் பிரச்னை என்னன்னு எனக்குத் தெரியும். நீ அதுக்காகத் தயங்கக் கூடாது. அவங்களுக்குத் தெரிவிச்சுதான் ஆகணும். நாளைக்கு ஏதாவது ஏடாகூடமா ஆயிட்டா எங்களுக்கு ஏன் தெரிவிக்கல்லேன்னு அவங்க கோபப்படலாம்."

வாஸந்தி

"கோபப் படறதிலே நியாயம் இருக்கு" என்றான் கதிர். ''பெத்தவங்களுக்கும் பிள்ளைக்கும் நடுவிலே சண்டை வரும் _ போகும். ஆனா உறவு போயிடாது!"

அவள் பதில் பேசாமல் தாழ்வாரத்தில் பெஞ்சுகளில் அமர்ந்திருப்பவர்களையும் விரைந்து செல்லும் வெள்ளைக் கோட்டுகளையும் பார்த்தபடி இருந்தாள். இப்படிப்



பட்ட இக்கட்டில் தான் மாட்டிக் கொண்டிருப்பது எதிர்பார்த்திருக்க முடியாத அபத்தம் என்று தோன்றிற்று. புதிதாகப் பிரகாசம் ஏற்பட்டவன் போல அவன் மெல்லச் சொன்னான்.

"நாளைக்குள்ளே ராஜாவுக்கு நினைவு திரும்பிடும், அப்பப் பிரச்னையில்லே."

அவனுக்கு எப்படிப் புரியவைப்பது என்று தவிப்பவர்கள் போல விவேக்கும் கதிரும் ஒருவரையொருவர் பார்த்துத் தலை குனிந்து கொண்டார்கள்.

"திரும்பல்லேன்னா?"

அவள் கரீரென்ற கோபத்துடன் கதிரைப் பார்த்தாள். "ப்ளீஸ்... அப்படிச் சொல்லாதே!" கதிர் சங்கடத்துடன் தலையைக் குனிந்து கொண்டான். "ஸாரி" என்று முணுமுணுத்தான், "உன்னை அதைர்யப்படுத்தறேன்னு நீ நினைக்கக் கூடாது!"

"ஓ.கே, சகுந்தலா'' என்றான் விவேக் நிதானமாக, " நீ புத்திசாலிப் பெண். நிலைமையை நீ புரிஞ்சுக்கணும், எமோஷனல் ஆறதினாலே எந்த லாபமுமில்லே. டாக்டர் தான் சொன்னார் தெரிவிக்கறது தேவலைன்னு."

"அவருக்கு இங்கே இருக்கிற சிக்கல்களைப் பற்றித் தெரியாது."

இனிமேல் எனக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை என்பதுபோல விவேக் தோளைக் குலுக்கிக் கொண்டான்.

"ஓ.கே. அப்புறம் உன் இஷ்டம்."

திடீரென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாதவள் போல சகுந்தலா அழ ஆரம்பித்தாள்.

''ரிலாக்ஸ், ரிலாக்ஸ்'' என்று மற்ற இருவரும் சமாதானப்படுத்த யத்தனிக்கையில் அவள் இலேசான விசும்பலுடன் சொன்னாள். "ராஜா இப்படி படுத்திருக்கறதே எனக்குப் பெரிய டென்ஷன். அதோடு முன்னேபின்னே பார்க்காத, ஏற்கெனவே அவன்கிட்ட கோபமா இருக்கிற அவனுடைய அப்பா அம்மா இங்கே கிளம்பி வந்தா நா எப்படி ஹாண்டில் பண்ணுவேன்?"

உண்மைதான் அது என்று நினைத்தவர்கள் போல அவர்கள் பேசாமல் நின்றார்கள்.

"அவனுடைய அம்மா பழைய காலத்து மனுஷின்னு நினைக்கறேன். அவங்களுக்காக நான் என் வேஷத்தை மாத்திக்க முடியாது. அப்படியெல்லாம் செய்யற மன நிலையிலே நான் இல்லே." கழுத்தில், நெற்றியில் ஒன்றுமில்லாமல் ஜீன்ஸ் டீ ஷர்ட்டில் நிற்கும் அவளைப்பார்த்து விவேக் இலேசாகச் சிரித்தான்.

"பெரிய சிக்கல்தான் இது."

மீண்டும் இந்தப் பேச்சை அவர்கள் எடுக்காமல் இருந்தால் நல்லது என்று அவள் நினைத்துக் கொண்டாள். கடவுளே _ ராஜா நல்லபடியா ஆயிடணும் - நாளைக்குள்ள நினைவு வந்துட்டா அப்புறம் எந்தப் பிரச்னையிலேயும் மாட்டிக் கொள்ளத் தேவையில்லே.

"நினைவு வரல்லேன்னா?"

அவளுக்கு ரத்தம் உறைந்தது, மனசு சிலிர்த்துக் கொண்டு சூடேற்றிற்று.

வரும். நல்லா ஆயிடுவான். எனக்காக, பரத்துக்காக.

"மறுபடியும் இதைப்பத்திப் பேசாதீங்க ப்ளீஸ்" என்றாள் அவள் அவர்களைக் கெஞ்சுவதுபோல. "ராஜா நல்லா ஆயிடுவான். எனக்கு நம்பிக்கையிருக்கு."

"ஓ.கே. ஃபைன்!" என்றான் விவேக்.

"நம்பிக்கைங்கறது மலையையே அசைக்கும்" என்றான் பெரிய மனுஷன் போல. "ராஜா நன்றாக ஆயிடுவான், ஆகணும்னு நா இன்னிக்குக் காலையிலே - இங்கே ஒரு மதராஸி மந்திர் இருக்கு தெரியுமோ, அங்கே போய் பிரார்த்தனை பண்ணினேன்."

அவளுக்கு நெகிழ்ந்து போயிற்று. தொண்டையில் பனங்காயாய் ஏதோ அடைத்தது. உனக்காக பிரார்த்தனை செய்யறேன் என்று சொல்லப்படும் வார்த்தைகளை இன்று கேட்கும்போது ஏதோ ஊன்று கோலை அவர்கள் நீட்டுவதுபோல தெம்பேற்படுவது வியப்பை அளித்தது. தன்னலமற்ற பிரார்த்தனை அல்லவா அது என்று நன்றி பெருக்கெடுத்தது. விவேக்கும் மற்றவர்களும் இல்லாவிட்டால் தன்னால் என்ன செய்திருக்க முடியும் என்று அவள் யோசிக்கவே பயப்பட்டாள். அலுவலகத்துக்கு ட்யூட்டிக்குச் செல்லும் வழியில் ராஜாவுக்கு விபத்து ஏற்பட்டதால், எல்லா மருத்துவ செலவுகளையும் ஆபீஸ் ஏற்றுக் கொள்ளும் என்று விவேக் சொன்னான். கட்டாயப் படுத்தி பாட்டி செய்து போட்டிருந்த ஒரு ஒற்றை வடத் தங்கச் சங்கிலியும் குந்துமணி சைஸில் ஒரு ஜோடி தோடும் ஒரு ஜோடி வளையலும் தவிர எந்த சொத்தும் அவளிடம் கிடையாது. ஆபீஸ், ராஜாவுக்குக் கார் கொடுத்திருந்ததால் அவள் உபயோகித்த சொந்த கார், இரண்டு பெட்ரூம் ஃப்ளாட் என்பதைத்தவிர எந்த சேமிப்பும் இல்லை. காருக்கும் வீட்டிற்கும் இன்னும் கடன் ஓடிக் கொண்டிருந்தது.

"சகுந்தலா!"

அவள் சுயநினைவு வந்து திரும்பினாள்.

"டாக்டர் வர்றார்" என்றான் சுதிர். டாக்டர் சென்குப்தாவின் வெள்ளை அங்கி கண்ணைக் கூசிற்று.

விவேக் அவளை அவருக்கு அறிமுகம் செய்தான் _ "மிஸஸ் ராஜ்மோஹன்". அவளைப் பார்த்துச் சிரித்த சிரிப்பில் சிநேகிதம் தெரிந்தது.

அவர் 'மிஸஸ்' என்று ஆரம்பித்துப் பேச முற்படுகையில் அவள் இடைமறித்துச் சொன்னாள். 'நீங்கள் என்னை சகுந்தலா என்று சொல்லலாம்' என்றாள்.

"ஓ.கே.குட்" என்று டாக்டர் சரளமாகச் சிரித்தார். "நான் உங்களிடம் முக்கியமாகக் கேட்க வேண்டும் என்று நினைத்தேன் சகுந்தலா. விபத்துக்கு முன்பு ராஜ்மோஹனுக்கு மாஸிவ் மாரடைப்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. அதனால்தான் பாலன்ஸ் தப்பி கம்பத்தில் கார் மோதியிருக்கும் _ தலையில் அடிபட்டதில் நினைவு தப்பி காம்ப்ளிகேஷன் ஆகிவிட்டது. நீங்கள் மெடிகல் லைனுக்கு சம்பந்தமுள்ளவரா?"

"இல்லை, அட்வர்டைஸிங் ஏஜென்ஸியிலே வேலை பார்க்கிறேன்."

"ஓ.கே. நான் மருத்துவ வார்த்தைகளைச் சொல்லி, உங்களைக் குழப்ப விரும்பவில்லை. ஒன்று தெரியணும். இதற்கு முந்தி ராஜ்மோஹனுக்கு மாரடைப்பு வந்திருக்கிறதா?"

"இல்லை டாக்டர்."

"ஆர் யூ ஷ்யூர்?"

"கொய்ட் ஷ்யூர்!"

"அன்று காலை ஏதாவது அப்செட் ஆனவர் போலவோ அசதியாகவோ தெரிந்தாரா?"

"இல்லை. எப்போதும் போலத்தான் இருந்த மாதிரி இருந்தது. ராஜாவும் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. இதுவரை தலைவலி என்றுகூடப் படுத்ததில்லை."

"என் மனைவி ரொம்ப குண்டானதுக்கு டாக்டர் என்னைத் திட்டினார்."

"நீங்க என்ன பண்ணுவீங்க. உங்களை ஏன் திட்டினார்?"

"நான்தானே சமைக்கிறேன்!"

- பூங்கதிர்



டாக்டர் சென்குப்தா யோசனையுடன் தலையசைத்தார். "அவருடைய ஃபாமிலி ஹிஸ்டரி தெரியுமா? அவருடைய அப்பா அம்மா யாராவது ஹார்ட் ப்ராப்ளம் உள்ளவர்களா?"

"எனக்குத் தெரியாது. ராஜா என்னிடம் சொன்னதில்லை."

"அவருக்குப் பெற்றோர்கள் இருக்கிறார்கள் அல்லவா?"

"ஆமாம், சென்னையில்."

"அவர்களுக்குத் தெரிவித்து விட்டீர்களா?"

அவள் விவேக்கைப் பார்த்து விட்டுச் சொன்னாள். "இன்னும் இல்லை, வயசானவர்களை பயமுறுத்துவானேன் என்று நினைத்தேன்."

டாக்டர் யோசனையுடன் அவளைப் பார்த்தார். இலேசான பெருமூச்சு விட்டபடி சொன்னார்.

"பயமுறுத்த வேண்டாம். தகவல் தெரிவிக்க வேண்டும். அவங்களுக்கு அதுக்கு உரிமை இருக்கு என்று நினைக்கிறேன்."

அவர் சொன்ன விதம் அவளுக்கு பீதி அளித்தது. வெடுக்கென்று அவருடைய கையைப் பற்றிக் கொண்டாள்.

"டாக்டர் ப்ளீஸ் சொல்லுங்கள் எனக்கு உண்மையை. ராஜா பிழைப்பார் என்று உங்களுக்கு நம்பிக்கையில்லையா?"

டாக்டர், சென்குப்தா அவசரமாகச் சொன்னார். 'நம்பிக்கையிழந்தா நான் டாக்டரா இருக்க லாயக்கில்லாதவன் சகுந்தலா. ராஜ்மோஹன் கண்டிப்பா நன்றாக ஆகிவிடுவார். பெற்றவர்களுக்கு விபத்தைப் பற்றித் தெரிவிக்காமல் இருக்கக் கூடாது என்பதற்காகச் சொன்னேன்."

"அவருக்கு நினைவு எப்ப வரும் டாக்டர்?"

"நாளைக்கே வரலாம், ட்ரீட்மென்டுக்கு உடம்பு ரெஸ்பாண்ட் செய்கிறது. சீராக இருக்கு. அதுவே நல்ல அடையாளம். தைரியமா இருங்க _ கடவுள் இருக்கிறார்."

இதுவரை இத்தனை பேர் ஒரே நாளில் கடவுளை அவளுக்கு ஞாபகப்படுத்தினதில்லை என்று அவள் நினைத்துக் கொண்டாள். இத்தனை பெரிய ஆஸ்பத்திரி தாழ்வாரத்தில் அடிவயிற்றைக் கவ்விய பீதியுடன் சூன்யப் பார்வையுடன் தான் நிற்பதே நம்ப முடியாத ஒன்றாக இருந்தது. இதற்கெல்லாம் விளக்கம் இல்லை என்பதால்தான் அந்த நினைவுபடுத்தல். டாக்டர் அவள் முதுகில் தட்டி 'டோன்ட் ஒர்ரி'



"இந்த சீரியல்காரங்க ரொம்ப அட்வான்ஸா போறாங்க.."

"எப்படி?"

"அவங்க தொடரை பார்த்து அதிகமா அழறவங்களைத் துக்கம் விசாரிக்க ஆள் அனுப்பறாங்க!"

- வந்தவாசி பா.ஜெயக்குமார்

என்று விட்டு நகர்ந்தார்.

அவர் சென்றபிறகு கதிரும் விவேக்கும் அவளைக் கட்டாயப்படுத்தி கான்டீனுக்கு அழைத்துச் சென்றார்கள். மதியச் சாப்பாட்டுக்கு ஆர்டர் கொடுத்து அவளுக்காகத் தாங்களும் சாப்பிட்டார்கள். காய்ந்து தகித்த வயிற்றுக்குள் சாப்பாடு நிறைந்ததும் மனசுக்குத் தெம்பு வந்தது போலிருந்தது. விட்டுப்போன சம்பாஷணையைத் தொடர்வதுபோல அவள் அவர்களிடம் சொன்னாள்.

"ராஜாவுடைய அப்பா நம்பர் எங்கிட்ட இல்லே!"

விவேக் வியப்புடன் அவளைப் பார்த்தான். மெல்ல புன்னகைத்து, "ஆபீஸ் ஃபைல்லே இருக்கும். நாலு வருஷத்துக்கு முந்தி ராஜா சேர்ந்தான். அதிலே நிரந்தர விலாசம்னு ஒரு கட்டம் இருக்கும். சாதாரணமா அப்பா அம்மா இருக்கிற விலாசத்தைத்தான் எல்லோரும் கொடுக்கிறது, நா பார்த்துக்கறேன்" என்றான்.

"ரொம்ப பயமுறுத்திடாதே. கிளம்பி வந்துட்டாங்கன்னா நான் என்ன செய்வேன்?"

"கிளம்பி வந்தா ஏதாவது ஹோட்டல்லே தங்க வைக்கலாம்."

"சே, எத்தனைக் கேவலம் அது!" என்றாள் அவள்.

"உன்னைப்பத்தி தெரியறவரைக்கும் அவங்க வெளியிலே இருக்கிறது நல்லது. இந்த சமயத்தில் உங்கிட்ட விரோதம் பார்ப்பாங்கன்னு நான் நினைக்கல்லே" என்றான் கதிர்.

"தவிர அவங்க பாஷைதானே நீயும்

பேசறே?"

"பாஷைப்பிரச்னையில்லே இது" என்றாள் அவள் தலை குனிந்து. பிறகு சடக்கென்று அவர்களை நிமிர்ந்து பார்த்தாள்.

"எனக்கும் ராஜாவுக்கும் இருக்கிற உறவுக்கு நீங்க இரண்டுபேரும் சாட்சி சொல்வீங்களா?"

இருவரும் திடுக்கிட்டு அவளைப் பார்த்தார்கள். விவேக் இலேசாகச் சிரித்தான்.

"இதென்ன கேள்வி? எங்களை நீ நம்பலாம். எந்தச் சிக்கலும் வராது. கவலைப் படாதே."

இக்கட்டான ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களை சந்திக்க நேர்வதுதான் தன்னை அச்சுறுத்துவது என்று இவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று அவள் நினைத்தாள். ராஜாவின் நெருங்கிய தோழர்கள் இருவரும். இப்பவும் அவளால் அதிக நேரம் குழந்தையை விட்டுவிட்டு ஆஸ்பத்திரியில் தங்க முடியாது என்பதை உணர்ந்து இருவரும் மாறி மாறி தங்குகிறார்கள். வீட்டிற்குக் கிளம்புவதற்கு முன் அவள் மீண்டும் ஐ.ஸி.யு.வுக்குச் சென்று ராஜாவைப் பார்த்தாள். எந்த மாறுதலும் இருப்பதாகத் தெரியவில்லை. காலையில் அமர்ந்திருந்த அந்தப் பெண்மணியைக் காணோம். படுக்கையே காலியாகியிருந்தது.

அவள் கிளம்பும்போது அவளுடன் நடந்து அவள் காரைக்கிளப்பும் வரை விவேக்கும் கதிரும் தைர்யம் சொன்னார்கள்.

"ரிலாக்ஸ்" என்றான் விவேக். "இப்ப நீ வேற எதைப்பத்தியும் யோசிக்கக் கூடாது. ராஜாவுடைய உடம்பு மட்டுமே முக்கியம். அவன் ஸ்டேபில் ஆயிட்டான்னு வைச்சுக்கோ மத்த எல்லாத்தையும் சமாளிச்சுடலாம்."

"ராஜாவுடைய அப்பாவும் அம்மாவும் வந்தாதான் என்ன, உன்னுடைய நிலைமையிலே எந்த மாற்றமும் வரப்போறதில்லே, ரைட்?"

அவளும் தமிழ் பேசுபவள் என்பது பெரிய சாதகமான விஷயம் என்பதுபோல கதிர் தைரியம் சொன்னான். அவள் எதுவுமே காதில் விழாததுபோல, அவர்கள் பேச்சுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்ற உணர்வுடன் அமர்ந்திருந்தாள்.

"ஏய், கமான், ஸ்மைல்!" என்றான் விவேக். "டீ.வி. சீரியல்லே பயப்படற மருமகள் மாதிரி முகத்தை வைச்சுக்காதே."

அவள் சிரித்தாள். "கொஞ்சம் கவலையிருக்கிறது உண்மைதான். ஆனா நீ சொல்ற மாதிரி இப்ப வேறே எதுவும் முக்கியமில்லே. ராஜாவுடைய உடம்பைத் தவிர."

ஆனால் இரவு படுக்கப்போகும்வரை முக்கியமில்லாத யோசனைகளே மனத்தில் குரங்காட்டம் போட்டன. ராஜாவின் இரண்டு வருஷத்துக்குப் பிந்தைய வாழ்க்கையைப் பற்றி தனக்கு முழுமையாகத் தெரியாது என்பது அவளை பலவீனப்படுத்திற்று. சிதறல்களாகவே சில விவரங்கள் நினைவில் இருந்தன. அவனுடைய அம்மாவுக்குத் தஞ்சாவூர் என்பதால் தஞ்சையில் பிறந்தவன். சென்னையில் அப்பா வக்கீலாக இருந்தவர் என்பதால் படித்தது சென்னையில். தன் அப்பா அம்மாவைப் பற்றிப் பேசுவதையே தவிர்த்தான். என்ன கோபம் என்று அவளுக்குத் தெரியாது.

அவள் வற்புறுத்திக் கேட்டதில்லை. கேட்கக் கூச்சமாக இருந்தது. தூண்டித் துருவுவது அவசியமில்லை என்று தோன்றிற்று. இருவருக்குமிடையே அது ஒரு எழுதப்படாத விதியாக இருந்தது. பரஸ்பர நம்பிக்கையும் பிரியமுமே அவர்களது தாம்பத்யத்தின் ஆதாரம். வேறு எதுவும் — இறந்த காலமோ அவர்களது எண்ணங்களைப் புரிந்து கொள்ளாத சொந்த பந்தங்களோ — அல்ல. அவர்களது சிநேகித வட்டம் அவர்களைப் போலவே இருந்தது. நினைவுகளில் வாழாத வட்டம். அது ஏற்படுத்திய துணிச்சலும் சுதந்திர உணர்வும் சொல்லில் அடங்காதது. வானம் வசப்பட்டதான உணர்வு அது. பிரபஞ்சத்தின் அகண்டத்தை முழுமையாக உணர்ந்த பரவசம்

"தலைவர் வாய் தவறி உண்மை சொல்லிட்டார்..!"

"என்னவாம்?"

"மாற்றுக் கட்சிகளைப் பழி வாங்கற எண்ணம் உண்டான்னு கேட்டதுக்கு, சட்டம் 'என்' கடமையைச் செய்யும்னு சொல்லிட்டார்!"

- அம்பை தேவா



அது. அதற்கு ஒரு பக்குவம் தேவைப்பட்டது. அந்தப் பக்குவம் அவளுக்கு அவர்களது வட்டத்தில் பலருக்கு இருந்தது போல வெறும் சிந்தையில் ஏற்பட்டதல்ல என்று அவள் நினைத்தாள். இருபத்தி ஐந்து வயதிற்குள் விரக்தியின் எல்லையைத் தொட்டதால், உறவுகளின் பொய்மையை உணர்ந்து கொண்டதால் ஏற்பட்டுப்போன பக்குவம். ராஜாவும் அப்படிப்பட்ட ஒரு எல்லையைத் தொட்டிருந்தவன் என்று அவளுக்குத் தோன்றும். அதுதான் முதல் சந்திப்பிலேயே இருவரையும் ஈர்த்தது என்று நினைக்கத் தோன்றிற்று. கனாட் பிளேஸ் சந்து ஒன்றில் பஞ்சாபி டாபாவில் அமர்ந்து அவள் நடுங்கும் டிஸம்பர் குளிரில் ஓர் இரவு மக்கய்கி ரோட்டியும் ஸர்ஸோங்கா ஸாகும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது சந்து முனையிலிருந்தோ, இருண்ட மேகங்களிலிருந்தோ மன்மதன் பாணத்தைச் செலுத்தியிருக்க வேண்டும். உண்மையில் சூடான சோள ரொட்டி அன்று எந்த இதத்தையும் அளிக்கவில்லை. வாழ்வின் ஒரே துணையாக இருந்த பாட்டியை எலெக்ட்ரிக் க்ரிமெட்டோரியத்தில் ஒப்படைத்துவிட்டு, சிறிது தனியாக நின்று அழுதுவிட்டு, பசித்ததால் டாபாவுக்கு வந்திருந்த நேரம் அது. பாட்டி பெற்ற நான்கு பிள்ளைகளும் தகவல் தெரிவித்தும் வரவில்லை என்றானதும் பாட்டி அவளிடம் கூட பேச வெறுத்துக் கண்ணை மூடியது நெஞ்சில் பாறாங்கல்லாய் அமர்ந்திருந்த நேரத்தில்தான் ராஜா என்ற ராஜமோகன் 'இங்கே உக்காரலாமா?' என்று அவள் எதிரில் அமர்ந்தான்.

இன்று நினைக்கும்போது சிரிப்பு வந்தது. வாழ்வின் முக்கியமான கட்டங்களில் ஏற்படும் திருப்பங்கள் திட்டமிட்டு எழுதப்பட்ட நாடகம் போல பிரமிப்பேற்பட்டது. இப்போது இந்த விபத்தும் அதன் ஓர் அங்கமாக...

டெலிபோன் ஒலித்தது. கப்பென்று அடிவயிற்றை பீதி கவ்வியது.

ஐ.ஸி.யுவில் குழாய்கள் பொருத்தப்பட்ட முகம் எதிரில் அமர்ந்தது.

(தொடரும்)

அமர்க்களத்தில் தமிழ் நாடகங்கள்!

நாடகப்பள்ளி வெளி வளாகத்தில் தினமும் வீதி நாடகங்கள். பின்னர் ஒவ்வொரு நாளும் முந்தைய நாள் மேடையேறிய நாடக நிகழ்வுகளின் இயக்குநர்களுடன் நேர்முகம். இப்படி வெகுவாக அமர்க்களப்பட்டுக் கொண்டு வருகிறது நாடக விழா.

டெல்லி தேசிய நாடகப்பள்ளி கடந்த நான்கு வருடங்களாக தலைநகரில் இதுபோன்ற தேசிய நாடக விழாவினை நடத்தி வருகிறது. இந்த நாடக விழாவுக்கு இந்தியாவின் மூலை முடுக்குகளில் உள்ள நாடகக் குழுக்களை வரவழைத்து அவர்களுக்கு நிதி உதவியளித்து நாடகங்கள் மேடையேற்றம் செய்யப்படுகின்றன. இந்த வருடம் இந்தியாவின் அனைத்து மாநிலங்களில் மட்டுமல்லாது ஜெர்மனி, இஸ்ரேல், மொரீஷியஸ், கொரியா மற்றும் பங்களா தேஷிலிருந்தும் நாடகக் குழுக்கள் அழைக்கப்பட்டுள்ளன.

இந்த அமர்க்களத்தில் பங்கேற்றன நான்கு தமிழ் நாடகங்கள்.

முதலாவதாக கூத்துப்பட்டறை ந. முத்துசாமியின் 'நல்லவன்' நாடகம் மேடையேறியது. டெல்லி பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் செ.ரவீந்திரனின் ஒளியமைப்பு நாடகத்தின் உணர்ச்சியோட்டங்களுக்குப் புதுப்புது அர்த்தங்கள் சேர்த்துக் கொண்டிருந்தது. இந்த நாடகப் போக்கினை இரண்டு மூன்று விஷயங்கள் இடறவைத்தன. முதலாவதாக இசை. மேடை நிகழ்வுக்கும் இசைக்கப்பட்ட இசைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

இரண்டாவதாக நாடக மொழிபெயர்ப்பு. மூலத்துக்கு எப்போதும் மிகவும் விசுவாசமாக இருப்பவர் கிருஷ்ணமூர்த்தி என்று சொல்வார்கள். ஆனால் நாடகப்பிரதியின் மொழிபெயர்ப்பு நடிகர்களுடனும் பார்வையாளர்களுடனும் எந்தவித நட்பையும் பாராட்டவில்லை. நவீன நாடகங்களைப் பார்த்து மக்கள் ஏன் ஓடுகிறார்கள் என்பதற்கு இவை போன்ற மேடை மொழியாடல்களும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அடுத்து சென்னை 'மௌனக்குரல்' குழுவினரின் மணிமேகலை. கவிஞர் இன்குலாப் நாடகப் பிரதியாக்கம் செய்திருக்கிறார். அ.மங்கை, மணிமேகலையை இயக்கியிருக்கிறார். இந்த நாடகத்தில் பங்கேற்ற அனைவரும் பெண் கலைஞர்களே. இப்பெண் கலைஞர்கள் அனைவரும் தொழில்முறை நாடகக் கலைஞர்கள். என்ன ஒரு வளமான குரல். பாடல்களையும் வசனங்களையும் தேர்ந்த அங்க அசைவுகளுடன் வெளிப்படுத்தி அனைவரையும் பிரமிக்கவைத்தார்கள். ஆனால், இப்பெண்மணிகளுக்கு நவீன கவிதை வரிகளைக் கொடுத்து அவர்களைக் கஷ்டப்படுத்தியது போன்று இருந்தது நாடக நிகழ்வு.



• மணிமேகலை

மணிமேகலை நாடகப் பிரதியும் எந்தவிதமான நவீன வாசிப்புக்கும் இடமளிக்கவில்லை. புதுமைப்பித்தனும் பிரபஞ்சனும் தங்கள் அகலிகைகளில் செய்தது போல், அப்படி ஏதேனும் இருந்திருக்குமானால் அது பார்வையாளர்களைத் தெளிவான வகையில் சென்று அடையவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

பாண்டிச்சேரியின் 'தலைக்கோல்' நாடகக் குழு 'தூங்கிகள்' நாடகத்தை இந்த விழாவில் மேடையேற்றியது. பிரதியாக்கமும் இயக்கமும் முனைவர் கருஞ்சுழி ஆறுமுகம். தூங்கிகள் நாடகத்தில் மேடையிலிருந்து கிளம்பி பார்வையாளர்களின் வெளியினைக் கடந்து முடியும் நீண்ட தண்டவாளம். இதுதான் அரங்க அமைப்பு. முதலில் ஒருவன் தண்டவாளத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறான். ரொம்ப நேரம். ஒரு அறிவு ஜீவித்தனமான பொறுமையுடன் பார்



• இறுதியாட்டத்தில்...

வையாளர்கள் காத்திருக்க, நீண்ட நேரம் கழித்து எழுந்து இன்னும் நீங்க தூங்கலையா? என்று கேட்டுவிட்டு மீண்டும் தூங்குகிறான்! இப்படி நான்கைந்து முறை. தூக்கம் தரும் வசதிகளைப் பற்றி எல்லோருக்கும் தெரிந்த விஷயங்களை ஒரு தேவரகசியத்தை வெளியிடுவது போல சொல்லி எல்லோருக்கும் புரிய வைக்கிறான். ஒரு வழியாக பார்வையாளர்களின் மேல் கொஞ்சம் கருணை வைத்து, இதோ 'அவங்க வராங்க' என்று சொல்லிவிட்டு எழுந்து போகிறான். இரண்டு பேர் ஒவ்வொருவராக வருகிறார்கள். ரயிலுக்காக காத்திருப்பதாக ஒருவன் சொல்கிறான். ஒருவன் விமானத்திலிருந்து குதித்து இங்கு வந்தவன். இன்னொருவன் காந்தாரியின் புத்திரர்களில் ஒருவன். இறந்த சகோதரர்களை எழுப்ப அவன் தாய் அவனை சஞ்சீவினி மூலிகைகளைக் கொண்டுவரச் சொல்ல, அவன் கட்டளையேற்று இங்கு காத்திருப்பவன். மூலிகை மணத்தை அவன் முகர்ந்து செல்ல இறுதியில் அவன் கண்டுகொண்டது அவன் தாயின் நறுமணத்தை. இந்த நாடகத்தில் பங்கேற்ற இரு நடிகர்களும் அற்புதமாக நடித்திருந்தனர். மிக அருமையான உணர்ச்சி வெளிப்பாடுகளும் உச்சரிப்பும் பார்வையாளர்களை லயிக்க வைத்தன. ஒருவரே பேசும் நீண்ட வசனங்கள் யாரையும் தளர்வடையச் செய்யவில்லை. ஆனால் பார்வையாளர்களை மிகவும் ஹிம்சித்தது பின்னணியில் கூடவே வந்த இசைதான்.

இறுதியாக, தஞ்சை அரங்கம் குழுவினர் வழங்கிய 'இறுதி ஆட்டம்' ஷேக்ஸ்பியரின் கிங் லியர் நாடகத்தைத் தழுவி இந்திரா பார்த்தசாரதி எழுதிய நாடகம். இயக்கம் ராஜு. மேடையமைப்பும் ஒப்பனையும் இவர் நாடகங்களின் பரிமாணங்களுக்கு ஆழம் சேர்ப்பன. இவர் இயக்கிய எல்லா நாடகங்களுமே மிகவும் நேராகக் கதையைச் சொல்பவை. பார்வையாளர்களின் புரிதலில் ஆழ்ந்த அக்கறைகள் கொண்டது இவருடைய மேடை இயக்கம். இந்நாடகத்தில் பங்கு கொண்ட பெரும்பாலான கலைஞர்கள் யாரும் பயிற்சி பெற்ற நாடகக் கலைஞர்கள் அல்ல என்பது மிகவும் குறிப்பிடத்தகுந்த விஷயம். இறுதியாட்டம் போன்று தெளிவாக விஷயங்களை எடுத்து வைக்கும் நாடகங்கள் தமிழகத்தின் பல நகரங்களிலும் கிராமங்களிலும் மேடையேற்றம் கொண்டால் நவீன நாடகம் என்ற பேச்சைத் தொடங்கும்போதே பல மைல் தூரங்கள் ஓடத் தயாராக இருப்பவர்களை ஓரிடத்தில் நிறுத்தி வைக்கலாம். நாடகங்களை நோக்கி அவர்களை ஒரு நட்பு பாவனையுடன் நெருக்கம் கொள்ள வைக்கலாம்.

தேசிய நாடகப்பள்ளியால் பல லட்சங்கள் செலவழித்து கொண்டு வரப்படும் இந்த நாடகங்களுக்குச் சேரும் பார்வையாளர்கள் மிகவும் குறைவே. ரொம்பவும் அநியாயத்துக்குக் குறைவு. அடுத்த வருடம் தலைநகரின் நாடக விழாவுக்கு இன்னும் அதிகமான நாடகங்கள் வரப்போகின்றன என்று சொன்னார்கள். இன்னும் அதிகமான பார்வையாளர்களும் வரவேண்டுமே!

— ராகவன்தம்பி

படங்கள்: எஸ். தியாகராஜன்



கறுப்பு - வெள்ளை

''**சா**ர்''_ என்று அசிஸ்டெண்ட் அழைக்க, சினிமா இதழ் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்த நான் திரும்பினேன்.

"என்னய்யா?"

''சான்ஸ் கேட்டு ஒரு லேடி வந்திருக்காங்க..''

"இப்ப யாரையும் பார்க்க முடியாதுன்னு சொன்னியா. தினமும் ஐம்பது பேர் நடிக்க சான்ஸ் கேட்டு வர்றாங்க. யாருக்கு சான்ஸ் கொடுக்கிறது. கொஞ்சம் கலரா இருந்தா போதும், மெட்ராஸுக்குக் கிளம்பி வந்துடறாங்க'' என்று அலுத்துக் கொண்டேன்.

வாய்ப்பு தேடி அலைந்த காலங்களையெல்லாம் இப்போது மறந்து – ஜெயித்துவிட்ட அகங்காரத்தில் பேசுவதாய்த் தோன்றியது.

''பிஸியா இருக்காங்கன்னு சொன்னேன் சார்... உங்களைத் தெரியும்னு சொன்னாங்க. பேரு கலாவாம். நாலைந்து வருஷத்துக்கு முன்னே உங்களுக்குப் பழக்கமாம்'' என்றான்.

எந்த கலா... ஓ! அவளா? ஞாபகம் வந்து விட்டது.

சான்ஸ் கேட்டு வந்திருப்பது கலாவா... சிரிப்பு வந்தது. இனி என் முறை... ஜெயித்து விட்டோம் என்று அன்று என்னை மதியாமல் பேசினவள். என் காதலைச் துச்சமாய் மதித்தவள். இன்று என்னிடமே சான்ஸ் கேட்டு வந்திருக்கிறாள்.

நல்லதும் கெட்டதுமாகப் பல விஷயங்களை வாழ்க்கை காட்டுகிறது. பரிதாபம் என்ன



வெளில் நல்ல விஷயங்களை எல்லாம் மறந்து விட்டு, கெட்ட விஷயங்களை மட்டுமே ஞாபகத்தில் கொண்டு வாழ்கிறோம். நானும் கூட அதற்கு விதி விலக்கல்ல... துவேஷம், ஆணவம், அகங்காரம் இவற்றை மட்டுமே மனத்தில் கொண்டு – என்னைச் சிறுமைப் படுத்தியவர்களையெல்லாம் சிறுமைப் படுத்த ஆலாய்ப் பறக்கிறேன். வயது வித்தியாசம் பார்ப்பதில்லை. மனத்தில் நிறைந்திருப்பது பழி உணர்ச்சி மாத்திரமே.

நான் குடி இருந்த

●●

'எத்தனையோ பேரால்—எத்தனையோ இடங்களில் அவமானப் பட்டிருக்கிறேன். அதெல்லாம் என்னை பாதிக்கவில்லை. ஆனால் ஒரு பெண்ணால்—அவமானப்படுத்தப் பட்டதுதான் வெகு காலத்திற்கு என்னை அலைகழித்தது.'

●●

போர்ஷனுக்குப் பக்கத்து வீட்டில்தான் கலா குடியிருந்தாள். சினிமா ஆசையில் மதுரையிலிருந்து சென்னைக்கு ஓடிவந்தவன் நான். கலாவும் சினிமா ஆசையில் தன் தாயுடன் சென்னை வந்து விட்டவள்தான். கலா வெகு அழகாய் இருந்தாள். நல்ல இயக்குனரின் கண்ணில் பட்டால்

யோகி

நிச்சயம் பெரிய அளவில் பிரகாசிப்பாள் என்று தோன்றியது.

அப்போது எங்கள் காம்பவுண்ட்டில் இருந்த இளைஞர்களில் – நான்தான் உருப்படியாய் ஒரு பிரபல இயக்குனரிடம் வேலையில் இருந்தேன். மற்றவர்கள் எல்லாம் ஏனோ தானோ இயக்குனர்களிடம் பணிபுரிந்தனர். ஆயினும் எல்லோரிடமும் ஒரே ஒரு ஒற்றுமையிருந்தது. அது கலாவின் மீதான காதல்.... எனக்கு இயக்குனராகும் வாய்ப்பு கிடைத்தால் அவளது சினிமா ஆசையைத் தணித்து, அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினேன்.

கலாவும் மற்றவர்களை விட என் மீது அதிகமான பிரியத்துடன் பழகினாள். காதல் என்று நம்பினேன்.

"அதெல்லாம் ஒரு மண்ணும் இல்லை. சான்ஸ் வாங்கத்தான் இந்தத் தந்திரம். ஏமாந்துடாதே" என்று சிநேகிதர்கள் சொன்னார்கள். ஒரு தருணத்தில் கலாவை விரும்புவதாய்ச் சொன்னேன். கலாவுக்கும் விருப்பம்தான்.

"உங்களுக்கு எதுக்கு சினிமா ஆசை... விட்டுடுங்க. நாம் கல்யாணம் பண்ணிப்போம். கொஞ்ச நாள்ல எனக்குத் தனியா படம் பண்ணக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். அப்ப கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் சரி – இப்பவே பண்ணிக்கிட்டாலும் சரி தான்... நான் மூணு பேருக்குக் கௌரவமா சோறு போடக் கூடிய அளவு சம்பாதிக்கிறேன்" என்றேன்.

தலையசைத்தாள். அது சம்மதமா... சம்மதமின்மையா என்று புரியவில்லை. அந்த சமயம் அவள் நாயகியாக அறிமுகமாகும் வாய்ப்பு கிடைத்தது. ஓரளவு பெயர் சொல்லும்படியான இயக்குனர்தான். அவள் நடிப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. இருந்தாலும் எது சொல்லவும் எனக்கு எந்த உரிமையுமில்லை. கதாநாயகியான மறு நிமிஷமே என்னை மறந்து போனாள். என்னோடு பேசுவதை நிறுத்திக் கொண்டாள். அவமானமாய் இருந்தது. அவளுக்கு நான் என்ன கெடுதல் செய்தேன். அவளோடு கௌரவமாய்த்தானே பழகினேன். அவளது புறக்கணிப்பு என்னை ஹிம்சித்தது.

"நான் ஜெயிக்கப் போகிறேன். இனி உன் தயவு தேவையில்லை" என்கிறாளோ.

பிரபலமாகிவிட்டால் – இவனை வெட்டி விடுவது கஷ்டம் என்று இப்போதே வெட்டி விட்டுவிட்டாளோ... ஒரு கதாநாயகி, உதவி இயக்குனரை நேசிப்பது கௌரவக் குறைச்சல்; தன் அந்தஸ்துக்கு சரிபடாது என்று கருதினாளோ... அவளது உதாசீனம் என்னைப் பொடிப் பொடியாய் நொறுங்கிப் போகச் செய்தது.

'உனக்கு வெற்றியைத் தரும் வாழ்க்கை – நாளை எனக்கும் தரும் என்று ஏன் பெண்ணே உனக்குத் தெரியவில்லை. வெற்றி என்பது உனக்கு மட்டும் சொந்தமான ஒன்று இல்லையே..' புலம்பினேன்.

கதாநாயகியான சில நாட்களிலேயே இந்த போர்ஷனை விட்டு போனாள். முதல் படம் வந்தது. சுமாராகப் போனது... தொடர்ந்து இரண்டு படங்கள். பிறகு இரண்டாவது கதாநாயகியாய் நடித்தாள். பிறகு காணவே இல்லை. அவளை நானும் மறந்து விட்டேன். இடைப்பட்ட காலத்தில் – நானும் படம் இயக்கி – இதுவரை பத்து படங்கள் செய்து ஆறு படங்களை நூறு நாள் படமாக்கி இருந்தேன்.

வெற்றி இயக்குனர் என்று பெயர் எடுத்துவிட்டேன். கலா என்பவளை நான் சுத்தமாக மறந்து விட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். முதல் படம் பண்ணும் போது அவள் ஞாபகம் எனக்கு இருந்தது. எங்கு அவள் இருக்கிறாளோ.. எங்கு இருந்தாலும் – நான் ஜெயிப்பதைப் பார்க்கக்



"நம்ப எம்.எல்.ஏ. தொகுதியை அரபு நாடு மாதிரி மாத்திக்காட்றேன்னு எதை நம்பிச் சொல்றாரு?"

"நம்ம ஊருக்குள்ள அங்கங்கே முளைச்சிருக்கிற ஈச்ச மரங்களை நம்பித் தான்!"

– ஓமலூர் வெட்டி பாரதி ப்ரியன்

கூடும் என்று நினைத்தேன்.

எத்தனையோ பேரால் — எத்தனையோ இடங்களில் அவமானப்பட்டிருக்கிறேன். அதெல்லாம் என்னை பாதிக்கவில்லை. ஆனால் ஒரு பெண்ணால் — அவமானப் படுத்தப்பட்டதுதான் வெகு காலத்திற்கு என்னை அலைக்கழித்தது. காலப்போக்கில் அவளை மறந்துவிட்டேன்.

இப்போது என்னிடமே வாய்ப்பு கேட்டு வந்து இருப்பதுதான் காலத்தின் கோலம்... உனக்கு வாய்ப்பு தருவேன்... எந்த வேடம் தெரியுமா... மூன்றாந்தர வேஷம்! யாரையும் எப்போதும் துச்சமாய் மதியாதே.. அவர்கள் எந்த வடிவிலாவது வளர்ந்து நம் முன்பே ஆஜானுபாகுவாய் நிற்பார்கள் என்ற உண்மையை ஏன் மறந்தாய்? மனசுக்குள் ஆத்திரம் பொங்கியது.

'எந்த மூஞ்சியை வைத்துக் கொண்டு என்னிடமே சான்ஸ் கேட்டு வந்திருக் கிறாய். கறுவிக் கொண்டே எழுந்தேன்.

அறையை விட்டு வெளியே வந்தேன். "எங்க இருக்கு அந்தப்பொண்ணு...?" கேட் டேன்.

"வராண்டாலே இருக்காங்க."

'கலா ... உன்னை அலைக்கழிக்கப் போகிறேன். அன்று எனக்கு ஏற்பட்ட வலியை இன்று நான் உனக்கு எந்த வடிவி லாவது தரப் போகிறேன் பார்..! மனத்தில் வக்ரத்தை நிரப்பி வழியவிட்டுக் கொண்டு வராண்டாவுக்கு வந்தேன்... அதிர்ந்து போனேன். அவள் தோற்றத்தைப் பார்த்து— அந்த அழகு கலாவா இது?

அந்த வனப்பு போய், மெலிந்து கன்னம் ஒட்டிப்போய் ஒரு வியாதிக்காரி போல் இருந்தாள். என்னைப் பார்த்ததும் எழுந்து நின்றாள். சிரித்தாள் பழைய சினேகத்தில். இவளுக்கு என்ன வாய்ப்பு தர முடியும்?

சட்டென்று தோன்றியது... சம வலிமை உள்ளவனோடு போரிட்டால்தான் வெற்றிக் கும் மரியாதை. போராடுபவனுக்கும் மரியாதை. பார்க்கவே பரிதாபமாய் இருக் கிறாளே! இவளோடு போராட எனக்கு வாய்ப்பு இல்லாமல் போனது.

அனுதாபத்துடன் அவளைப் பார்த் தேன்... மனத்தின் வக்ரம் காணாமல்போய் விட்டது.

கலாவுக்கு எப்படி உதவலாம் என்ற நினைப்பில் யோசிக்க ஆரம்பித்தேன். ○

கல்கி

VBC Jewellery

House of Vummidi

* 78, G.N.Chetty Road, Vani Mahal Circle, (Opp. Hotel Residency), T.Nagar, Chennai - 600 017. ✆ : 8229556, 8229560
* 11-B, Nageswara Rao Road, Panagal Park, T.Nagar, Chennai - 600 017. ✆ : 4342407, 4346297

இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி; பொன்நகைப் பரிசு!

சம்மர் ஜோக்!

விறுவிறுப்பாக வெயில் ஏறிக் கொண்டிருக்கிறது. ஜில்லுன்னு ஜோரா ஜிக்குன்னு கூலா ஒரு ஜோக் எழுதுங்கள். குளிர்ச்சியாக சிரிக்க வைக்கும் இரண்டு நகைச்சுவைக்கு தலா நான்கு கிராம் தங்கம் பரிசு வழங்கப்படும்.

புன்னகைப் போட்டி - 10

என்று குறிப்பிட்டு உங்கள் ஜோக்கை எழுதி, முகவரியைக் குறிப்பிடுங்கள். தபால் உறை அல்லது தபால் கார்டில், கீழே உள்ள கூப்பனை வெட்டி ஒட்டி அனுப்புங்கள்.

கடைசி தேதி : 29.4.2002

ஆசிரியர், கல்கி,
47. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.


சாணி தோய்ந்த
வாலைச் சுழற்றியபடியே
நடக்கும்
எருமையைக்
கடக்கும்பொழுதும்...

பிரதோஷ சிவனை
பக்தியோடு
பார்த்துவிட்டுவரும்போது
ஒயின்ஷாப்பிலிருந்து
குழறலோடு
நெருப்புப் பெட்டி கேட்கும்போதும்...

ஜிபிஎப்... வாங்கி
அடித்த வெள்ளையில்
வயிறெரிய
கலர் கலராய்ச் சின்னம்
வரைந்த
வேட்பாளர்
புளிச்ச நாற்றத்தோடு
வீடேறி வோட்டு கேட்டபோதும்...

பக்கத்து போர்ஷனில்
புதுப்பெண்
அடிபட்டு
ராத்திரி முழுதும்
முனகியபடி
அழுதகுரல் கேட்டபோதும்...

ஒதுங்கிப் போயே
பழகி விட்டது...



ராஜன் ஸ்ரீநிவாஸ்




சித்திரமும் (இடது) கைப் பழக்கம்!


'அவருக்கென்ன! இடது கையால படம் வரைஞ்சுடுவார்'னு ஜஸ்ட் உபசாரதுக்குச் சொல்றதுண்டு. நிஜமாவே ஒரு ஆர்டிஸ்ட் அப்படி வொர்க் பண்ணியிருக்கார். தெரியுமா! ஸ்ட்ரோக் வந்ததால ரைட் ஹான்டை யூஸ் பண்ண முடியாமப்போன கோபுலு ஸாரைத்தான் சொல்றேன். பாருங்க படங்களை... வழக்கமா வலது கையால போடற ஒருத்தர் இடது கையால போட்ட படங்கள்னு சொல்ல முடியுமா!


● கோபுலு


● மாருதி



ஹாஸ்பிடல்ல ஒரு ஃப்ரென்டைப் பார்த்தப்போ, "இது எனக்கு ஒரு புது அனுபவம்'னு சிரிச்சுக்கிட்டே சொன்னாராம். 'கோபுலுவோட ஸ்ட்ரோக்ஸைப் பார்த்து ரசிச்சவங்க, இப்போ கோபுலுவுக்குன்னு ஸ்ட்ரோக் வந்திருக்கு பார்க்க வர்றாங்க'ன்னு ஒரு மாஸ்டர்லி ஸ்ட்ரோக் வேற அடிச்சாராம்!



அவருக்கு பதிலா விகடன்ல படம் போடற மாருதியோட வொர்க்கை கவனிச்சிருப்பீங்க. காரெக்டர்ஸோட முகமும் கோபுலு சாரோட ஃப்ளோவும் மெயின்டெயின் ஆகணும்னு ரொம்ப கவனமா போடறது தெரியுது. மாருதிக்கு வந்து சேர்ந்திருக்கறது பெரிய பொறுப்பு. அதை அவரோட ராமாயண நேம்ஸேக் மாதிரியே ரொம்ப தீவிரமா, பக்தியோட நிறைவேத்தறார்.



சித்ரபானு வருஷத்துல இந்த இரண்டு சித்திரக்காரர்களுக்கும் நம்ம மன்றம் சார்பா வாழ்த்து.

\- சுமி


அக்னிசர்மா பக்கம் ஏப்ரல் 17 முதல் 23 வரை



மேஷம் : கடைசி பரீட்சை எழுதி முடித்தவுடன் மனத்தில் ஏற்படுமே, அந்த மாதிரியான உற்சாகம் பெண்களுக்கு ஏற்படும். விருந்து, கேளிக்கைகளில் கலந்து கொள்ள வேண்டியது வரும். குடும்ப நலனில் அக்கறை செலுத்துங்கள். சிறு சண்டைகள் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். எல்லோரிடமும் அன்பாகப் பேசி, விட்டுக் கொடுத்தால் நன்மை உண்டாகும். வியாபாரிகளுக்கு மந்த நிலை விலகி முன்னேற்றம் தெரியும்.



ரிஷபம் : நாளொரு பிரச்னை, பொழுதொரு விமர்சனத்தைச் சந்தித்துக் கொண்டிருந்தாலும் கலைஞரின் பேச்சில் திறமையும் சாமர்த்தியமும் வெளிப்படும். அதேபோல் உங்கள் பேச்சிலும் சாமர்த்தியமும் திறமையும் வெளிப்படும். பணப் பிரச்னை இருக்காது. புதிய சொத்துக்கள் வாங்க வேண்டிய சூழ்நிலை நிலவும். நல்லவர்கள், வல்லவர்களின் நட்பு தேடி வரும். பெண்கள் நினைத்த காரியம் ஈடேறும். எதிலும் நிதானத்தைக் கடைபிடித்தால் அமோகமான வாரம்தான் போங்க.



மிதுனம் : காந்தி ஆசிரமத்திலேயே தாக்கப்பட்ட மேதா பட்கர் துணிச்சலுடன் எதிர்ப்புகளைச் சமாளித்து தன் கொள்கையில் உறுதியாக இருக்கிறார். அவரைப் போல எதையும் சமாளிக்கும் சக்தி உங்களுக்கு உண்டாகும். சிலருக்குப் பதவி உயர்வும், இடமாற்றமும் தேடி வரும். 12-ல் உலவும் கிரகங்களால் செலவு கொஞ்சம் அதிகமாகும். அலைச்சல் அதிகமாக இருப்பதால் உடல் நலத்தில் கவனம் தேவை. வாழ்க்கைத் துணைவர், மக்கள் நலம் சீராக இருக்கும்.



கடகம் : கிராமத்தில் பிறந்து தமது உழைப்பாலும் திறமையாலும் நாடு போற்றும் அணுசக்தி விஞ்ஞானியாகத் திகழ்கிறார் டாக்டர் அப்துல் கலாம். அதே போல் உங்கள் திறமையும் முயற்சியும் வெளிப்படும். மனத்தில் துணிவும் தன்னம்பிக்கையும் ஏற்படும். வருமானத்துக்குக் குறைவு இருக்காது. எடுத்த காரியம் வெற்றி பெறும். புதியவர்களின் நட்பு கிடைக்கும். மூத்த சகோதர, சகோதரியால் எண்ணங்கள் நிறைவேறும். மனத்தில் சலனம், குழப்பம் இருந்துவரும், எனினும் பாதிப்பு ஏதுமில்லை.



சிம்மம் : ஜிபிஸ்கேன் டென்னிஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் இதுவரை ஸ்டெஃபிகிரஃப் மட்டுமே 5 முறை பட்டம் வென்றிருக்கிறார். மனைவியைப் போல் தாமும் அப்பட்டத்தை வெல்ல நினைத்த அகஸ்ஸி கடந்த மாதம் 5வது முறையாக வென்று மனைவியின் சாதனையைச் சமன் செய்து விட்டார். அதே போல் உங்கள் எண்ணங்கள், இலட்சியங்கள் நிறைவேறும். எல்லோரும் பக்கபலமாக இருப்பார்கள். சிலருக்குத் திடீர் அதிர்ஷ்டம் கதவைத் தட்டும். எதிர்ப்புகள் குறைந்து எதிரிகள் காணாமல் போவார்கள். கணவன் - மனைவி உறவு சந்தோஷமாக இருக்கும்.



கன்னி : சுக்கிரன், கேது மட்டுமே அனுகூலமாக உலவுகிறது. எனவே எதிலும் விசேஷமான பலன்கள் கிடைக்காது. பல வருடங்களாக இலங்கையில் நிலவி வந்த இனப் பிரச்னை நார்வே தூதுக்குழு முயற்சியால் அமைதியை நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கிறது. அதே போல் உங்கள் பிரச்னைகளை நிதானமாகவும், புத்திசாலித்தனமாகவும் கையாண்டால் மலைபோல வந்த பிரச்னை பனிபோல கரைந்து போகும். பொருளாதாரத்தில் ஏற்றம் இறக்கம் காணப்படும். பேச்சில் கடுமை கூடாது. குடும்ப நலம் சீராக இருக்கும்.




தனுசு ராசிக்காரரான ராணி முகர்ஜிக்கு உற்சாகம் கொப்பளிக்குமாம்.

நடக்குமென்பார்; நடக்கும்!




துலாம் : இறுதிச் சுற்று வரை கொண்டு சென்ற அமீர்கானின் திறமை, தன்னம்பிக்கை போல் உங்கள் திறமையும் வெளிப்படும். எடுத்த காரியத்தை எப்பாடு பட்டாவது நிறைவேற்றி வெற்றி காண்பீர்கள். நண்பர்கள், உறவினர்கள் உதவிக்கு ஓடி வருவார்கள். புதிய பதவிகள், பட்டங்கள் தேடி வரும். சிறு இடர்பாடுகளைப் பொருட்படுத்த வேண்டாம். பயணத்தில் கவனம் தேவை.



விருச்சிகம் : உத்திரப் பிரதேசத்தில் தனிப் பெரும் கட்சியாக வெற்றி பெற்றாலும் கூட முலாயம்சிங்கால் ஆட்சியில் அமரமுடியவில்லை. அதே ராசிதான் உங்களுக்கும். பிரச்னைகள், சோதனைகள் அதிகரிக்கும். எதையும் ஒன்றுக்கு நான்கு முறை யோசித்து நிதானமாகச் செயல்படுவது நல்லது. இறை வழிபாடு சங்கடங்களைக் குறைக்கும். வாரத்தின் பின் பகுதியில் நண்பர்கள், உறவினர்கள் உதவியால் நிம்மதி கிடைக்கும். பெரியவர்கள் அதிருப்திக்கு ஆளாக வேண்டாம்.



தனுசு : அழகி என்ற அழகான படத்தைக் கொடுத்து சிறந்த இயக்குனர் என்ற பெயரைப் பெற்றதோடு, அடுத்த படத்துக்கான வேலையிலும் இறங்கிவிட்டார் தங்கர் பச்சான். அதே போல் உங்கள் திறமையும் புத்திசாலித்தனமும் வெளிப்படும். செயலில் வேகம் பிறக்கும். மனத்தில் உற்சாகம் கொப்பளிக்கும். பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு அதிர்ஷ்டம் கூரையைப் பிச்சிக்கிட்டுக் கொட்டும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகம் கிடைக்கும்.



மகரம் : சமீபத்தில் நடந்து முடிந்த சில சட்டசபைத் தேர்தல்களிலும், டெல்லி மாநகராட்சி தேர்தல்களிலும் பிரியங்காவின் பிரசாரம் இல்லாமலே காங்கிரஸ் அமோகமாக வெற்றி பெற்றிருக்கிறது. யார் தடுத்தாலும் உங்களின் நிர்வாகத் திறமையும், வசீகரமும் வெளி உலகுக்குத் தெரிய வரும். எதிர்ப்புகள் குறையும். விருந்துகளில் கலந்து கொள்ளவும், உல்லாசமாக இருக்கவும் சந்தர்ப்பம் கூடி வரும். எல்லாவற்றையும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். மறதியால் பாதிப்பு வர வாய்ப்பிருக்கிறது. குறுக்கு வழியில் செல்ல வேண்டாம்.



கும்பம் : மேயர் பதவி வகிப்பதா, எம்.எல்.ஏ. பதவி வகிப்பதா என்று ஸ்டாலின் திணறுவது போல பிரச்னைகள் எல்லாம் உங்களுக்கு வராது. நீங்கள் நினைத்த காரியம் கைகூடப் போகுது. அறிவாற்றல், சாமர்த்தியம் அதிகரிக்கும். எதிர்ப்புகள் குறைந்து எதிரிகள் விலகிப் போவார்கள். நல்ல தகவல் வரப் போகுது. குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். அலைச்சலும் உழைப்பும் கொஞ்சம் அதிகமிருந்தாலும் உங்களுக்கு யோகமான வாரம்தான்.



மீனம் : எம்.பி.க்களுக்கு லஞ்சம் கொடுத்த வழக்கில் விடுதலை ஆனார் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ். அதேபோல உங்களுக்கும் நீண்ட காலமாக இழுத்துக் கொண்டிருந்த வழக்குகளில் வெற்றி கிடைக்கும். சட்டம், காவல், இராணுவத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு விசேஷமான வாரம். புதிய பொருள் வந்து சேரும். பெண்களுக்கு மனத்தில் உற்சாகம் பொங்கும். விவசாயிகளுக்குச் செழிப்பு உண்டாகும். பேச்சில் காரம் கூடாது. நல்லவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வது நல்லது.

ஒன்றும் மேகங்கள்

● மதுபாக்யா

“கோகிலா, வாடி வீட்டுக்குள்ளே. என்ன ஒரேயடியா அந்தத் துணி துவைக்கற கல்லிலே உட்கார்ந்துக்கிட்டு வானத்தையே பார்த்துக்கிட்டு இருக்கிறே... உன்னைக் கட்டிக்கப்போறவன் என்ன வானத்தில் இருந்தா வந்து விழப்போறான்...” அம்மா கேட்ட கேள்வி சுள்ளென்று தைத்தது.

தினமும் மாலை வீட்டின் பின்புறம் பூவரசம் மரத்தடியிலோ துணிதுவைக்கும் கல்லில் உட்கார்ந்துக்கிட்டோ வானத்தையே உற்று நோக்கிக் கொண்டிருப்பேன். பள்ளியிலும் கல்லூரியிலும் படிக்கும் நாட்களில் இதே இடத்திலிருந்து பாடங்களை மனப் பாடம் செய்த பழக்கம். இப்போது பி.எஸ்ஸி. படித்து முடித்தாகிவிட்டது. ஆனாலும் அதே பழக்கம் தொடர்கிறது. கையில் புத்தக மில்லை. ஆனால் அந்த மேகங்கள்... கூட்டங் கூட்டமாய்ச் செல்கின்றன... சில பிரிந்து போகின்றன... கடைசியில் மறைந்து போகின் றன.. ஒவ்வொரு மேகத்தையும் மறையும்வரை பார்க்கவேண்டும் போல் தோன்றுகிறது.

சின்னவயதில் மழை நின்றவுடன் எதிர்த்த வீட்டு சரவணனுடன் மண்ணில் வீடுகட்டி விளையாடுவேன். ‘இப்படி தண்ணில விளையாடிக்கிட்டு, மண்ணுல வீடுகட்டிட்டு திரிஞ்சியானா...புண்வரும்... டாக்டர்கிட்ட கூட்டிக்கிட்டுப் போயி ஊசி போட்டாதான் ஆறும்.” என்று அம்மா கத்து வாள். இருந்தாலும் விட்டுவிட்டுப் போக மனமிருக்காது! சரவணன் தினசு தினுசாக வீடு கட்டு வான்... வீட்டைச் சுற்றி மதில்சுவர் எழுப்புவான்... வாசல் வைப்பான்... அவன் அம்மா அடித்தாலும் போகாதவன்... “அதோ பார் இருட்டிக்கிட்டு வருது... மேகமா வருது... இப்ப மழை வரும் பார்...” என்பான். கூடவே மழை வரும்... ஓடிவிடுவோம்...

மேகங்கள் குத்துக் குத்தாக வரும்... கார்த்திகை மாதங்களில் அவன் பட்டம் விடுவான். பெரும்பாலும் அவன் வௌவால் பட்டமே விடுவான். என்னைத்தான் பிடித் துக் கொள்ளச் சொல்லுவான். “பிடிச்சிக்க... தூக்கிப்பிடி.... காத்து வந்தவுடன் விடு... நான் சொல்லுவேன்... இப்ப விடு... ஆங்... விடு.”

சரவணன் பட்டத்தை இழுத்துக் கொண்டு ஓடுவான். பட்டம் ஆடி ஆடி மேலே உயரும். அப்போதெல்லாம் உயரத்திலே அந்த மேகங்கள் அடுக்கடுக் காய்ச் செல்வது தெரியும். கூடவே வாடைக் காற்றும்... அது ஒரு காலம்.

சரவணன் என்னோடு ஐந்தாம் வகுப்பு வரை படித்தான். நான் ஆறாவது வகுப்பு படிக்க வேறு பள்ளி போக வேண்டியிருந் தது. நான் சேர்ந்தேன். சரவணன் பம்பாய் போய்விட்டான். அவன் அம்மா எங்க அம்மாவிடம் அடிக்கடி வந்து சொல் வார்கள். “சரவணன் ஒரு ‘சமுசா கடையில் வேலைபார்க்கிறான்... கடிதம் போட்டான்... பணம் அனுப்புகிறேன் என்று எழுதியிருக் கிறான்..” இப்படி அடிக்கடி ஏதாவது சொல் வார்கள்... ஆனால் எனக்கு மட்டும்... அந்த மேகங்கள் மேலே செல்வது மட்டும் தெரிந் தது.

மேகங்கள் மெல்ல மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தன வானத்தில்... அதே கார்த்திகை மாதம்... சரவணன் இல்லாமல் மேகங்களோடு கழிந்து போயிற்று.


நான் ஏழாம் வகுப்பு படிக்கை யில் என்று நினைக்கிறேன். அப்போது நான் எங்கள் ஊரிலிருந்து சைக்கிளில்



செல்வது வழக்கம். பக்கத்து ஊரிலிருந்து இன்னும் ஒரு பையன் வருவான் சைக்கிளில். அவன் என்னைவிட கொஞ்சம் சிவப்பு. நாகர்கோயில் பக்கம் செட்டிக்குளம் என்னும் ஊர்ப் பையன். இங்கே அவனுடைய அத்தை வீட்டிலிருந்து படித்தான்.

சைக்கிளை வளைத்து நெளித்து ஓட்டுவான். முதலில் எனக்கு அவனைப் பிடிக்கவே இல்லை.

அப்போதெல்லாம் அந்த செட்டிக் குளத்துப் பையன் நிறைய கதை விடுவான். "புதுசா வந்திருக்கிற எல்லா மோகன் படத்தையும் பார்த்துட்டேன்" என்பான். எப்ப



''வாத்தியார் டிக்டேஷன் போட்டப்ப அவ தாரம்னு எழுதறதுக்குப் பதிலா அபராதம்னு எழுதிட்டேம்பா...!''

''அதனால?''

''எனக்கு ஐந்து ரூபா அவதாரம் போட்டுட்டார்!''

— பெ. கலாசாமி

பாத்தாலும் படம்!படம்!'னுதான் கதை விட்டுக்கிட்டே வருவான்.

ஏழாம் வகுப்பு இறுதியில் அவனும் ஊருக்குப் போய்விட்டான். அதோட சரி. அதற்குப் பிறகு நான் இன்னும் ஒருநாள் கூட அவனைப் பார்த்ததில்லை.

சிலநேரம் வீட்டுக்குப் பின்புறம் நான் பாடம் படிக்கையில் மேலே தெரியும் வானத்தைப் பார்த்தால்.... அந்த மேகங்கள் பிரிந்து போவது தென்பட்டால் அந்த செட்டிக் குளத்துப் பையன் ஞாபகம் வரும். சில நேரங்களில் சில பேர்.

ஹை ஸ்கூலில் படிக்கும்போதும் பையனுங்க எல்லாம் வாசல்ல நின்னு பார்த்துகிட்டே இருப்பாங்க... அவங்க பாஷையில் 'சைட்' அடிக்கிறதுன்னு அதுக்குப் பேரு. சில பிள்ளைங்க சண்டை போடும், அண்ணனைக் கூட்டிக்கிட்டு வரும், இல்லை வாத்தியார்கிட்ட போய்ச் சொல்லும். நான் எதையுமே கண்டுக்கிடறதில்லை.

ஆனா நிக்ஸன்னு ஒரு பையன் மட்டும் என்னிடம் ரொம்பவும் நெருங்கிப் பேசுவான். அதுவும் எப்படின்னா... நான் போற அதே சார்கிட்ட டியூஷன் படிக்க வருவான். பெரும்பாலும் அவன் என்ன பேசுவான்னா... "உங்க ஊருக்கு எப்படிப் போவாங்க? பஸ் உண்டா? வீட்டுலே போய் என்ன பண்ணுவே?'' இப்படியே கேட்டுக் கொண்டே இருப்பான். எனக்குப் பதில் சொல்ல வேண்டும் போல் தோன்றும். ஆனா நான் பதில் சொல்லவே மாட்டேன். அடிக்கடி ஒரு ஜோக் அடிப்பான், "அம்பாவுக்காவது ஒரு செல் உண்டு! கோகிலாவுக்கு ஒரு சொல்லும் கிடையாது?" நான் அதிகம் பேசாததை இப்படிக் கிண்டலடிப்பான். நிக்ஸன். ஜென்டில்மேன் டைப்!

காமர்ஸ் குருப்பில் இருந்த செல்வராஜோ ரொம்பவும் ஹீரோ டைப். ஸ்கூல் முடிஞ்சா என் பின்னேயே வந்து நோட்ஸ் வேணும் அது இதுன்னு தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருப்பான். ஒரு நாள் ஒரு துண்டு பேப்பரில் எதையோ கிறுக்கி என்னிடம் கொடுத்துவிட்டுப் போனான்.

அவன் கிறுக்கித் தந்த பேப்பரைப் படித்துப் பார்த்தேன். அழுதே விட்டேன். 'காதல்' அது இதுன்னு ஏதேதோ எழுதி இருந்தான். கீழே ஒரு ஆடுதன் படம் போட்டு அதில் அம்புக்குறியும் வரைந்திருந்தான். நான் ஓடிப்போய் ஹெட்மாஸ்டரிடம் அந்த பேப்பரைக் கொடுத்து விட்டேன்.

ஹெட்மாஸ்டர் அவனை ரொம்ப அடித்ததாகச் சொன்னாங்க. செல்வராஜோ ரொம்பவும் அவமானமாகப் போனதாக நினைத்திருக்க வேண்டும். அதன் பின் ஓரிரு நாள் வந்தான். பரீட்சைக்கெல்லாம் வரவில்லை. வருவதை நிறுத்திவிட்டான்.

எத்தனை மேகங்கள் வானத்தில் போகின்றன, வருகின்றன, ஒன்றை ஒன்று உரசிக் கொண்டு. எதுவுமே கடைசிவரை சேர்ந்து போவதுபோல் தெரியவில்லை.

கல்லூரி படிக்கையில் எனக்கு இரண்டாவது மாடியில் அறை. மேற்குத் தொடர்ச்சி மலை நாள் முழுதும் கண்ணுக்குள்ளேயே தெரியும். மேகங்கள் ஏன் மலைமேலேயே ஏறிக் கொண்டோ அல்லது உரசிக் கொண்டோ செல்கின்றன என்று நினைப்பேன்.

என்னிடம் எல்லா மாணவர்களுமே நன்றாகப் பேசிக் கொள்வார்கள். ஆனால் ஸ்ரீதர் என்ற மாணவன் மட்டும் சனி அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில் என் வீட்டுக்கு வருவான். கேட்டால் ஒரு பையனைப் பார்க்க வந்தேன். அப்படியே உன்னையும் பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன் என்பான்.

ஒரேயடியாக தொண தொணன்னு பேசிக்கிட்டே இருப்பான். அவனுடைய

அக்காவுக்கு மாப்பிள்ளை பார்க்கிற விஷயம். அவன் தங்கச்சி எட்டாம் வகுப்பில் மாதப் பரீட்சையில் பெயிலான விஷயம். அவங்க அம்மா செய்யும் முந்திரிக்கொத்துப் பண்டம் என்று சகலத்துக் கும் பேசிவிட்டு ரேவதியைத் தவிர வேறு ஒரு நடிகையையும் பிடிக்காது என்பான். சில காலங்கள். சில மனிதர்கள். இவ்வளவு நல்ல நண்பனாய் இருந்தவன் அவனு டைய அக்கா கல்யாணத்துக்கு அழைப்பிதழ் தரவில்லை. காரணம், நான் விஜயனிடம் அடிக்கடி ஏதாவது பேசிக் கொண்டிருக் கிறேனாம். அவனோடு பஸ்ஸில் வரும் லட்சுமியிடம் சொல்லி அனுப்பியிருக்கிறான்.

மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டி உரசி வருவதுபோல் தெரிந்த மேகம் விலகிப் போனது.

நான் கல்லூரியை முடித் ததும் அப்பா வெளிநாட்டி லிருந்து வந்திருந்தார். ஒரு மாப்பிள்ளையையும் பார்த் திருப்பதாகச் சொன்னார்.

''கோகிலா, மாப்பிள் ளைக்கு ஊர்லே இரண்டு தோட்டம் இருக்காம். நாகர் கோயிலில் ஒரு கடையும் இருக்காம். வாடகைக்கு விட்டிருக்கிறார்களாம். மாப் பிள்ளை வெளிநாட்டில் இருக் கிறார். போதாது... இரண்டு மாசம் லீவில் வருவார்... கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போயிடுவார்... எல்லாத்துக்கும் நீதான் பொறுப்பு... ராணி யம்மா!'' அம்மா சொல்லிவிட்டு அவசர குடுக்கைப்போல் எங்கோ விரைந்தாள்.

வீட்டின் பின்பக்கம் துணி துவைக்கும் கல்லில் உட்கார்ந் திருந்தேன். கையில் ஒன்றுமில்லை...

மேகங்கள் கூட்டங் கூட்டமாய்ச் செல்கின்றன. சில பிரிந்து போகின்றன. கடைசியில் மறைந்து போகின்றன. இன்னும் மேகங்கள் வருகின்றன. ஒவ்வொரு மேகத்தையும் மறையும் வரை பார்க்க வேண் டும் போல் தோன்றியது. ○

அம்மா பேசினால்...

சட்டமன்றத்தில் காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஜெயக்குமார் பேசியதை யொட்டி காண்டீனில் அதிமுக. எம்.எல்.ஏ. கடுப்பு கமெண்ட்ஸ் இது:

''என்னப்பா இந்த ஜெயக்குமார் இப்படிப் பேசுறாரு... இங்கிலீஸ்லேயே பொளந்து கட்டுறாரு... இது சட்டசபைக்குச் சரிப்படாது... இவரை டில்லி பார்லிமெண்ட்டுக்கு பேக் பண்ணிடுங்க.''

(தினமலர் — 13.3.02)



இதுவே 'அம்மா' ஆங்கிலத்தில் பேசியிருந்தால்... அதி.மு.க. எம்.எல்.ஏ. கமெண்ட்ஸ் இப்படி இருந் திருக்கும்:

''அண்ணே... இங்கிலீஸ்காரனே மூக்கிலே விரலை வெக்கிற அளவுக்கு அம்மா எப்பிடி கணீரென்று இங்கிலீஸ்லே பேசுறாங்க பாத்தியா? நேரம் போறதே தெரியல்லே. கேட்டுக்கிட்டே இருக்கலாம் போல இருக்கு. நீ வேண்ணா பாரேன்... அடுத்த சென்ட்ரல் கவர் மெண்ட்லே அம்மா பிரதமரா உக்காந்து இங்கிலீஸ்லே பொளந்து கட்டத்தான் போறாங்க..''

— சித்ரா கிருஷ்ணமூர்த்தி

இந்த வாரம் மும்பையைக் கலக்கிய செய்தி, பிரபல வைர வியாபாரியும் ஃபிலிம் பைனான்சியருமான பரத்ஷாவுக்கு, திடீர் 'பெயில்' கிடைத்த விஷயம்தான். கிட்டத்தட்ட பதினாறு மாதங்களாக காவலில் வைக்கப்பட்டிருந்த இவர் மீது, அண்டர் வர்ல்டுடன் நெருங்கிய தொடர்பிருந்ததாகக் குற்றங்கள் அடுக்கப்பட்டிருந்தன. எல்லாப் பெருந்தலைகளையும் போலவே, இவரும் இத்தனை நாட்களாக பாம்பே ஹாஸ்பிடலில், இருதயம், நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களுக்காக சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். ஏற்கெனவே ஒன்பது முறை பெயில் மறுக்கப்பட இவருக்கு, பத்தாவது முறையாக இப்போதும் நிராகரிக்கப்படும் என்ற எண்ணத்திலேயேதான் கோர்ட்டில் அனைவரும் காத்திருந்தனர். நீதிபதி 'பெயில் கிராண்டட்' என்றவுடன் இவர் பிள்ளைக்குக் கிட்டத்தட்ட ஹார்ட் அட்டாக்கே வந்துவிட்டது. தம்பிக்கு கண்களில் நயாகரா! முகம் தெரியாதவர்களெல்லாம் 'கன்ராஜுலேஷன்ஸ்' சொன்னார்கள். ஆகாசத்துக்கும் பூமிக்குமாக குதித்தது பாலிவுட் நண்பர் குழாம் ஏனிந்த திடீர் பரிவு என்று எல்லோருக்கும் ஒரே ஆச்சர்யம். ஆனானப்பட அல் கைதா கைதியான அஃப்ரோஜையே பெயிலில் விட்டுவிட்டார்கள் என்ற பச்சாதாபத்தினாலா? அல்லது அஃப்ரோஜ் விஷயத்தில்போல, இங்கேயும் போலீசார் குளறுபடிகள் செய்து விட்டனரா? யாருக்குத் தெரியும்?

'தெரியும்' என்று நாம் திட்டவட்டமாக நம்பிக் கொண்டிருக்கும் விஷயங்களே, சில சமயம் நமக்குத் தெரியாமல் போய் விடுகின்றனவே? உதாரணத்திற்கு, சேகர் கபூரின் மனைவி, பாடகி சுசித்ரா கிருஷ்ணமூர்த்தியை எடுத்துக் கொள்ளுங்கள். தன் கணவரும், ஆண்ட்ரு லாயிட் வெப்பரும் இணைந்து தயாரித்து, வரும் ஜூனில் லண்டனில் அரங்கேறவிருக்கும் 'பாம்பே ட்ரீம்ஸ்' என்ற இசை நாடகத்தில் தன்னைத்தான் கதாநாயகியாகப் போடப் போவதாக நம்பிக் கொண்டிருந்தார். சென்றமுறை, வெப்பர் இங்கே வந்திருந்த போது வேறு, சுசித்ராவின் பாடல்களை ஆஹா ஓஹோ என்று புகழ்ந்து தள்ளி, அவருடன் சிரித்துக் கொண்டு போஸ் எல்லாம் கொடுத்திருந்தாரே! இப்போது திடீரென்று சுசித்ராவை ஆடிஷனுக்குக் கூட அழைக்கவில்லையாம். சேகர் கபூரைக் கேட்டால், ''எனக்கும் பாம்பே ட்ரீம்ஸுக்கும் சம்பந்தமேயில்லையே? எதோ ஏ.ஆர். ரஹ்மானை இசையமைப்பதற்காக இவர்களுக்கு அறிமுகப்படுத்தியதோடு என் வேலை முடிந்துவிட்டது. நான் இப்போது என் படம் 'ஃபோர் ஃபெதர்ஸ்'ல் பிஸியாக இருக்கிறேன்''



• சுசித்ரா



• பரத்ஷா



• ப்ரீத்தி

மும்பை மசாலா



• சேகர் கபூர்

மேல் வலது கோடியில், சந்திர
சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் உரு
வப்படம் ஏற்கெனவே வைக்கப்பட்டிருந்தது.
வலது கோடியில் அண்மையில்தான் காந்தி மகாத்மா
வின் உருவப்பட திறப்பு விழா நடைபெற்றது. முதல்வர் விலாஸ்
ராவ் தேஷ்முக் திறந்து வைத்தார். படத்தை அதன் இருப்
பிடத்திலேயே வைத்துத் திறந்ததால், மேடையிலிருந்தபடியே
உயரத்திலிருந்த படத்தை அண்ணாந்து நோக்கியவாறே அவரும்,
கீழிருந்தபடியே மேலே பார்த்துக் கொண்டு ஆடியன்சும்
கைதட்டினர், வானுலகத்திலிருந்தே காந்தியை இறக்கி வந்த
பிரமிப்பை ஏற்படுத்தியது. தொடர்ந்த, ராஜராஜேஸ்வரி
நாட்டிய கலா மந்திரின் நடன நிகழ்ச்சி, நாம் மறந்தேவிட்ட
காந்தியத்தை, நம் கண்முன்னே அற்புதமாகப் படம்
பிடித்தது. குஜராத் எரிந்து கொண்டிருக்கையில், அவர்கள்
மறந்துவிட்ட காந்தித் தாத்தாவையும் அவர் தத்துவத்தை
யும் மும்பையில் உயிர்ப்பித்தது, மனசுக்குக் குளிர்ச்சியா
யிருந்தது.

என்கிறாராம். இத்தனைக்கும்,
சேகர் கபூர்தான் கோ-ப்ரொட்
யூசர், அவர்தான் பலரை ஆடிஷ
னுக்கு அனுப்புகிறார் என்ற செய்தி
கள், நம்பகமான வட்டாரங்களி
லிருந்து சுசித்ராவுக்கு வந்து கொண்டு

ஜில்... ஜில்... பேபி!

தானிருக்கின்றன. நாகரிகம் கருதி மௌனித்
திருக்கிறார். சுசித்ராவின் சில ஆல்பங்கள், எதிர்
பார்த்த அளவு 'ஓஹோ' இல்லை என்பதால்...
ஆண்ட்ருஸ் தயங்குவதையாவது ஒப்புக் கொள்ள
லாம்... சேகரேவா? ஹூம். கணவனும் மனைவியு
மாக இருந்தாலும், கலையும் காசும் வேறு வேறு
தானே?

குளிர்ச்சியான விஷயம்தான்.
அந்தக் குளுகுளுப்பை அதிகரிக்கிறது ப்ரீத்தி
ஜிண்டா அதற்கு மாடலாகப் போகிறார்
என்ற ஜில்ஜிலுப்பு. ஆம்! காத்ரெஜ்
ரெஃப்ரிஜிரேட்டர்களுக்கு இனி ப்ரீத்தி
தான் மாடலழகியாம். விரிலில்
ஜிலுஜிலுத்தவர். காட்பரீஸ் பெர்க்கில்
இனித்தவர், பெப்ஸியில் 'கூலா'யிருந்
தவர், இப்போது காத்ரெஜில் ஜிலு
ஜிலுக்கப் போகிறாராம். ஃப்ரிஜ்ஜுக்
காக இல்லாவிட்டாலும் இவர்
கன்னத்தில் விழும் குழியில்
எல்லோரும் விழுந்து விட மாட்
டார்களா என்ன? இன்று விளம்
பர உலகில், அதிகம் டிமாண்
டில் இருக்கும் கன்னம்...
ச்சீ... முகம் இவருடையது
தானாம்.

வேறு வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள்தான்.
ஆயினும் நம் மனங்களில் வேரூன்றியவர்கள்.
வேறுவேறாகத் தம்மைப் பார்த்துக் கொண்டு வெட்டி
வீழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களின் வேற்றுமைகளை
ஒடுக்கி, ஒற்றுமைப்படுத்தும் பணியில் ஒன்றியவர்கள்.
மறைந்த மாமணிகள் 'காஞ்சிப் பெரியவரையும்' 'காந்தி
யடிகளையும்' தான் சொல்கிறோம். இந்த
இருவரையும் ஒரே கூரைக் கீழ் நிறுத்தி
விட்டார்களே ஷண்முகானந்
தா க்காரர்கள் !
ஹா லி ன்


• ஜெயஸ்ரீ ராஜ்

அமெரிக்காவிலிருந்து கப்பலில் வந்திருக்கும் ஆபத்து!

"சில வாரங்களுக்கு முன்பு, அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட, எம்.வி. போர்ஸ்னா என்ற சரக்குக் கப்பல், சென்னை துறைமுகத்தில் வந்து நங்கூரமிட்டது. அதில் ஏற்றிவரப்பட்ட சரக்கு என்ன தெரியுமா? கடந்த செப்டம்பர் மாதம் உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்டபோது, எரிந்து மிஞ்சிய இரும்புதான்! மறுபடியும் பயன்படுத்துவதற்காக, இந்தியாவில் இறக்குமதியாகி இருக்கும் இந்த இரும்பு சரக்கு மிகவும் ஆபத்தானது. அதை, இந்திய மண்ணில் இறக்குமதி செய்வதற்கு அனுமதித்திருக்கவே கூடாது" என்று எச்சரிக்கிறார் ராஜேஷ் ரங்கராஜன். சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காக இயங்கி வரும் 'டாக்ஸிக்ஸ் லிங்க்' என்ற தன்னார்வ சேவை அமைப்பின் சென்னை கிளையின் ஒருங்கிணைப்பாளர் இவர்.

இவர் தெரிவிக்கும் தகவல்கள் அதிர்ச்சியூட்டுகின்றன: உலக வர்த்தக மையம்மீது விமானங்கள் மோதி, தகர்க்கப்பட்டபோது, சுமார் ஒரு இலட்சம் லிட்டர் அளவுக்கு விமான எரிபொருள் தீப்பிடித்து எரிந்துள்ளது. அதிகபட்ச உஷ்ணத்தில் இது எரிந்தபோது, அக்கட்டடத்தில் இயங்கி வந்த பல்வேறு அலுவலகங்களிலும் இருந்த பல்ப்கள். டியூப்லைட்கள் இதர மின்சார சாமான்கள், கம்ப்யூட்டர் உள்ளிட்ட பலதரப்பட்ட பிளாஸ்டிக் உபகரணங்கள் அனைத்தும் தீயில் எரிந்து பஸ்மமாயின.


மிக அதிக உஷ்ணத்தில், அவை எரிகிறபோது வெளிப்படும் டயாக்ஸின், பாலி குளோரினேடட் பை வினைல் என்று பல்வேறு நச்சுக்கள், அந்த இரும்புடன் கலந்து வேதிவினை புரிந்திருக்கும். இதனால் பாதிக்கப்பட்ட இரும்பு, பரிசோதனைக் கூடத்தில், நுணுக்கமாய்ப் பரிசோதிக்கப்பட்டு, 'ஆபத்தில்லாதது' என்று விஞ்ஞானிகள் சான்றுரைத்த பின்னரே, மறு சுழற்சிக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். நியூயார்க்கிலிருந்து வந்து இறங்கியுள்ள இரும்பு சரக்குக்கு அமெரிக்க அரசு, நச்சுத்தன்மை இல்லாதது; ஆரோக்கியத்துக்குச் கேடு விளைவிக்காதது என்று சர்ட்டிபிகேட் கொடுத்ததற்குப் பிற்பாடுதான் அமெரிக்காவிலிருந்தே ஏற்றுமதி செய்ய முடியும். ஆனால், நியூயார்க் மெட்டல் மேனேஜ்மென்ட் என்ற அமெரிக்க நிறுவனம், இத்தகைய பரிசோதனைகளைச் செய்து, சான்றிதழ் பெறாமலேயே இந்தியா உட்பட உலக நாடுகள் சிலவற்றுக்கு ஏற்றுமதி செய்துவிட்டது.



• ராஜேஷ் ரங்கராஜன்

சுற்றுச் சூழலுக்குக் கேடு விளைவிக்கும் இந்த இரும்புச் சரக்கு, தற்போது மணலியில் ஓர் ஏற்றுமதி இறக்குமதி கம்பெனியின் கிடங்கில் தூங்கிக் கொண்டிருக்கிறது.

"சரி! இந்த



இரும்பு பழசு; பிரச்னை புதுசு!

இரும்பை நாம் பயன்படுத்துவதால் என்ன கேடுகள் ஏற்படும்?"

"தொழிற்சாலையில், இந்தப் பழைய இரும்பைப் பயன்படுத்தும்போது மிக அதிகமான அளவில் நச்சுவாயுக்கள் வெளிப்பட்டு சுற்றுச் சூழலைப் பெருமளவு பாதிக்கும். இந்தப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு இந்த நச்சு வாயுக்கள் கடுமையாக உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்" என்று எச்சரிக்கிறார் ராஜேஷ்.

இதுபோன்று, இரட்டை கோபுரத்துப் பழைய இரும்பு, இந்தியாவின் மேற்கு கடலோரத்தில் உள்ள இன்னும் இரண்டு துறைமுகங்களிலும் வந்து இறங்கியுள்ளன. அதுமட்டுமின்றி இன்னும் சில நாடுகளும் இந்தப் பழைய இரும்பை இறக்குமதி செய்துள்ளன.

இது ஆபத்தானது என்று தெரிந்தும், மற்ற நாடுகளுக்கு அமெரிக்கா ஏன் ஏற்றுமதி செய்கிறது? அமெரிக்காவில், சுற்றுச் சூழல் விதிகள் கடுமையானவை. அதனால், ஏமாந்த, மூன்றாம் உலக நாடுகள் தலையில் கட்டி விடுகிறது அமெரிக்கா!

சந்திப்பு :
எஸ்.சந்திர மௌலி

வள்ளி மணவாளப் பெருமாளே

இன்று திருப்புகழ், கச்சேரி மேடைகளில் ஆர்வத்தோடு பாடப் பெறுகிறது. திருப்புகழ் பாக்களடங்கிய தனிக் கச்சேரிகள் கூட நடக்கின்றன. சென்னை, வடபழனி ஆண்டவர் கோவிலில் ஆண்டுதோறும் திருப்புகழ் இசை விழாவே நடக்கிறது. பிரவசன மேடைகளிலும் கலை – இலக்கிய விழாக்களிலும் திருப்புகழ் விளக்கமும் ஆய்வுகளும் நிகழ்த்தப்பட்டு தத்துவ முத்துக்களும் மொழி நயங்களும் வரிசைப்படுத்தப்படுகின்றன.

அருணகிரிநாதர் அருளிய பாக்கள் இந்த கீர்த்தியை அடைவதற்குக் காரணமாய் இருந்தவர் வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள். வள்ளிமலை என்று சொன்னதுமே 'திருப்புகழ்சுவாமிகள்' என்ற அடைமொழியைப் பெற்ற இவர் ஞாபகம்தான் வரும்!

வள்ளிமலை திருத்தல வரலாறைப் பார்க்கும் முன் சுவாமிகளின் அதிசய வாழ்க்கை வரலாறைச் சற்றுப் பார்ப்போம்.

சிதம்பர ஐயர் என்பவரது மகனாகப் பிறந்த சுவாமிகளுக்குப் பூர்வாசிரமப் பெயர் அர்த்தநாரி. திருச்செங்கோடு அர்த்தநாரீசுவர பிரானை வேண்டிப் பெற்ற பிள்ளை என்பதால் அப்பெயர். சமையல் பணியாளராக வாழ்க்கையைத் தொடங்கி ஒரு சிறுவனிடம் தமிழ் பயின்று திருப்புகழ் பாக்களுடன் உறவாட ஆரம்பித்தார். திருவண்ணாமலை சென்றபோது ரமண மஹரிஷியின் அனுக்கிரஹமும் சேஷாத்ரி சுவாமிகளின் வழிகாட்டலும் பெற்றவர். அந்த வழிகாட்டல்படி வள்ளிமலை சென்று வள்ளியின் அருளால் இசை ஞானமும் பெற்று திருப்புகழ் பாக்களைப் பாட ஆரம்பித்தார். அந்தக் காலத்திலேயே திருப்புகழ் கான சபைகளை நாடு முழுவதும் நிறுவினார் இந்த எளியவர் என்று அறிய பிரமிப்பு ஏற்படுகிறது.


காம விஷயங்களைச் சொல்வதாகக் கருதி அதுநாள் வரை திருப்புகழை ஒதுக்கி வைத்திருந்தார்கள். ஆனால், உண்மையில் காமத்தின் கேடுகளையே திருப்புகழ் பாக்கள் விளக்கின. அதிலும் சமுதாய அவலத்தைத் தனது சொந்த அவலம்போல் ஏற்றுப் பாடும் மரபில்தான்



• சரவண பொய்கை...



• ஸ்ரீ வள்ளி





• வள்ளிமலை கோயில்...

அருணகிரியார் அவ்வாறு பாடியிருக்க வேண்டும். அவர் வாழ்ந்த கால கட்டத்தில் ஆண்ட அரசர்களின் போக்ய வாழ்க்கையை பிரபுக்கள் முன்னுதாரணமாகக் கொள்ள ஆரம்பித்தார்கள். அவர்கள் வாழ்வைப் பார்த்து எளிய மக்களும் திசைகெட்டுத் திரிய ஆரம்பித்தார்கள். இதைக் கண்டு பொறாமல்தான் அருணகிரிநாதர் திருப்புகழில் சில விவரங்களைப் பாடியிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்களிடையே ஒரு கருத்து உண்டு.

திருப்புகழின் பக்தி நெறியை உணர்ந்து, வேதாந்த கருத்தைத் தெளிந்து அதனை உலகம் போற்றும் சமய இலக்கியமாகவும் இசை வழிபாடாகவும் ஆக்கினார் சுவாமிகள். இத்தனைக்கும் இவர் அகண்ட கல்வியறிவோ ஆழ்ந்த மொழிப்புலமையோ உடையவர் அல்ல. எனினும் திருப்புகழ் ஒலிக்கு மந்திராக்ஷரங்களின் வலிமை உண்டு என்று வகுத்துக் கூறுகிற அளவுக்கு அதில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

வள்ளிமலை வரலாறுக்கு வருவோம்...

இத்தலத்தில்தான் முருகன் வள்ளிக் குறத்தியை மணம் செய்து கொண்டான் என்கிறது புராணம். இந்தப் பெருமைக்குப் போட்டி போடுகிற வேறு சில ஊர்களும் இருந்தாலும் அதிக வாக்குகள் பெற்று ஜெயிப்பது வள்ளி மலைதான்! இங்குதான் வள்ளி மஞ்சள் அரைத்துக் குளித்தாள்; இந்தச் சுனையில்தான் தேனும் தினைமாவும் கலந்து உண்டனர் கந்தனும் வள்ளியும்; இதோ – காலடிச் சுவடுகள் – இவை அந்த தெய்வ தம்பதியுடையவை; அதோ – அங்கே ஒரு குன்று தெரிகிறதே, அதுதான் கணேச

குருஜி ஏ.எஸ். ராகவன்

கிரி. அவ்விடத்தில்தான் வள்ளியைப் பயமுறுத்த விநாயகர் யானை உருவெடுத்து வந்தார்; மிரண்டு போன வள்ளி, கிழத் தோற்றத்தில் இருந்த கந்தனை நெருங்கி இறுக்கமாகப் பற்றிக் கொண்டாள் – இப்படி. வள்ளிமலையில் திரும்பிய திசைகளெல்லாம் கதைகள்!

இந்த வள்ளி ஒரு வகையில் முருகனுக்கு மாமன் மகள்! திருமாலின் இரு கண்களிலிருந்துப் தோன்றிய இரு பெண்கள் சுந்தரவல்லி, அமிர்தவல்லி. இவ்விருவருமே முருகனை அடைய வேண்டும் என்று தவமிருந்தனர். முருகனும் அவர்களுடைய தவத்துக்கு இறங்கி, தக்க சமயத்தில் வந்து ஆட்கொள்வதாக வாக்களித்தான். அமிர்தவல்லி, இந்திரன் மகள் தேவ சேனையாகப் பிறந்து முருகனைத் திருப்பரங் குன்றத்தில் மணந்தாள். அந்த வல்லிதான் வள்ளி மலையில் வேடனாகப் பிறந்த வள்ளி சுந்தரி!

வள்ளி படர்கின்ற வள்ளிமலை சென்று
வள்ளியை மணந்த பெருமானே'

என்று அருணகிரிநாதர் பாடல் பிரமாணமாக இருக்கிறது.

வள்ளி – தெய்வயானையரை முருகன் மணந்தது இருதார மணத்துக்கு அங்கீகாரம் தெரிவிப்பதாக நவீன குதர்க்கங்கள் எழுந்துள்ளன. கடவுளர் கதைகளின் பின் உள்ள தத்துவங்கள்தான் முக்கியமானவை. – மாசு மருவற்ற அடியவர்களாயிருப்பின், அவர்கள் இருப்பிடத்துக்கே தேடிச் சென்று திருவிளையாடல் புரிந்து ஆட்கொள்வான் இறைவன் என்பதற்கான அழகான உதாரணம் வள்ளி – முருகன் திருமண வரலாறு. அவ்வாறு அவன் தேடி வந்துள்ளதை உணராமல், மாயையில் கட்டுண்டு மறுத்து, மோடி செய்யும் அசட்டு பக்தனின் சித்திரிப்புத்தான் வள்ளி! முருகனிடத்தில் அவள் கொண்ட அன்பின் மிகுதியே அவள் கண்களை மறைக்கிறது! முருகனோ அந்த நிறையன்பின் உயர்வுக்குப் பணியும் தெய்வாம்சத்தின் உருவகம். வள்ளியின் அடி பணிந்து கெஞ்சவும் அவன் தயார்!



• வள்ளிமலை சுவாமிகள்

தெய்வீகக் காதல் வரலாற்றுத் தலமான வள்ளிமலை அரக்கோணத்திலிருந்து நாற்பத்தைந்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அடிவாரத்திலும் மலை மேலும் முருகன் கோயில்கள் இருக்கின்றன. சரவண பொய்கையைக் கடந்து அடிவாரக் கோயிலை அடைகிறோம்.

'மயிலொடு இருபுறம் இருமாதர் மருவ' ஆறுமுகப் பெருமான் நிற்கிறான்! கிழக்கு நோக்கிய பிராகாரம்.

வணங்கித் துதித்து விட்டு படிகள் ஏறி மலைச் சிகரத்துக் கோயிலுக்குப் போகிறோம். ஒரே பாறையில் படிகள் அமைந்துள்ளன. குடைவரைக் கோயில். கடைசிப் படியைத் தொடுகையில் இடது பக்கம் திறந்த வெளியில் துவஜஸ்தம்பம். வலப்புறம் பாறைகள் தொடர்ந்து நீடிக்கின்றன. துவஜஸ்தம்பத்தை வலம் வந்து குடைவரை மண்டபத்தை அடைகிறோம். அங்கே... இரு கைகளிலும் கவண், கல் ஏந்தி, தினைப் புனம் காக்கும் கோலத்தில் வள்ளி நம்மை வரவேற்கிறாள் _ பாறைச் சுவரில் செதுக்கப் பட்ட சிற்பச் சித்திரமாக. தொடர்ந்து, விநாயகர், அருணகிரியார்; வீரபத்ரர், நவவீரர்கள் என்று தரிசித்துக் கொண்டே போகிறோம். ஒரு சிறு மண்டபத்தில் காசி விச்வநாதர், விசாலாக்ஷி இருக்கின்றனர், சற்றே மேல் நிலை – இரு படிகள் ஏறினால் மூலஸ்தானம். ஒரு திருமுகமும் இரு கரங்களும் கொண்டு,

நின்ற திருக்கோலத்தில் அபயவரதமுடன் தென்திசை நோக்கி வள்ளி – தேவ சேனையுடன் வீற்றிருக்கிறான். 'வள்ளியை மணம் புணர வந்த முகம்' தனிப் பெருமிதத்துடன் ஜொலிப்பதாக நம் சிந்தைக்கும் கற்பனைக்கும் தோன்றுகிறது.

சன்னதிக்கு நேர் எதிரே ஒரு சதுர ஜன்னல் போன்ற அமைப்பு காணப்படுகிறது. அதன் பின்னே ஒரு குகை இருக்கிறது என்கிறார்கள். அங்குதான் முருகன், வள்ளியைக் களவு கொண்டு போனான் என்கிறார்கள்.

மலையின் அமைப்பே ஓம்கார வடிவமாக இருக்கிறது. வலம் வந்து வலதுபுறம் பிரியும் பாதை வழியே சென்றால், எல்லோரும் திருப்புகழ் பாடவேண்டும் என்று பாடுபட்ட வள்ளிமலை சுவாமிகளின் ஆசிரமத்தை அடையலாம். அவரது திருவுருவச் சிலை, சமாதி இரண்டும் உள்ளன.

அருகேயுள்ள குகையில், முருகன் வள்ளியை கந்தர்வ மணம் செய்து கொண்டதாகச் சொல்கிறார்கள். சுற்றிலும் வேறு பல குகைகள் இருக்கின்றன.

நான்கு கால பூஜைகளுடன் கோலாகலமாக இருக்கிறது கோயில். மலர்க்காவடி பிரார்த்தனை இத் தலத்தில் விசேஷம். தமிழ்ப் புத்தாண்டு தோறும் திருப்புகழ் திருப்படி விழா நடைபெறுகிறது. வள்ளிக்கு மஞ்சள் காப்பு சார்த்துவதும், முருகன் சன்னிதியில் சடாரி சாதித்து தீர்த்தம் வழங்குவதும் தனிச் சிறப்புகள்.

'வேடர்பறி' என்ற விழா இக்கோயிலில் மலையடிவாரத்தில் நடைபெறுகிறது. மயில் வீரன் முருகன் குதிரை வீரனாக மாறுகிறான்! வள்ளியைத் தன் குதிரை வாகனத்தில் ஏற்றி அபகரித்துச் சென்று அன்புச் சிறைக்குள் பூட்டி வைக்கிறான்! சுற்றியுள்ள மக்கள் வேடர்குலத்தவராக மாறி, முருகனிடமிருந்து வள்ளியை மீட்கப் போர் செய்து தோற்றுப் போகிறார்கள்!

பிறகு, தாங்களே தேனும் தினைமாவும் புத்தாடைகளும் ஸ்ரீதனமாக்கி இருவருக்கும் மணம் முடித்து வைக்கிறார்கள்.

இந்த உலகியல் நாடகங்களுக்கெல்லாம் உவப்புடன் தன்னை உட்படுத்திக் கொண்டு, உலகாளும் முருகன் மாறாத சிரிப்புடன் காட்சி தருவது பார்த்து பார்த்து வியக்கத் தக்க காட்சி.

இந்தத் திருமணம் எதை உணர்த்துகிறது என்று அருணகிரிநாதர் மிக அழகாகச் சொல்லிவைத்திருக்கிறார்:

"இன்னங் குறித்தடி யேன்செவி நீயன்று
கேட்கச்சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது
கோடுகுழல்
சின்னங் குறிக்க குறிஞ்சிக் கிழவர்
சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண
முயன்றவனே."

'யாரொருவர் யான், எனது எனும் ஆணவ நிலை அற்று என்னை வழிபடுகிறார்களோ, அவர்களிடம் நான் வலியச் சென்று அவர்களுக்குக் குற்றேவல் புரிந்து என்னிடம் சேர்த்துக் கொள்வேன்" என்று எனக்கு ரகசியமாக உபதேசித்ததை இந்தக் குறிஞ்சிநில ஊராகிய வள்ளிமலை பகிரங்கமாக வெளிப்படுத்தி விட்டது!'

புலவர் சு. சுந்தரேசன் என்பவர் பாடியுள்ள வள்ளிமலை திருமுருகன் பிள்ளைத் தமிழ், வள்ளிக்குக் கிடைத்த நிலைவாழ்வு நமக்கும் கிடைக்க வேண்டும் என்று எத்தனை எளிமையுடன் பிரார்த்திக்கிறது பாருங்கள்:

நிலையான வாழ்வினை நிதியான
பேற்றினை
நிறைவான தன்மனத்தை
நிலமீது பெரியரைப் போற்றிடும்
பண்பினை
நெறியான நல்லொழுக்கை
உலையாத பொருளினை உறுதியாம்
அறிவினை
உயர்வான ஞானமதை
உத்தம பக்தியை உன்கழல் நிழலினை
ஒருமையின் துதிப்பவர்க்கே
சந்ததம் அளித்திடும் சண்முகக்
கடவுளே
தனிப்பெருங் கருணையமுதே
சிலையான வன்மனச் சூரனைச்
சிதைத்தவா
செங்கீரை யாடியருளே
திருமகள் செல்விவளர் வள்ளிமலை
முருகனே
செங்கீரை யாடியருளே.

டேக் இட் ஈஸி பாலிசி!



ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் டிசம்பர் 2001 வரை 1500 பேர் ஒரு கோடி ரூபாய்க்கான பாலிசிகளை எடுத்திருக்கிறார்கள். இவர்களில் பிரபல கிரிக்கெட் வீரரான கங்கூலியும் ஒருவர்.



ஒரு கோடி ரூபாய்க்கான பாலிசியை முதலில் எடுத்தவர் இளையராஜா.

அரைக் கோடி ரூபாய்க்கு மேல் பாலிசி எடுத்தவர்கள் பம்பாய் நகரத்தில்தான் அதிகமாம். ஒரு வைர வியாபாரி இருபது கோடி ரூபாய்க்கு பாலிசி எடுத்திருக்கிறார்!

'கோடி ரூபாய் பாலிசி' எடுப்பது தென் மாநிலங்களிலும் முன்னேறிக்கொண்டிருக்கிறது. சென்னையைச் சேர்ந்த தங்கமாளிகையின் முதலாளி ராஜேந்திரன் பதின்மூன்று கோடி ரூபாய்க்கான ஜீவன் ஸ்ருதி பாலிசியை எடுத்திருக்கிறாராம்.

பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஒரு வைர வியாபாரி ஐம்பது கோடி ரூபாய்க்கு இன்ஷுரன்ஸ் செய்திருக்கிறாராம். பிரபுதேவா மூன்று கோடிக்கான பாலிசியை எடுத்திருக்கிறாராம்.

அண்மையில் முப்பது பாலிசிதாரர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் ஒரு கோடி ரூபாய்க்கான பாலிசிக்காக மருத்துவ பரிசோதனை ஒரே வாரத்தில் நடத்தது சென்னையில்.



2001ம் ஆண்டில் தமிழ்நாட்டில் எட்டும் கேரளாவில் இரண்டுமாக, கோடி ரூபாய் பாலிசிகள் எடுக்கப்பட்டன. ஆனால் இந்த நடப்பு ஆண்டில் சென்னையில் ஒரு கிளையில் மட்டும் ஐந்து ஒரு கோடி ரூபாய் பாலிசிகளைப் பூர்த்தி செய்திருக்கிறார்களாம்!

மும்பையில் இப்போது, ஐம்பது லட்ச ரூபாய்க்கான பாலிசிகள் இரண்டாயிரம் நிலுவையில் உள்ளதாம்.

வருமான வரி இலாகா என்ன செய்து கொண்டிருக்கிறது?

நன்றி: **'எகனாமிக் டைம்ஸ்'**

- என். பங்கஜம்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

வீட்டின் அழகு **கதவில்** தெரியும் !


Now Flat Buyers insist on

MAYURAM

TIMBER DOORS



because



Contact:

MAYURAM TIMBER & GENERAL TRADING CORPN.

H.O.: 83, G.S.T.Road, Chennai - 45. ☎:236 8297/238 1281.

Showroom: 13, Rameswaram Road, T.Nagar, Chennai - 600 017. ☎: 434 5207

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka